REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK
2024 ஜனவரி 22 திங்கட்கிழமை
தினகரன்
THINAKARAN
வரு. 92 இல. 19
Monday 22, January, 2024
16பக்கங்கள்
50/-

விமர்சிப்போர் வியக்குமளவுக்கு அரசின் பயணம்

## பொருளாதார மறுசீரமைப்பின் பலன்கள் நிச்சயம் கிடைக்கும்



எதிர்கட்சிகள் எவ்வகையான விமர்சனங்களை முன்வைத்தாலும், அரசாங்கம் முன்னெடுத்துவரும் புதிய பொருளாதார மறுசீரமைப்புக்களின் 06

# உலகளாவிய நிதி கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டும்

## அவசரத் தேவை இதுவென்றும் ஜனாதிபதி வலியுறுத்து



நவீன சர்வதேச கடன் தீர்வு மாதிரி தற்காலத்துக்கு பொருத்தமானதாக இல்லையென்றும் தெரிவிப்பு

வளர்ந்து வரும் நாடுகளுக்கே அநீதி இழைக்கப்படுவதாக G77 மற்றும் சீனாவின் 03ஆவது தென்துருவ மாநாட்டில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் வலியுறுத்தல்

உலக நிதிக் கட்டமைப்பை மறுசீரமைக்க வேண்டிய அவசரத் தேவை முன்னெப்போதையும் விட, தற்போது எழுந்துள்ளதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தினார்.

பெரிஸ் கழகம் மற்றும் லண்டன் கழகம் என்பவற்றினால் உலகளாவிய கடன் தீர்வு தொடர்பில் ஆதிக்கம் செலுத்தும் உலகுக்கே நவீன சர்வதேச கடன் தீர்வு மாதிரி உகந்தது என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். இன்று, உலகளாவிய கடன் மற்றும் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் கடன், பெரிஸ் கிளப்பில் அங்கத்துவம் அல்லாத கடன் வழங்குநர்கள் மற்றும் சர்வதேச பிணைமுறிச் சந்தை ஆகிய தரப்புக்களால் கட்டுப்படுத்தப்படுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

தற்போதுள்ள நிதி வளங்களை கடன் சேவையாகப் பெற்றுக்கொள்ளும் போது, அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கு அத்தியாவசியமான பொதுச் சேவைகள் மற்றும் மனித அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு தேவையான செலவுகளுக்கு நிதி வசதிகளை வழங்க முடியாமல் போவதுடன், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கும் அது, பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

உகண்டாவின் கம்பாலா நகரில் நேற்று (21) ஆரம்பமான G 77 மற்றும் சீனா 03ஆவது தென்துருவ நாடுகளின் உச்சி மாநாட்டில் (3rd South Summit of the Group of G 77 & China) உரையாற்றும் போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இதனைக் குறிப்பிட்டார்.

ஐக்கிய நாடுகள் சபையில் அங்கம் வகிக்கும் வளர்ந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய கூட்டணியாக, G77 ஆனது உலகளாவிய தென்துருவ நாடுகளுக்கு தமது கூட்டுப் பொருளாதார நலன்களை வெளிப்படுத்தவும் மேம்படுத்தவும், நாடுகளுக்கு இடையே 06



கம்பாலா நகரில் நேற்று (21) ஆரம்பமான "G77 மற்றும் சீனா" 03 ஆவது தென்துருவ மாநாட்டுடன் இணைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரஸுடன் சந்தித்து கலந்துரையாடினார். இதன்போது வெளிவிவகார அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரியும் உடனிருந்தார்.

## இலங்கை தமிழரசு கட்சி தலைவர் தேர்தலில் சுமந்திரன் MP தோல்வி

## புதிய தலைவராக சிறிதரன் MP தெரிவு

அன்புவழிபுரம் தினகரன் நிருபர்

சுமந்திரன் 137 வாக்குகள், சிறிதரன் 184 வாக்குகள்





இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவு செய்யப்பட்டார். திருகோணமலை நகர மண்டபத்தில் நேற்று (21) நடைபெற்ற இரகசிய வாக்களிப்பில் 327 பேர் கலந்து கொண்டு வாக்களித்தனர்.

தலைவர் தெரிவை, இம்முறை உள்ளக ஜனநாயக அடிப்படையில் தெரிவு செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தமையால் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சிவஞானம் சிறிதரன் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன் ஆகியோர் போட்டியிட்டனர். இந்த தெரிவுக்காக வடக்கு கிழக்கு உட்பட கொழும்பு மாவட்டத்தில் இருந்து மாவட்ட ரீதியான பொதுச் சபை உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தலைமையில் 06

## ஹற்றன் டன்பார் மைதானத்தில் தேசிய தைப்பொங்கல் விழா



மலையக வரலாற்றில் முதன்முறையாக, தேசிய தைப்பொங்கல் விழா, இ.தொ.கா. பொதுச் செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஹற்றன் டன்பார் மைதானத்தில் நடைபெற்றது. நிகழ்வுக்கு அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, கிழக்கு ஆளுநர் செந்தில் தொண்டமான், மருதுபாண்டி ரமேஸ்வரன் ஆகியோர் வரவேற்கப்பட்டபோது.

(படம்: ஹற்றன் சுழற்சி நிருபர்)

## VAT விலக்களிக்கப்பட்ட பொருட்களை ஒரே கூரையின் கீழ் விற்பதற்கு ஏற்பாடு

நுகர்வோருக்கு சலுகைகள் வழங்க உச்சளவில் கவனம்



நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுசரணையுடன் போக்குவரத்து அமைச்சு, வற்வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட 46 வகையான அத்தியாவசிய பொருட்களை ஒரே இடத்தில் பெற்றுக் கொள்வதற்கான விற்பனை நிலையங்களின் வலையமைப்பை உருவாக்குவதற்கு நடவடிக்கை எடுத்து 06



03

சுமார் 163 கோடி ரூபா பெறுமதி

## 65 கிலோ ஹெரோயினுடன் ஆழ்கடலில்11 பேர் அதிரடிக் கைது

## சிவில் உடையில் வாகன சோதனையிலீடுபட தடை

பொலிஸாருக்கு புதிய அறிவுறுத்தல்



சிவில் உடையில் கடமையாற்றும்போது வாகனங்களை சோதனைக்காக நிறுத்த வேண்டாமென,பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. பதில் பொலிஸ் மாஅதிபர் தேசபந்து தென்னகோன்

இந்த புதிய அறிவுறுத்தலை வழங்கியுள்ளதாக தெரிய வருகிறது. இப்புதிய அறிவுறுத்தல் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் கடந்த (19) அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். நாரம்மல பிரதேசத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவரின் துப்பாக்கிச் சூட்டில், சாரதி 06

ஜனாதிபதியின் உகண்டா விஜயம்

## ஆபிரிக்காவுடனான உறவை பலப்படுத்த பங்களித்துள்ளது



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் 1.3 பில்லியன் மக்கள் வசிக்கும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளை பலப்படுத்தியுள்ளதுடன், துரித அபிவிருத்திக்கும் வழிகோலியுள்ளதாகவும் அமைச்சர் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் இலங்கை வெளிவிவகார கொள்கைகளின் போது இதுவரையில் கருத்தில்கொள்ளப்படவில்லை எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டினார். "ஆபிரிக்காவைப் பார்ப்போம்" (Look Africa) என்ற ஜனாதிபதியின் எண்ணக்கருவுக்கு 06

அரச ஊழியருக்கான சம்பள உயர்வு

## ரூ. 5,000 வாழ்வாதார நிலுவை 2025 மார்ச்சில் வழங்க ஏற்பாடு



இந்த வருடம் மார்ச் மாதம் வரையான 5,000 ரூபா வாழ்வாதார கொடுப்பனவுக்கான நிலுவைத் தொகை அடுத்த வருடம் (2025) ஜனவரி மாதம் முதல் மார்ச் மாதம் வரை வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன அனைத்து அரச நிறுவனங்களுக்கும் சுற்றறிக்கை மூலம் இதனை அறிவித்துள்ளார்.

வரவு செலவுத் திட்டத்தில் 7,800 ரூபா வாழ்க்கைச் செலவுக் 06

## நுண்நிதிக் கடன்துறை ஒழுங்குபடுத்தப்படும்



இவ்வருடத்தின் முதல் காலாண்டில் நாட்டின் நுண்நிதிக் கடன்துறை ஒழுங்குபடுத்தப்படுமென பதில் நிதி அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.அவர் மேலும் கூறுகையில், நுண்நிதிக் கடன் துறையில் 06

## வாக்காளர் இடாப்பில் 1,00,000 இளைஞர்கள் பதிவாகவில்லை




நாட்டில் 18 வயதை பூர்த்தியடைந்த 1,00,000 இளைஞர்கள் வாக்காளர் இடாப்பில் பதிவு செய்யப்படவில்லையென, தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2023 வாக்காளர் பட்டியல் தயாரிப்பின் போது இவ்விடயம் தெரியவந்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆணையாளர் நாயகம் 06

## நிகழ்நிலை பாதுகாப்பு சட்டமூலத்தை ஒத்திவைக்கவும்

சபாநாயகருக்கு சஜித் கடிதம்



பாராளுமன்றத்தில் அடுத்த வாரம் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் மீதான விவாதத்தை, ஒத்திவைக்குமாறு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவிடம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை 06

## சுதந்திர தின நிகழ்வில் சிறப்பு விருந்தினராக தாய்லாந்து பிரதமர்


சுதந்திர வர்த்தக ஒப்பந்தமும் கைச்சாத்து



நாட்டின் 76ஆவது சுதந்திர தின நிகழ்வில், சிறப்பு விருந்தினராக தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் கலந்துகொள்ளவுள்ளார். எதிர்வரும் பெப்ரவரி மாதம் 04ஆம் திகதி தேசிய சுதந்திர தின நிகழ்வுகளில் பங்கேங்கும் அவர், 03 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சுவிஸ் மற்றும் உகண்டா செல்வதற்கு முன்னர் சில முக்கிய 06

## புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை

குற்றவாளிகளின் மேன்முறையீடு இன்று விசாரணை



யாழ். புங்குடுதீவு வித்தியா கொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளவர்களின் மேன்முறையீடுகள், இன்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளன.

இந்த மேன்முறையீட்டு மனுக்கள் நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, அச்சல வெங்கப்புலி மற்றும் ஷிரான் குணரத்ன ஆகிய மூவரடங்கிய உயர் 06

## இந்தியப் பெருங்கடலில் 6.4 ரிச்டரில் நிலநடுக்கம்



இலங்கைக்கு அருகே இந்து சமுத்திரத்தின் தென் மேற்கு பகுதியில் சக்தி வாய்ந்த நிலநடுக்கமொன்று ஏற்பட்டுள்ளதாக, இந்திய தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் அறிக்கை வெளியிட்டுள்ளது. இந்நிலநடுக்கம் நேற்று முன்தினம் (21) அதிகாலை பதிவாகியுள்ளது. இந்தியாவின் கடற்படுகையின் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் அதிரவளவு 6.4 ரிச்டர் அளவில் 06

# அணிசேரா நாடுகளின் தலைவர்களுடன் ஜனாதிபதி சந்திப்பு















உகண்டாவின் கம்பாலா நகரில் நடைபெறும் அணிசேரா நாடுகளின் மாநாட்டுக்கு இணைந்த வகையில் ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள உலகளாவிய தெற்கு நாடுகளின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகளுடன் (19) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இருதரப்பு கலந்துரையாடல்களில் ஈடுபட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவிற்கும் தென்னாபிரிக்க ஜனாதிபதி சிறில் ரமபோசாவிற்கும் (Cyril Ramaphosa) இடையிலான சந்திப்பொன்றும் இடம்பெற்றது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தென்னாபிரிக்க ஜனாதிபதி மிகவும் அன்புடன் வரவேற்றதுடன் இரு நாட்டுத் தலைவர்களும் இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதேவேளை, தன்சானியா பிரதமர் காசிம் மஜலிவாவும் ( Kassim Majaliwa) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து இருதரப்பு பேச்சுவார்த்தையில் ஈடுபட்டார்.

மேலும், பஹமாஸ் பிரதமர் பிலிப் ஈ. டேவிஸ் ( Philip E. Davis), எத்தியோப்பியா பிரதமர் அபே அஹமட் (Abiy Ahmed), பெனின் குடியரசின் உப ஜனாதிபதி மாரியம் சாபி தலதா (Mariam Chabi Talata), ஆகியோர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவைச் சந்தித்து, இருதரப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி, இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, பாராளுமன்ற உறுப்பினர்களான கிங்ஸ் நெல்சன், நிமல் பியதிஸ்ஸ, குமாரசிறி ரத்நாயக்க, உதயகாந்த குணதிலக்க, ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, காலநிலை மாற்றம் தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்தன ஆகியோரும் இச்சந்திப்புக்களின் போது உடனிருந்தனர்.

# மாத்தறை மாவட்ட அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல்

## சபாநாயகர் உட்பட அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்களும் பங்கேற்பு





(வெலிகம தினகரன் நிருபர்)

வரவு செலவுத் திட்டத்தில் மாத்தறை மாவட்ட கிராமிய அபிவிருத்தி பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட நிதி சம்பந்தமான கலந்துரையாடலொன்று மாத்தறை மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.


மாத்தறை மாவட்டத்தில் 16 பிரதேச செயலகங்களில் 650 கிராம சேவகர் பிரிவுகளுக்கு இந்நிதி பகிர்ந்தளிக்கப்படவுள்ளது. இக் கலந்துரையாடலில் சபாநாயகர் மஹிந் தயாப்பா அபேவர்தன, மின்வலு அமைச்சர் கஞ்சன விஜேசேகர, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்புத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க , தென் மாகாண ஆளுநர் விலிகமகே, மாத்தறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான வீரசுமன வீரசிங்க, கருணாதாஸ கொடித்துவக்கு, நிபுண ரணவக்க , மாத்தறை மாவட்ட செயலாளர் சட்டத்தரணி வை. விக்ரமசிறி உட்பட அரச அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

## கலாபூசணம் யோனகபுர ஹம்ஸாவின்

# 'விளக்கே நீ விளக்கு' கவிதை நூல் வெளியீடு

மூத்த கவிஞரும் ஓய்வுநிலை ஆசிரியருமான கலாபூசணம் யோனகபுர ஹம்ஸா எழுதிய 'விளக்கே நீ விளக்கு' கவிதை நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் (24) புதன் கிழமை காலை 9.00 மணிக்கு, திக்குவல்லை மின்ஹாத் தேசிய பாடசாலை மஹ்மூத் மண்டபத்தில் நடைபெறும்.

தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ. எம். மஷாயிர் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் முன்னாள் தென் மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் எம்.ஜே. முஹம்மது, எழுத்தாளர் திக்குவல்லை கமால், கொழும்பு, ஹமீத் அல் ஹுஸைனி அதிபர் எம்.ஆர்.எம். ரிஸ்கி ,செய்யது இஸ்மாயில் இமாம் ஆகியோர் உரையாற்றுவர். எழுத்தாளர் திக்குவல்லை சப்வான் கவி வாழ்த்து நிகழ்த்துவார்.




அல்ஹாஜ் எம்.எச்.எம்.நஸார் முதற் பிரதியைப் பெற்று நூல் ஏற்பை ஆரம்பித்து வைப்பார். வித்தியாலய அதிபர் எம்.ஏ.எம். அஸ்வான் நிகழ்ச்சியை தொகுத்தளிப்பார்.

# சரசவி புத்தக மாளிகையின் புதிய கிளை பாணந்துறையில் திறந்து வைப்பு

## பிரதம அதிதியாக அமைச்சர் பந்துல குணவர்த்தன பங்கேற்பு






(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

நாட்டிலுள்ள பிரபல புத்தக சாலைகளிலொன்றான "சரசவி புத்தக மாளிகை" (சரசவி பொத் மெதுர) புதிய கிளை ஊடகத்துறை அமைச்சரினால் பாணந்துறையில் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

இந்த புத்தகசாலைக் கிளை 1973ஆம் ஆண்டு நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட சரசவி புத்தக மாளிகையின் முப்பதாவது கிளையாகும். பாணந்துறை நகரின் ஜயதிலக மாவத்தையில் அமைந்துள்ள மாடிக் கட்டடத்தில் புதிய கிளை அமைந்துள்ளது.

போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் பந்துல குணவர்தன திறப்பு விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு முப்பதாவது கிளையை திறந்து வைத்தார்.

புதிய கிளையை திறந்து வைத்த அமைச்சர், புத்தகசாலையின் பல்வேறு பகுதிகளையும் பிரமுகர்களுடன் சுற்றிப் பார்வையிட்டதுடன் புத்தகம் வாங்கி புதிய கிளையின் வர்த்தக செயல்பாடுகளையும் தொடக்கி வைத்தார்.

சரசவி கூட்டு வர்த்தக குழுமத்தின் தலைவரும் திரைப்பட தயாரிப்பாளருமான எச்.டீ. பிரேமசிறி, திரைப்பட தயாரிப்பாளர் பிரசன்ன விதானகே உள்ளிட்ட பிரமுகர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

# விமானப்படை தளபதி கிண்ண கோல்ப்போட்டி



இலங்கை விமானப்படை மற்றும் ஈகிள்ஸ் கோல்ஃப் லிங்க்ஸ் இணைந்து 11வது தடவையாக நடாத்திய விமானப்படை தளபதி கிண்ண கோல்ஃப் போட்டிகள் கடந்த 20ஆம் திகதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ வின் பங்கேற்பில் திருகோணமலை சீனக்குடா ஈகிள்ஸ் கோல்ஃப் லிங்க்ஸ் மைதானத்தில் டயலொக் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பிரதான அனுசரணையில் இடம்பெற்றது.

விமானப்படை தளபதி கிண்ண கோல்ஃப் போட்டி தொடரில் ஆண் மற்றும் பெண் விளையாட்டு வீர, வீராங்கனைகள் கலந்து கொண்டனர். மேலும் சிறந்த முப்படை சேவையாளர்களுக்கான சவால் கிண்ணப் போட்டியில் முப்படை வீர வீராங்கனைகளும் போட்டியிட்டனர்.

இந்த தொடரில் விமானப்படை தளபதி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ மற்றும் கடற்படை தளபதி வைஸ் அட்மிரல் பிரியந்த பெரேரா ஆகியோர் உட்பட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீர வீராங்கனைகள் 100க்கும் மேற்பட்டவர்கள் இதில் பங்குபற்றினர்.

2024ம் ஆண்டுக்கான ஆடவர் பிரிவின் விமானப்படை தளபதி கிண்ணத்தை எயார் வைஸ் மார்ஷல் உதுல விஜேசிங்க வெற்றிபெற்றதுடன் மகளிர் பிரிவில் திருமதி. அனுஷா சேனாதீர பெற்றுக்கொண்டார். மேலும் முப்படை சேவையாளர்களுக்கான சவால் கிண்ணத்தை விமானப்படையின் விங் கமாண்டர் அசந்த குணரத்ன அவர்கள் பெற்றுக்கொண்டார்.

# அதுருகிரிய சந்தியில் போக்குவரத்து நெரிசலை தடுக்க உரிய நடவடிக்கை

அத்துருகிரிய சந்தியில் நிலவும் போக்குவரத்து நெரிசலை ஆராயும் நோக்கில்,அமைச்சர் பந்துலகுணவர்ன கள விஜயமொன்றை மேற்கொண்டார்.இச்சந்தியில்,

ஒரு மணிநேரம் முதல் ஒன்றரை மணித்தியாலம் வரை கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் முறைப்பாடு செய்திருந்தனர்.மக்களின் இம்முறைப்பாட்டை நேரில் ஆராயும் பொருட்டு காலை 7.30 மணியளவில் அத்துருகிரிய சந்திக்கு விஜயம் செய்தார்.

வீதி அபிவிருத்தி அதிகார சபை பணிப்பாளர் நாயகம் எஸ் வீரக்கோன்உட்பட வீதி அபிவிருத்தி அதிகாரசபை உயர் அதிகாரிகள், நகர அபிவிருத்தி அதிகார சபை உயர் அதிகாரிகள், கடுவெல மாநகர ஆணையாளர் திருமதி தில்ருக்ஷி கமகே, பிரதேச பொதுமக்கள் பிரதிநிதிகள், காமினி ஹெட்டியாராச்சி மற்றும் வர்த்தக சங்க தலைவர்கள் ஆகியோரும் இக்கள விஜயத்தில் இணைந்திருந்தனர்.

நெரிசலை போக்குவதற்கான விரைவான வேலை திட்டம்



தொடர்பாக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன அதிகாரிகளுடன் கலந்துரையாடினார்.

அதுருகிரிய மிலேனியம் சிட்டி மற்றும் உருக்குக் கூட்டுத்தாபனம் ஊடான கார்பெட் இடப்பட்ட வீதி, அதுருகிரிய சந்திப்பில் இணை

கிறது. இதனால்தான், இங்கு நெரிசல் ஏற்படுவதாக கண்டறியப்பட்டது.இதை நிவர்த்திக்க வீதியின் இருபுறமும் உள்ள வர்த்தக நிலையங்களை அகற்றத் தீர்மானிக்கப்பட்டது.இவ்வேலைத்திட்டத்தால் ஏற்படும் இழப்பீடுகளுக்கு நட்டஈடு வழங்கவும்

கவனம் செலுத்தப்பட்டது. மற்றும் இத்திட்டத்தை குறுகிய காலத்திற்குள் முடிக்க சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரின் கூட்டத்தைகூட்டுமாறு கடுவல பிரதேச செயலாளருக்கு அமைச்சர் பந்துல குணவர்தன ஆலோசனை வழங்கினார்.

# ஜனாதிபதியுடன் இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெயசங்கர், சந்தித்து பேச்சு



அணிசேரா நாடுகளின் 19ஆவது மாநாட்டுக்கு இணையாக இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பு குறித்து இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ். ஜெயசங்கர் தனது எக்ஸ் தளத்தில் பதிவொன்றையும் இட்டிருந்தார். அந்தப் பதிவில் "கம்பாலா நகரில் நடந்த அணிசேரா நாடுகளின் மாநாட்டில் பங்கேற்ற இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தது மகிழ்ச்சி அளிக்கிறது. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இருதரப்பு முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தொடர்ச்சியான வழிகாட்டுதல் பாராட்டத்தக்கது. அண்டை நாடுகளுக்கு முன்னுரிமை கொடுப்பதற்கான இந்தியாவின் அர்ப்பணிப்பை 'சாகர்' கொள்கை பிரதிபலிக்கிறது." என்று குறிப்பிட்டிருந்தார்.

# இலங்கை – உகண்டா ஜனாதிபதிகள் சந்திப்பு பொருளாதார மீட்சிக்கான முயற்சிகளுக்கு பாராட்டு

உகண்டாவுக்கான உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருக்கும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி (Yoweri Museveni) ஆகியோருக்கிடையிலான உத்தியோகபூர்வ சந்திப்பு கடந்த (20) சனிக்கிழமை பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிநேகபூர்வமான வரவேற்பளித்த உகண்டா ஜனாதிபதி, சிறிது நேரம் சுமுகமாக கலந்துரையாடிய பின்னர் இரு நாட்டு தலைவர்களும் இருதரப்பு பேச்சுவார்த்தையை ஆரம்பித்தனர்.

தனது அழைப்பையேற்று வருகைத் தந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு நன்றி தெரிவித்த உகண்டா ஜனாதிபதி யொவேரி முசேவேனி, சரிவடைந்திருந்த நாட்டை மீளக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமைத்துவத்தைப் பாராட்டியதோடு, அதற்காக நாட்டு மக்களின் பாராட்டும் கிட்ட வேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

இலங்கையின் புதிய பொருளாதார வேலைத் திட்டம் தொடர்பில் இதன்போது தலைவர்கள் கலந்துரையாடினர். சர்வதேச நாணய நிதியத்துடனான ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கை, பொருளாதார ரீதியில் முன்னோக்கி பயணிப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கை உகண்டாவுக்கு இடையிலான இருதரப்பு உறவுகளை புதிய துறைகள் ஊடாக மேலும் பலப்படுத்திக்கொள்வது தொடர்பில் இதன்போது தீர்க்கமாக பேசப்பட்டது.

காலநிலை அனர்த்தம் தொடர்பிலான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் ருவன் விஜேவர்த்தன, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் அருணி விஜேவர்த்தன, உகண்டாவுக்கான இலங்கை தூதுவர் வீ.கனநாதன் உள்ளிட்ட இலங்கை தூதுக் குழுவினரும் இதன்போது கலந்துகொண்டனர்.

## சுற்றுலாத்துறையின் வளர்ச்சிக்கு
# "Pekoe trail" சுற்றுலாப் பாதை 300 Km இல் உருவாக்க திட்டம்

இலங்கையின் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் நோக்கில் செயற்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள "Pekoe trail" திட்டம் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக் கூட்டம் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தலைமையில் (19) ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

"Pekoe trail" திட்டத்தின் கீழ், சுமார் 300 கிலோமீட்டர் தூரத்துக்கு சுற்றுலாப் பாதை உருவாக்க எதிர்பார்க்கப்படுவதாகவும், இத்திட்டம் உலகளவில் பெரும் புகழைப் பெற்றுள்ளதாகவும், இலங்கையின் தேயிலை தொழில்துறையின் வளர்ச்சிக்கு இது பெரும் உறுதுணையாக அமையும் எனவும் இந்நிகழ்வில் கலந்து கொண்ட Pekoe trail குழு விளக்கமளித்தது.

இலங்கையை இதுவரை சுற்றுலாத் தலமாகக் கருதாத சுற்றுலாப் பயணிகளைக் கவர்வதற்கு இத்திட்டம் உதவுமெனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இங்கு உரையாற்றிய சாகல ரத்நாயக்க, இலங்கைக்கு மிகவும் முக்கிய திட்டமான இந்த திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்தியுள்ளதாகக் குறிப்பிட்டார்.

எனவே இத்திட்டத்தை அமுல்படுத்தும் போது ஏற்பட்டுள்ள சட்ட மற்றும் ஏனைய பிரச்சினைகள் தொடர்பில் உரிய தரப்பினருடன் கலந்துரையாடி தீர்வு காண வேண்டும் எனவும் இத்திட்டத்தை வெற்றியடையச் செய்வதற்கு ஒன்றிணைந்து செயற்படுவது அவசியமானது எனவும் சாகல ரத்நாயக்க சுட்டிக்காட்டினார்.

இத்திட்டம் தொடர்பில் பிரதேச தோட்டக் கம்பனிகள் மற்றும் ஏனைய துறைசார் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடி விரைவான தீர்வுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு சாகல ரத்நாயக்க உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

# ஈ விசா முறைமை மார்ச்சில்

இலங்கையில் ஈவிசா முறைமை நடைமுறைப்படுத்தப் படவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

இதற்கமைய எதிர்வரும் மார்ச் மாதம் 01ஆம் திகதி முதல் புதிய வேலைத்திட்டத்தின் கீழ் ஈவிசா வழங்கும் முறை நடைமுறைப்படுத்த ப்பட உள்ளதாகவும் அவர் தெரிவித்தார். இதன் மூலம் 145 நாடுகளுக்கான விசா வழங்கலை ஒன்லைன் மூலம் மேற்கொள்ள முடியுமென அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## சுமார் 163 கோடி ரூபா பெறுமதி:
# 65 கிலோ ஹெரோயினுடன் ஆழ்கடலில் 11 பேர் அதிரடிக் கைது



தென்பகுதியின் தேவேந்திரமுனையிலிருந்து சுமார் நூறு கடல் மைல் (சுமார் 185 கி,மீ ) தொலைவில்,சுமார் 163 கோடி ரூபா பெறுமதியான 65 கிலோ ஹெரோயின் போதைப்பொருளுடன் 11 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டனர். கடற்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் இவை, கைப்பற்றப்பட்டன.

ஹெரோயின் போதைப்பொருள் அடங்கிய மூன்று பொதிகளை ஏற்றிவந்த ஆழ்கடல் வள்ளமொன்றும் இதற்கு பாதுகாப்பு வழங்கிவந்த மற்றுமொரு ஆழ்கடல் படகொன்றும் இதன்போது கைப்பற்றப்பட்டதாக கடற்படை தெரிவித்துள்ளது.

கடற்படையின் புலனாய்வுப் பிரிவினர் ஆழ்கடலில் மேற்கொண்ட இந்த நடவடிக்கையையடுத்து, இரண்டு ஆழ்கடல் வள்ளங்களும் (20) காலி துறைமுகத்துக்கு கொண்டு வரப்பட்டன.

போதைப்பொருள் அச்சுறுத்தலை நாட்டிலிருந்து இல்லாதொழிக்கும் இலக்கை அடைவதற்காக, நாட்டை சூழவுள்ள கடற்பரப்பை உள்ளடக்கிய தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் கடற்படையினர், நாட்டின் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனங்களுடன் இணைந்து வழக்கமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதற்கமைய கடற்படையின் புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த தகவலின்படி தேவேந்திரமுனையிலிருந்து 100 கடல் மைல் தொலைவில் தெற்கு கடல் பகுதியில் நேற்றுக்காலை இலங்கை கடற்படைக் கப்பல் 'சுரநிமல' நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டது.

கடற்படைக்கு கிடைத்த தகவலின்படி நேற்று முன்தினம் (19) ஆழ்கடல் பகுதியில் போதைப்பொருள் கடத்துவதாக சந்தேகிக்கப்படும் இலங்கையின் ஆழ்கடல் மீன்பிடி வள்ளத்தை சோதனை செய்த போது, அதில் 60 கிலோவுக்கும் அதிகமான 3 பொதிகள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. முதலாவது வள்ளத்தில் வைக்கப்பட்டிருந்த ஹெரோயின் போதைப்பொருளுடன் அந்த வள்ளத்தில் இருந்த 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபட்டதாக சந்தேகிக்கப்படும் இரண்டாவது ஆழ்கடல் வள்ளம் கைப்பற்றப்பட்டதுடன், அதிலிருந்த 6 சந்தேக நபர்களும் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்,

சந்தேகநபர்கள் மாத்தறை, கந்தர மற்றும் தெவுந்தர பிரதேசங்களில் வசிப்பவர்களெனவும் 28 மற்றும் 52 வயதுக்கு இடைப்பட்டவர்களெனவும் கடற்படையினர் தெரிவித்தனர்.

# கிழக்கு ஆளுநர் வாழ்த்து



இலங்கை தமிழரசுக் கட்சியின் தலைவராக தேர்ந்தெடுக்கப் பட்டுள்ள சிவஞானம் சிறீதரனுக்கு கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துக்களை தெரிவித்துள்ளார்.

தங்களது, சேவைக் காலத்தில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும். வடக்கு கிழக்கு தமிழர்கள் மாத்திரமின்றி நாடு முழுவதும் உள்ள தமிழர்கள் மென்மேலும் வளர்ச்சி அடைய தங்களின் பணி தொடர வேண்டும் என, வாழ்த்துவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

# கேம்பிரிட்ஜ் பல்கலை மாணவர் சங்கத்தில் உரையாற்ற வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரிக்கு அழைப்பு

உலகப் புகழ்பெற்ற கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர் சங்கத்தில் உரையாற்ற வெளிநாட்டமைச்சர் ஜனாதிபதி சட்டத்தரணி அலி சப்ரி அழைக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் பொருளாதார மீட்சிக்கான பாதை குறித்து அலி சப்ரி நாளை (23) தனது உரையில் கருத்து வெளியிடுவார் என வெளிநாட்டலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

1815 இல் நிறுவப்பட்ட ஐக்கிய இராச்சியத்தின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக மாணவர் சங்கம், உலகின் பழமையான விவாத சமூகமாகும், மேலும் இது வரலாற்று ரீதியாக செல்வாக்கு மிக்க பேச்சாளர்களை அழைப்பதற்கும் அறிவுசார் உரையாடலை ஊக்குவிப்பதற்கும் பிரசித்தி பெற்றதென அறியப்படுகிறது. வின்ஸ்டன் சர்ச்சில், தியோடர் ரூஸ்வெல்ட், பில் கேட்ஸ் மற்றும் ஸ்டீபன் ஹாக்கிங் ஆகியோர் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக

06


ST&S ® SINCE 1892

சுகாதார அமைச்சு
மாபெரும் ஏலவிற்பனை

77 டீசல் மற்றும் பெற்றோல் மோட்டார் வாகனங்கள்
மிட்ஷுபிஷி / மஸ்டா / நிஸான் / சுசூகி கார்கள், லேன்ட் ரோவர் / மிட்ஷுபிஷி பெஜரோ / நிஸான் / டாட்டா சபாரி ஜீப் வண்டிகள், மிட்ஷுபிஷி / மைக்ரோ கெப்கள், மிட்ஷுபிஷி / இசுசு / வொக்ஸ்வெகன் / போர்ட் / மைக்ரோ / டெம்போ டிரவலர் வேன்கள், இசுசு ஜேர்னி பஸ், இசுசு / நிஸான் / டாட்டா லொறிகள், டொயோட்டா / மிட்ஷுபிஷி / நிஸான் / இசுசு / போர்ட் / மஸ்டா அம்பியுலன்ஸ், 05 பஜாஜ் / விமுக்த் முச்சக்கர வண்டிகள், சுசூகி / பஜாஜ் / வுஏஞ / ஹீரோ / லோன்சின் / ஜியாலிங் / ஜோஸ்வே / வெஸ்பா / கவாசுகி / விரென்ச் மோட்டார் சைக்கிள்கள்.

2024 ஜனவரி 29 திங்கட்கிழமை
சுகாதார அமைச்சு, முல்லேரியா சேவை நிலையம், முல்லேரியா என்ற முகவரியில்
காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும்.

பார்வையிடல் -
2024 ஜனவரி 26 வெள்ளி மற்றும் 27 சனிக்கிழமை
மு.ப 9.00 - பி.ப 4.00 மணி வரை

விற்பனை நிபந்தனைகள்
- நுழைவு: ஏல விற்பனை நடைபெறும் ஒவ்வொரு தினத்திலும், ஒவ்வொருவரும் பிரவேசக் கட்டணமாக மீளளிக்கப்படாத ரூபா 2000/- செலுத்துவதுடன், மீளச் செலுத்தப்படும் ரூபா 25,000/- ஐ வைப்புச் செய்தலும் வேண்டும்.
- கொடுப்பனவுகள்: விற்பனை முடிவின் போது, மொத்தத் தொகையில் மீளளிக்கப்படாத 25% காசாகச் செலுத்தப்படல் வேண்டும். எஞ்சிய 75% ஐயும் காசாகச் செலுத்துவதுடன், ஒவ்வொரு ஏல விற்பனையின் பின்னர் வாகனங்களும் உடனடியாக அகற்றப்படல் வேண்டும்.
- எவ்வித முன்னறிவித்தலுமின்றி எந்தவொரு வாகனத்தையும் ஏல விற்பனையிலிருந்து விடுவித்துக் கொள்ளும் உரிமையை அமைச்சு கொண்டுள்ளது.
- அமைச்சு / ஏலதாரரின் தீர்ப்பே இறுதி முடிவாகும்.

ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம ®
ஒரே தேசம், ஒரே ஏலவிற்பனையாளர்
CELEBRATING 125 Years
011 2671468
www.sandslanka.com

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் தை மாதம் 08ஆம் நாள் திங்கட்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரஜப் பிறை 10

### குறள் தரும் சிந்தனை

எற்றிற் குரியர் கயவரொன்று உற்றக்கால்
விற்றற்கு உரியர் விரைந்து

ஒரு துன்பம் வரும்போது அதிலிருந்து தப்பித்துக் கொள்ள, தம்மையே பிறரிடம் விற்றுவிடுகிற தகுதிதான் கயவர்களுக்குரிய தகுதியாகும்.

# முன்னேற்றப் பாதையில் இலங்கைப் பொருளாதாரம்

பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்கள் விரிவான அடிப்படையில் முன்னெடுக்கப்பட்டுள்ளன. 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடும் மக்களும் முகம் கொடுத்தது போன்றதொரு பொருளாதார நெருக்கடிக்கு நாடு மீண்டும் உள்ளாகி விடக்கூடாது என்பதே இவ்வேலைத்திட்டங்களின் நோக்கமாக உள்ளது.

அதேநேரம், 2048 ஆம் ஆண்டாகும் போது நிலைபேறான அபிவிருத்தி அடைந்த நாடாக, நாட்டைக் கட்டியெழுப்புவதை அடிப்படையாகக் கொண்டு அனைத்துப் பொருளாதார அபிவிருத்தி திட்டங்களும் முன்னெடுக்கப்படுவதும் இங்கு சுட்டிக் காட்டத்தக்கதாகும்.

அந்த வகையில் பொருளாதார மீட்சிக்காக முன்னெடுக்கப்பட்டுவரும் இவ்வேலைத்திட்டங்களின் பயன்கள் மக்களைச் சென்றடையவும் ஆரம்பித்து விட்டன. அதன் விளைவாக நாடு எதிர்கொண்ட பொருளாதார நெருக்கடியின் போது மக்கள் முகம் கொடுத்த நெருக்கடிகளும் அசௌகரியங்களும் பெரும்பாலும் நீங்கியுள்ளன. ஆனாலும் அந்நெருக்கடியின் தாக்கங்களது பிரதிபலிப்புக்களை இன்னும் அவதானிக்க முடிகிறது.

பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததைத் தொடர்ந்து இந்நாட்டின் தலைமையை ஏற்க எவரும் முன்வராத சூழல் உருவானது. அந்த நிலையில் நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பொருளாதாரத்தை மீளக்கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். கட்சி அரசியல் பேதங்களுக்கு அப்பால் மக்களின் நலன்களை முன்னிலைப்படுத்தி முன்னெடுக்கப்படும் இவ்வேலைத் திட்டங்களின் பயன்கள் குறுகிய காலப்பகுதிக்குள் மக்களைச் சென்றடையத் தொடங்கின.

ஆனால் இலங்கை முகம்கொடுத்தது போன்றதொரு பாரிய பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்த நாடொன்று குறுகிய காலப்பகுதிக்குள் மீட்சி பெறுவது என்பது இலகுவான காரியமல்ல. அதற்கு பரந்த நிபுணத்துவ அனுபவங்களை பின்புலமாகக் கொண்ட பொருளாதார மீட்சிக்கான வேலைத்திட்டங்கள் இன்றியமையாதவையாகும்.

அந்த வகையில் ஜனாதிபதி முன்னெடுத்துவரும் பொருளாதார மீட்சியை இலக்காகக் கொண்ட வேலைத்திட்டங்கள் நாட்டை நம்பிக்கை தரும் வகையில் முன்னேற்றப் பாதையில் இட்டுச்செல்ல வழிவகை செய்திருக்கின்றன.

இந்நாட்டைப் பொருளாதார ரீதியில் கட்டியெழுப்ப உதவி வழங்கும் சர்வதேச நாணய நிதியமும் கூட இதனைச் சுட்டிக்காட்டியுள்ளது. இந்நிதியத்தின் இலங்கைக்கான சிரேஷ்ட தூதுக்குழுவின் தலைவர் பீற்றர் ப்ரூவர், இலங்கையின் பொருளாதாரம் ஸ்திரமடைந்து வருவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம் சுவிட்சர்லாந்து நாட்டின் டாவோஸ் நகரில் நடைபெற்ற உலக பொருளாதார மன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இலங்கை பொருளாதார ரீதியில் இதுவரை அடைந்துள்ள முன்னேற்றங்களை எடுத்துக் கூறியுள்ளதோடு, 'இவ்வருடம் நாம் 02 வீத பொருளாதார வளர்ச்சியை எதிர்பார்க்கிறோம். அதனை அடுத்தாண்டு 5 வீதமாக அதிகரிக்க திட்டமிட்டுள்ளோம்' என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த அறிவிப்பும் சர்வதேச நாணய நிதியப் பிரதிநிதியின் தகவலும் நாடு பொருளாதார ரீதியில் முன்னோக்கி பயணிப்பதையே எடுத்துக்காட்டுகின்றன. இப்பொருளாதார முன்னேற்றங்கள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டும். அதற்கு ஆதரவும் ஒத்துழைப்பும் நல்கப்பட வேண்டும். எந்தவொரு நாட்டுக்கும் பொருளாதாரம் பலமாகவும் நிலைபேறானதாகவும் இருக்க வேண்டும். அப்போது தான் சுபீட்சமான வாழ்வை மக்களால் அடைந்து கொள்ளக்கூடியதாக இருக்கும்.

இதைவிடுத்து பொருளாதார ரீதியில் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான வேலைத்திட்டங்களை அற்ப அரசியல் நலன்களை அடைந்து கொள்ளும் நோக்கில் அணுகுவது ஆரோக்கியமானதல்ல. அது நாட்டுக்கும் மக்களுக்கும் பாதிப்பாகவே அமையும். குறிப்பாக தற்போதைய சூழலில் நியாயப்படுத்த முடியாத கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பது எவ்விதத்திலும் நாட்டுகோ, மக்களுக்கோ நன்மைகளைப் பெற்றுத் தராது. அவை பொருளாதார ரீதியிலான பாதிப்புக்களுக்கே வழிவகை செய்யும். அதனால் தொழிற்சங்கங்கள் தங்கள் கோரிக்கைகள் குறித்து சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி அவற்றுக்கு நியாயமான தீர்வுகளைப் பெற்றுக்கொள்வதில் கவனம் செலுத்த வேண்டும். அது நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு உதவும் நடவடிக்கையாகவே இருக்கும்.

ஆகவே நாட்டின் நலன்களுக்கு முன்னுரிமை அளித்து முன்னெடுக்கப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களுக்கு ஆதரவும் ஒத்துழைப்பும் அளிக்க வேண்டும். அப்போதுதான் 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப் பகுதியில் நாடு முகம்கொடுத்தது போன்றதொரு பொருளாதார நெருக்கடி மீண்டும் ஏற்படுவதைத் தவிர்த்துக் கொள்ளக்கூடியதாக இருக்கும். அதுவே நாட்டினதும் மக்களினதும் எதிர்பார்ப்பாகும்.

editor.tkn@lakehouse.lk

# 'அழகான விவசாயம்' திட்டத்தை விஸ்தரிக்கும் ஒப்பந்தம் கைச்சாத்து

விவசாயத்தில் முன்னணியில் உள்ள லஸ்சன அக்ரி (அழகான விவசாயம்) இன்டீனோவேஷனல் உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளுக்கு புத்தம் புதிய ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான பழங்கள், காய்கறிகளை வழங்குவதற்காக அர்ப்பணிக்கப்பட்ட தொலைநோக்கு நிறுவனமாக திகழ்கிறது.

அத்துடன் மேலும் இத்துறையை விஸ்தரிக்கவென உலகில் விவசாய உற்பத்திகளையும் ஏற்றுமதிகளையும் மேம்படுத்தும் பிரசித்தி பெற்ற இந்திய விவசாய கம்பனி ஒன்றுடன் 17ஆம் திகதி கொழும்பில் ஒப்பந்தம் ஒன்றும் கைச்சாத்திட்டது.

ஒரு அற்புதமான நடவடிக்கையாக இலங்கையில் நவீன விவசாயத்தை மறுவடிவமைக்கும் வகையில் 'லஸ்ஸன அக்ரி' இன்னோவேஷன்ஸ் அமைக்கப்பட்டுள்ளது. விலைவாசி உயர்வு, குறைந்த தரம், அதிகப்படியான இரசாயன பயன்பாடு மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்பு போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் வகையில் அமைந்துள்ள இத்திட்டமானது விவசாயிகளுக்கு உதவும் வகையில் உள்ளது.

கினிகர் இந்தியா மற்றும் அக்ரிபிளாஸ்ட் உடனான ஒப்பந்தம் ஒரு குறிப்பிடத்தக்க மைல்கல் ஆகும். மேற்படி நிறுவனத்தினால் கடந்த 16ஆம் திகதி கொழும்பு ஹில்டன் ஹோட்டலில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தில் லஸ்ஸன அக்ரி இன்னோவேஷனலஸ் மற்றும் லஸ்ஸன குழும் நிறுவனங்களின் தலைவரும் ஸ்தாபகருமான டொக்டர் லசந்த மலவிகே கினிகர் இந்தியா மற்றும் அக்ரிபிளாஸ்ட் இந்தியா இணைந்த பசுமை இல்லம் பணிப்பாளர் அபிஷேக் பாத் ஆகியோருக்கிடையில் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.




70 ஆண்டுகளுக்கும் மேலான ஒருங்கிணைந்த அனுபவத்துடன் கொண்ட இந்திய விவசாய உற்பத்திக் கொம்பனியான கினிகர் அக்ரிபிளாஸ்ட் 24 இலட்சத்துக்கும் அதிகமான விவசாயிகளுக்கு உதவி செய்து விவசாயத் துறையில் மாற்றத்தைக் புகுத்தும் ஒரு நிறுவனமாக செயல்பட்டு வருகிறது. ஈர வைக்கோல் மற்றும் பசுமை இல்லங்களுக்கான உறைகள் போன்ற உயர்தர பாதுகாக்கப்பட்ட விவசாய நடைமுறைகளை ஊக்குவித்துள்ளது. விவசாயிகளுக்கு கல்வியை வழங்குவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றது.

இலங்கை லஸ்ஸன அக்ரி இன்னவேஷன்ஸ், விவசாயிகளுக்கு சரியான தொழில்நுட்பத் தீர்வுகளுக்கு வழிகாட்டுகிறது. இக்கம்பனி திவுலப்பிட்டியில் 7 ஹேக்டெயர் பகுதியில் பசுமை இல்லத்தில் உயர் தொழில்நுட்பத்தை கொண்டுள்ளதாக உள்ளது.

இங்கு உரையாற்றிய டொக்டர் வசந்த "ஒல்லாந்து நா ட்டில் உள்ள நிலப்பரப்பில் அரைவாசிக்கு மேல் விவசாய உற்பத்திகள் செய்யப்பட்டு வருகின்றன. அவர்களது உற்பத்திகள் உலககெங்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. ஆனால் எமது நாட்டில் சிறந்த விவசாய உற்பத்திக்கு ஏற்ற காலநிலை உள்ளது. சிறந்த பச்சைத் தாவரம் உற்பத்தி செய்யும் வசதிகளைக் கொண்ட நாடாக உள்ளது. எமது நாட்டில் விவசாய நிலங்கள் உள்ளன. பொருத்தமான வெப்பம், வளங்கள், மண், பசளை, நீர், அருவிகள், இயற்கை மழைநீர் இருந்தும் நமது நாட்டில் இந்தியாவை விட 4 மடங்காக எமது நாட்டு மரக்கறி, பழ வகைகளின் விலைகள் அதிகரித்துள்ளன.

வெளிநாடுகளில் இருந்தும் எமக்குரிய உணவு வகைகளை இறக்குமதி செய்து வருகின்றோம். இத்துறையில் எஞ்சி இருக்கின்ற விவசாயிகளையாவது ஊக்குவிப்பது எமது தலையாய கடமையாகும். அத்துடன் அவர்களது உற்பத்திகளை நவீன முறையில் சந்தைப்படுத்துதல் வேண்டும். மேடைகள் அமைத்து வைக்கோல், மூங்கில் குழாய்களில் ஈரமண்ணிட்டு சிறியளவில் மரக்கறிகளை உற்பத்தி செய்யக் கூடிய முறைகள் குறித்து' இதுவரை எமது விவசாயிகளுக்கு அறிவுறுத்தப்படவில்லை. இவ்வாறான திட்டத்திற்கு தமது சொந்தக் காணியில் 10 பேர்ச் காணியே போதுமானது. இவ்வாறான பெரிய திட்டங்களுக்கு அரச மற்றும் தனியார் , வங்கிகள் விவசாய உற்பத்திகளுக்கு கடன் திட்டங்கள் வழங்காமை போன்ற பல்வறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அத்துடன் விவசாயிகளின் உற்பத்தி 35 வீதம் வீணாகி அழுகிப் போகின்றது. மாற்றுப்பயிர்ச் செய்கை திட்டம் மேம்படுத்தப்பட வேண்டும்" என்று குறிப்பிட்டார்.

**அஷ்ரப் ஏ சமத்...**

# வைர விருது பெற்றுக் கொண்ட Beverley International நிறுவனம்

2023ஆம் ஆண்டுக்கான ஆசியாவின் வெளிநாட்டு உயர் கல்விக்கான ஆலோசகர் நிறுவனத்திற்கான வைர விருதை இலங்கையின் பெவர்லி இன்டர்நெஷனல் (Beverley International) பெற்றுக் கொண்டுள்ளது.

இந்த அங்கீகாரம் உயர்தரமான சேவைகளை, ஆலோசனைகளை வழங்கிய தன் விதிவிலக்காகவும் மாணவர்களின் 'சர்வதேச கல்வி முயற்சிகளில்' ஆதரவளிப்பதாலும் கிடைத்ததை எடுத்துக்காட்டுகின்றது. மேலும் மாணவர்கள் வெளிநாடுகளில் உயர்கல்வியைத் தொடரும்போது அவர்களுக்கான சிறந்த ஆலோசனைகளையும், வழிகாட்டல்களையும் வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பை அதிகரிக்கும் என பெவர்லி இன்டர்நெஷனல் தலைவர் உபுல் ஹேரத் தெரிவித்தார்.

மற்றும் New Zealand நாட்டு பிரஜா உரிமையுள்ள நேற ஹுநயடயனெ New Zealand Immigration License உரிமம் கொண்ட பெவர்லி இன்டர்நெஷனல் பணிப்பாளரான திருமதி ஜிசேலா கொம்பிரிங் இதுகுறித்துத் தெரிவிக்கையில் "விசா சம்பந்தமான உத்தியோகபூர்வ ஆலோசனைகளையும், சேவைகளையும் வழங்குவது பெவர்லி இன்டர்நெஷனல் நிறுவனத்திற்கு மேலும் பக்கபலமாக இருப்பதை பெருமையுடன் தெரிவிக்கின்றோம்" என்றார்.

துபாயில் நடைபெற்ற 2023 ஆம் ஆண்டுக்கான ஆசியாவின் மிகச் சிறந்த வெளிநாட்டு உயர்கல்விக்கான ஆலோசகர் மற்றும் மாணவர் ஆட்சேர்ப்பு முகவராக இலங்கையின் பெவர்லி இன்டர்நெஷனல் மதிப்பு மிக்க வைர விருதை பெற்றுக்கொண்டதை அறிவிப்பதில் பெருமிதம் கொள்கிறது எனவும் அவர் தெரிவித்தார்.

செல்வி ஹஷாதி வெளலகே பெவர்லியின் குழு செயற்பாட்டு முகாமையாளர் இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில் 'இந்த மதிப்புமிக்க விருதைப் பெறுவதில் நாங்கள் மிகவும் பெருமையடைகின்றோம். மாணவர்களின் சர்வதேச கல்விக்கான கனவுகளை அடைய உதவுவதில் எங்கள் குழுவின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்புக்கு இது ஒரு சான்றாகும். இந்த அங்கீகாரம், வெளிநாட்டில் உயர்கல்வியைத் தொடர மாணவர்களுக்கு சிறந்த வழிகாட்டுதலையும் ஆதரவையும் வழங்குவதற்கான எங்கள் உறுதிப்பாட்டை மேலும் வலுப்படுத்தும்' என்றார்.



பெவர்லி இன்டர்நெஷனல் வெளிநாட்டுக் கல்வி ஆலோசனையில் 16 ஆண்டுகளுக்கும் மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளதுடன் ருமு, கனடா, நியூசிலாந்து, அவுஸ்திரேலியா, அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவில் உள்ள தலைசிறந்த பல்கலைக்கழகங்களில் 4000 இற்கும் மேற்பட்ட மாணவர்களை வெற்றிகரமாகச் சேர்த்துள்ளது.

பெவர்லி இன்டர்நெஷனல் இலங்கையில் நிறுவப்பட்டு, மாணவர்களின் தேவைகள் மற்றும் தொழில் இலக்குகளுக்கு மிகவும் பொருத்தமான பாடநெறிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைத் தேர்ந்தெடுப்பதில் விரிவான வழிகாட்டல்களை வழங்குகிறது.

The Best of Best Awards கோல்டன் (Golden Tree) தொகுத்து வழங்கி நிர்வகிக்கிறது. மேலும் 'பெவர்லி இன்டர்நெஷனல் கல்வி ஆலோசனைத் துறையில் சிறப்பான மற்றும் புதுமையான சவால்களை தரங்களை நிரூபித்துள்ளது. அவை ஆயிரக்கணக்கான மாணவர்களின் வாழ்க்கையில் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதுடன் வெளிநாடுகளில் உள்ள முன்னணி பல்கலைக்கழகங்களில் இருந்து உலகத்தரம் வாய்ந்த கல்வியைப் பெறுவதற்கு அவர்களுக்கு உதவியுள்ளது.

அவர்களின் சிறந்த சாதனைகள் மற்றும் பங்களிப்புகளைப் பாராட்டி, சிறந்த கல்வி ஆலோசனை நிறுவனத்திற்கான வைர விருதை அவர்களுக்கு வழங்குவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகின்றோம்,' என்று Golden Tree நிர்வாகம் மற்றும் Asia's Best of the Best Awards நடுவர் மன்றம் தெரிவித்துள்ளது.

# நோர்வூட்டில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை விடுதலை ஆசீர்வாத பெருவிழா

மலையக மக்களின் விடுதலை நோக்கி மாபெரும் ஆசீர்வாத பெருவிழா எதிர்வரும் 27ஆம் திகதி (27.01.2024) சனிக்கிழமை மாலை 4மணிக்கு நோர்வூட் சக்திமஹால் மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது.

இந்த ஒன்றுக்கூடலில் இப்பகுதி போதகர்கள் ஒன்றிணைந்தும், பெருந்திரளான மக்களும் கலந்து கொள்ள உள்ளனர்.

இந்நிகழ்வில் சிறப்பு தேவ செய்தியாளராக இந்தியாவிலிருந்து வருகை தந்துள்ள 'ராஜஸ்தான் மகிமையின் ஜெப ஊழியத்தின்' பிரதான போதகர் அருட்திரு சுரேஸ் குமார் அவர்களும், ஏ.சி.எம் மிஷன் சுவிசேஷகர் இரவிசந்திரன் ஆகியோரும் கலந்து சிறப்பு தேவ செய்தி ஆற்ற உள்ளார்கள்.


2024 ஆம் ஆண்டு மலையகத்தை அதிசயவிதமாகவும், அற்புதமாகவும் மாற்ற இயேசு கிறிஸ்து வல்லவராயிருக்கிறார். அனைத்து மக்களையும் இதில் கலந்து ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ள ஏ.சி.எம் மிஷன் அழைப்பு விடுக்கின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களுக்கு போதகர் ஜெயராம் அவர்களுடன் (0773727057) தொடர்பு கொள்ளுமாறு ஏ.சி.எம் மிஷன் கேட்டுக் கொண்டுள்ளது.

'இயேசுகிறிஸ்து உங்களை நிறைவாக ஆசீர்வதிப்பாராக!'
















## மானுடவியல்



149

சோழமண்டலத்திலே, பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி, கொச்சைவயம், கழுமலம் என்னும் பன்னிரண்டு திருப்பெயரையுடைய சிவஸ்தலத்திலே பிராமண குலத்திலே, வேதங்களிலே மகாபாண்டித்தியமுடைய கௌணியர் கோத்திரத்திலே, சிவபாத விருதயரென்பவர் ஒருவர் இருந்தார். அவர் மனைவியார், கற்பிலே தமக்கு உயர்வொப்பில்லாத பகவதியாரென்பவர். அவ்விருவருடைய தாய்மரபு, தந்தைமரபு என்னும் இருமரபுஞ் சைவ நெறி வழிவந்தனவேயாம். அவர்கள் அநாதிமலமுத்தபதியாகிய பரமசிவனையேயன்றி, அவிவேகிகளாலே பதிகளெனத் திரித்துணரப்பட்ட பசுக்களைத் தெய்வமென்று கருதாத மெய்யறிவினையும், உண்மாசை நீக்கும் பெருமையையுடையதென்று வேதசிரசுகளாகிய உபநிடதங்களினாலே உணர்த்தப்பட்ட அருமருந்தாகிய விபூதிமேல் வைத்த பேரன்பைப் பரிபாலிக்குந்தன்மையையும் உடையவர்களாகி, இல்லறத்திலே சிறந்து வாழ்ந்திருந்தார்கள்.

அப்படியிருக்கும்பொழுது, சீவகாருண்ணியமே திரண்டு ஒரு வடிவெடுத்தாற்போல விளங்குகின்ற சிவபாதவிருதயர், தமிழ்நாடெங்குஞ் சமணரும் பௌத்தருமாகிய இவ்விரு வகைப்பதிதர்கள் போதிக்குந் துர்ப்போதனையினாலே அவர்கள் அநுட்டிக்கின்ற கபடமார்க்கமாகிய ஆருகதமும், பௌத்தமுமே பெருக, அதிபரமாப்தராகி சிவபெருமான் அருளிச்செய்த வேதசிவாகமங்களால் உணர்த்தப்படுஞ் சற்சமயமாகிய சைவ சமயம் அருகி, விபூதிசாதன விளக்கங் குன்றுதலைக் கண்டு, கவலை கொண்டு, நிகழ்காலத்தும் எதிர்காலத்துமுள்ள சருவான்மாக்களும் உய்தல்வேண்டுமென்பதைத் திருவுளத் தடைத்து; ஒரு திவ்விய புத்திரரைப் பெறல்வேண்டுமென்னும் பேராசையினாலே, இல்லறத்திலிருந்து கொண்டே சர்வாபீஷ்டவரதராகிய தோணியப்பரையும் பெரியநாயகியாரையும் நோக்கி, பரசமய நிராகரணம் பண்ணிச் சைவ சமயஸ்தாபனஞ் செய்ய வல்ல உயர்வொப்பில்லாத ஒரு சற்புத்திரரைப் பெறும் பொருட்டு, மிகுந்த அன்பினோடு தவஞ்செய்தார்.



(தொடரும்)

கலாநிதி சிவஸ்ரீ
கு.வை.க. வைத்தீஸ்வர குருக்கள்
தலைவர், இந்துக் குருமார் அமைப்பு.

# தைப்பூசத் திருநாளில் தொட்டதெல்லாம் துலங்கும்



தைப்பூச நாளில் சுப காரியங்கள் செய்தால் தம்பதிகள் வாழ்வில் எல்லா வளமும் பெற்று நலமுடன் வாழ்வர் என்பது நம்பிக்கை.

தைப் பூசத்தன்று சூரியனின் ஏழாம் பார்வை சந்திரனின் வீடான கடகத்திலும், சந்திரனின் ஏழாம் பார்வை சூரியனின் மகர வீட்டிலும் விழுகிறது. இது மிகவும் உயர்ந்த நிலையாகும். சூரியனால் ஆத்ம பலமும் சந்திரனால் மனோபலமும் கிடைக்கிறது. தைப்பூச தினத்தன்று சிவாலயங்களில் வழிபாடு செய்தால் கணவன், மனைவி இடையே அன்பு அதிகரிக்கும். ஒரு நாளும் உனை மறவாத பிரியாத வரம் வேண்டும் என்று கேட்டு பெறலாம்.

தமிழ் கடவுளான முருகப்பெருமானுக்கு பல்வேறு விழாக்கள் எடுத்தாலும் தைப்பூசம் தனி சிறப்பம்சம் கொண்டது. முருகப்பெருமானின் அருள் பெற இருக்கும் விரதங்களில் தைப்பூசம் விரதமே முதன்மையானதாக கருதப்படுகிறது. தைப்பூசத்தன்று பழனி முருகனின் அபிஷேக ஆராதனையை தரிசிப்பதால் நம்முடைய சகல பாவங்களும் தீரும். மேலும் இந்த நன்னாளில் சுப காரியங்கள், செய்தால் தம்பதிகள் வாழ்வில் எல்லா வளமும் நலமும் கிடைக்கும்.

தைப்பூசத்தன்று அதிகாலையில் எழுந்து குளித்து விட்டு, திருநீறு, உத்திராட்சம் அணிந்து சிவபெருமானை வழிபட வேண்டும். தேவாரம், திருவாசகம் போன்றவற்றைப் பாராயணம் செய்யலாம். உணவு உண்ணாமல் 3 வேளைகளிலும் பால், பழம் சாப்பிடலாம். மாலையில் கோவிலுக்குச் சென்று சிவ பூஜையில் பங்கேற்று சிவனை தரிசித்து விரதத்தை நிறைவு செய்யலாம்.

முருகனை வழிபடும் சமயத்தில் முருக வேலையும் சேர்த்து வழிபடுவது நல்லது. முடிந்தால் காலை மாலை என இருவேளையும் முருகன் கோவிலுக்கு சென்று வழிபடலாம். இந்த நாளில் குரு பகவானையும், சிவபெருமானையும், முருகப் பெருமானையும் வழிபடுவது மிகுந்த விசேஷமாகும்.

முருக பக்தர்கள் பலர் தைப்பூச விரதத்தை 48 நாட்கள் இருப்பது வழக்கம். மார்கழி மாதத்தில் தொடங்கி தைப்பூசம் வரை விரதம் இருப்பது வழக்கம். தைப்பூசத் திருநாளில் தொட்டதெல்லாம் துலங்கும் என்றொரு பழமொழி உண்டு.

சைவ மஞ்சரி

## கம்பளை கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தில் தைப்பூசம்

கம்பளை பிரதான வீதியில் அமைந்திருக்கும் நாட்டுக்கோட்டை நகரத்தார் திருவருள்மிகு ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி தேவஸ்தானத்தின் 2024 தைப்பூச மஹோற்சவம் 23.1.24திரயோயசி திதியும் திருவாதிரை நட்சத்திரமும் சித்த யோகமும் கூடிய சுப தினத்தில் நடைபெறவுள்ளது. தைப்பூச உற்சவம் ஆரம்பமாகி மூன்று தினங்கள் விசேட அலங்கார பூஜைகள் நடைபெற திருவருள் கூடியுள்ளது. 23.01.24 அதிகாலை 5.30,மணிக்கு மகாவலி கங்கையில் தீர்த்தம் எடுத்தல் இடம்பெறும். அன்று காலை 8.00 மணிக்கு அஷ்டோத்தர சங்காபிஷேகம் (108) நடைபெற்று , பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜையை தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். மாலை 6.30மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜையை தொடர்ந்து சுவாமி உள்வீதி உலா நடைபெற்று திருவருட் பிரசாதம் வழங்கப்படும்.

24.1.24 காலை 8.00 மணிக்கு அஷ்டேரத்தர சத சங்காபிஷேகம் (108) நடைபெற்று, பகல் 12.00 மணிக்கு மகேஸ்வர பூஜையைத் தொடர்ந்து அன்னதானம் வழங்கப்படும். மாலை 6.30, மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து சுவாமி உள் வீதி உலா நடைபெற்று திருவருட் பிரசாதம் வழங்கப்படும். 25.01.24 ஆம் திகதி காலை 8.00 மணிக்கு அஷ்டோத்திர சத சங்காபிஷேகம் (108) நடை பெறும். அன்று மாலை 4.00மணிக்கு ஆலயத்தில் காவடி பொங்கல் பூஜையை நடைபெறும். மாலை 6.00 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜையைத் தொடர்ந்து காவடி உள் வீதி உலா நடைபெறும். மாலை 6.00 மணிக்கு விசேட வசந்த மண்டப பூஜை தொடர்ந்து ஸ்ரீ விநாயகர் ஸ்ரீவள்ளி ஸ்ரீ தேவயானி சமேத ஸ்ரீ கதிர்வேலாயுத சுவாமி திருதேர் பவனி நடைபெறும்.

டி.வசந்தகுமார்
நாவலப்பிட்டி சுழற்சி நிருபர்

## யுகரிஷியின் ஆன்மிகச் சிந்தனைகள்

### அத்தியாயம் 72



உறுதியில்லாத மனிதன் பிறரைச் சார்ந்தே இருப்பான். தன் புத்தியையும் நம்ப மாட்டான்; தன் முடிவிலும் நிலையாக இருக்க மாட்டான். உறுதியான நிலைப்பாடு இல்லாமலும். ஒருமுகப் படுத்திய மனநிலைமை இல்லாமையினாலும் மனிதன் பலவிதமான இன்னலுக்கு ஆளாகிறான். இதனால், தன் ஆற்றல் முழுவதையும் இழக்கிறான். எந்த ஒரு செயலிலும் வெற்றியடைய, ஒருமுகப் படுத்தப்பட்ட ஆற்றல் மிகவும் இன்றியமையாதது ஆகும்.

வெற்றி அடைவதில் உறுதி கொள்ள வேண்டும். தெளிவான ஒரு முடிவு எடுத்த பின் அதை நிறைவேற்றுவதில் நம் ஆற்றல் முழுவதையும் செலவிட வேண்டும். எந்த ஒரு செயலையும் முடிவெடுப்பதற்கு முன் தனது நலம் விரும்பிகள். நண்பர்கள். அறிவு ஜீவிகள் என் பலரிடமும் எத்தனை முறை வேண்டுமானாலும் ஆலோசிக்கலாம். ஆனால் முடிவெடுத்த பின்னர், தயங்காமல் அச்செயலை முடித்து வெற்றி காண்பது ஒன்றே தன் முழு மூச்சாகக் கொள்ள வேண்டும். தனது தகுதி. தன்னுடைய திறமை ஆகியவற்றின் அடிப்படையில் தன்னம்பிக்கையுடன் செயல் புரிந்தால் வெற்றி நிச்சயம்.

இவ்வாறு தாம் மேற்கொண்ட செயல்களை துணிச்சலுடனும், கொள்கை உறுதியுடனும் தன்னம்பிக்கையுடனும். ஆண்மையுடனும் புரிவது கடமையாகும். அதன் பலனை ஆண்டவனிடத்தில் விட்டு விட வேண்டும் செயல்படுத்துவது மட்டுமே நாமாக வேண்டும். கடவுள் நிச்சயம் நமக்கு முன்னேற்றத்தை தருவார். நாம் விரும்பிய வாழ்க்கையை நமக்குத் தருவார்.

சுயநலத்துடன் தனக்காக மட்டுமே வாழ்வது என்பது. மனித வாழ்க்கைக்கு உகந்தது ஆகாது. சுயநலத்துடன் பிறந்து, சுய நலத்துடன் வளர்ந்து, தான் மட்டுமே உண்டு. உடுத்தி வாழ்பவன் வாழ்க்கையில் வெற்றி பெற்றது போல் தெரிந்தாலும், உண்மையில் அவன் தோற்றுப் போனவனே ஆவான்.

மற்றவர்களுக்கு உதவி புரிந்து வாழ்வதே. இப்படைப்பின் நோக்கமாகும். நீர்கடலிருந்து நீராவியாகி, மழை தரும் மேகம் உருமாறி தவித்த பூமிக்கு மழையாக பொழிந்து, பிறர் நலம் பேணுகிறது. பூமியில் பெய்த மழைநீர் நதிகளாகி, கடலின் மகத்துவத்தை உணர்ந்து அதனுடன் சங்கமிக்கின்றன.

மற்றவர்களை இன்பமூட்டவே காற்றும் செயலாற்றுகிறது. சூரியன். சந்திரன். நக்ஷத்திரங்கள் அல்லும் பகலும் ஒளிவீசுவதும் தனக்காக அல்ல: பிறருக்காக இவ்வாறு இயற்கைகள் யாவும், பிறர் நலம் பேணும் போது மனிதன் மட்டும் சுயநலத்துடன் செயல்படுவது தகுமா?










இறக்குவானை அருள்மிகு ஸ்ரீமுத்துமாரியம்மன் தேவஸ்தானத்தின் மகா கும்பாபிஷேகம் சிவஸ்ரீ வை. சுப்பிரமணிய குருக்கள் தலைமையில் நேற்று நடைபெற்றது. படங்கள் எஸ். ராமதாஸ்

## அறநெறி அறிவுநொடி



கே. ஈஸ்வரலிங்கம்
தமிழர் நற்பணி மன்றத் தலைவர்

அகத்திய முனிவருக்குத் தமிழை தந்தவர் யார்?
முருகப் பெருமான்
குமர குருபரருக்கு பேசும் திறனை தந்தவர் யார்?
முருகப் பெருமான்
முத்துசாமி தீட்சிதருக்குப் பாடும் வல்லமையை தந்தவர் யார்?
முருகப் பெருமான்
ஔவை பிராட்டிக்கு ஞானத்தைத் தந்தவர் யார்?
முருகப் பெருமான்
ஆறுமுகன் என்பது யாரை?
முருகப் பெருமானை
அங்காரக சொரூபன் என்பது யாரை?
முருகப் பெருமானை
ஜோதிட சாஸ்திரத்தில் அங்காரகன் என்பது யாரை?
முருகப் பெருமானை
பூமிநாதன் என்பது யாரை?
முருகப் பெருமானை
தன்னை வணங்குவோருக்கு பூமியையும் பூமி சார்ந்த செல்வத்தையும் தந்து அருளுகிறான் யார்?
முருகப் பெருமான்
முருக பக்தர்களது ஜபமந்திரம் எது?
'சரவணபவ' என்பதே

## தைப்பூசம் தோன்றிய கதை

சிவ பெருமான், நடராஜராக தனித்து ஆனந்த தாண்டவம் ஆடிய நாள், மார்கழி மாதத்தில் வரும் திருவாதிரை. இந்த நடனத்தை பிரம்மா, விஷ்ணு, பதஞ்சலி, வியாக்ரபாதர் ஆகியோருக்காக சிதம்பரத்தில் சிவ பெருமான் அரங்கேற்றினார். இந்த நடனத்தை பார்வதி தேவியும் ரசித்துக் கொண்டிருந்தார். சிவ பெருமானின் ஆனந்த தாண்டவத்தை கண்ட சிவகாமிக்கும் அதே போன்று தாண்டவமாட ஆசை வந்தது. சிவ பெருமானைப் போன்று அன்னையின் நடனத்தையும் காண பிரம்மா, விஷ்ணு உள்ளிட்டோர் ஆர்வம் கொண்டனர். முனிவர்கள், தேவர்கள் உள்ளிட்டோரின் ஆசையையும் நிறைவேற்ற எண்ணிய அம்பிகை ஆனந்த தாண்டவம் நிகழ்த்திய நாள் தைப்பூச திருநாளாகும்.

சிவ பெருமான் ஆனந்த தாண்டவம் நிகழ்த்திய நாள் திருவாதிரை என கொண்டாடப்படுவதை போல், அம்பாள் நடனமாடிய திருநாள் தைப்பூசம் என கொண்டாடப்பட்டது. அதனால் இந்த நாள் அம்பிகை வழிபாட்டிற்குரிய நாளாக மாறியது.





கண்டி மகியாவ ஐயப்ப சேவா சங்கத்தில் மாலை அணிந்த சாமிகள் இருமுடி கட்டி சபரிமலை யாத்திரை மேற்கொண்டு சென்றபோது பிடிக்கப்பட்ட படங்கள். (படங்கள் : கண்டி மு . தீபன்)





கொழும்பு 13, ஜெம்பட்டாவீதி அருள்மிகு ஸ்ரீ முனீஸ்வரர் முத்துமாரியம்மன் தேவஸ்தான வருடாந்த வருஷாபிஷேகம் வெகு சிறப்பாக நேற்று நடைபெற்றது. வருஷாபிஷேகமும் 108 சங்காபிஷேகமும் வியாழக்கிழமை நடைபெற்றது. பூஜை வழிபாடுகள் தேவஸ்தான பிரதமகுரு சிவஸ்ரீ சிவனேசன் சிவாச்சாரியார் தலைமையில் நடைபெற்றது. (படம் கொழும்பு தினகரன் நிருபர்)

## பொருளாதார மறுசீரமைப்பின்...

பலன்கள் எதிர்காலத்தில் மக்களுக்கு கிடைக்குமென, தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு தெற்கு பொலிஸ் பிரிவின் சமூக பொலிஸ் குழுக்களைத் தெளிவூட்டும் வகையில் கொழும்பு நெலும் பொக்குன கலையரங்கத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிகழ்விலேயே அவர் இதனைத் தெரிவித்தார். நாட்டை முன்னேற்றும் போது சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

நாட்டின் முன்னேற்றத்திற்கு சட்டத்தையும் சமாதானத்தையும் பாதுகாக்க வேண்டியது அவசியமாகும். மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய சூழலை உருவாக்க வேண்டும். அதேபோல் முதலீட்டாளர்கள், வர்த்தகர்கள் தமது செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழலையும் உருவாக்க வேண்டும். எதிர்கால சந்ததியின் பாதுகாப்பிற்கு சட்டமும் சமாதானமும் வலுவூட்டப்பட வேண்டியது அவசியம். அபிவிருத்தி அடைந்த நாடுகளில் சட்டம், சமாதானம் தொடர்பிலான வெளிப்படைத் தன்மை காணப்படுகிறது. இதற்கு அவசியமான மூலதனங்களான மனித வளம், தொழில்நுட்பம் தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்படுகிறது. நாம், அதே நிலைக்குச் செல்ல வேண்டும்.

பொருளாதாரம் சரிவடைந்து கிடந்த நிலையிலேயே ஆட்சிப் பொறுப்பை நாம், ஏற்றுக்கொண்டோம். இரு வருடங்களுக்கு முன்பு நாடு இருந்த நிலைமையை பலரும் மறந்துவிட்டனர். நாட்டுக்குள் எரிபொருள் வரிசை காணப்பட்டது. எரிவாயுவுக்கு வரிசை காணப்பட்டது. மருந்து பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவியது.

ஆனால் இன்று நாடு இயல்பு நிலைக்கு திரும்பியுள்ளது. பொருளாதார ரீதியில் நெருக்கடிகள் இருந்தாலும், அடுத்த நாளை எவ்வாறு கடத்துவது என்ற கேள்விக்குரியான நிலைமை இல்லாமல் போயுள்ளது.

தற்போது நிலைப்படுத்தப்பட்டுள்ள நாட்டின் பொருளாதாரத்தை துரிதமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய பொறுப்பு எம்மை சார்ந்திருக்கிறது. இதற்கமைய முதல் இரு வருடங்களும் நாட்டின்பொருளாதாரத்தை நிலைப்படுத்துவதற்காக செலவிடப்பட்டது. நாட்டு மக்களும் அதற்கு பெருமளவில் பங்களிப்பு செய்தனர். அந்த பயணத்தின் அடுத்த கட்டத்தையும் கவனமாகவே தொடர வேண்டும். நெருக்கடிகளை எதிர்கொண்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்க ஆரம்பித்துள்ளோம். சரிவடைந்த விவசாயத்துறையை மீள கட்டியெழுப்பும் வகையில் உரக் கொள்கைளை மாற்றியுள்ளோம்.

## உலகளாவிய நிதி கட்டமைப்பு...

பரஸ்பர ஒத்துழைப்பு உள்ளிட்ட ஐக்கிய நாடுகளின் அமைப்பிற்குள் சர்வதேச பொருளாதார பிரச்சினைகளை கூட்டாக ஆராய்வதற்கும் வாய்ப்பு வழங்குகிறது.

வர்த்தகம், முதலீடு, நிலையான வளர்ச்சி, காலநிலை மாற்றம், வறுமை ஒழிப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரம் உள்ளிட்ட துறைகளில் அதன் 134 உறுப்பு நாடுகளுக்கு இடையே ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கத்துடன் அதன் 3 ஆவது தென்துருவ நாடுகளின் மாநாடு 'யாரையும் கைவிட மாட்டோம்' என்ற தொனிப்பொருளின் கீழ் கூட்டப்பட்டது.

G77 மற்றும் சீன மாநாட்டின் தலைமைப் பதவியை முன்பு கியூபா வகித்ததோடு இம்முறை அது உகாண்டாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்த மாநாட்டில் மாநாட்டில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆற்றிய முழு உரை வருமாறு:

03 ஆவது தென்துருவ நாடுகளின் மாநாட்டை நடத்தி, "G77 மற்றும் சீனா" குழுவின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ள உகாண்டா ஜனாதிபதி யோவேரி முசெவேனிக்கும் உகாண்டா அரசாங்கத்திற்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன்.

மேலும், கடந்த ஆண்டில் "G77 மற்றும் சீனா" குழுவிற்கு வழங்கப்பட்ட பயனுள்ள மற்றும் உறுதியான தலைமைக்கு கியூபாவுக்கு நன்றி தெரிவிக்க விரும்புகிறேன்.

'தற்போதைய வளர்ச்சிக்கான சவால்கள்' என்ற தலைப்பில் கியூபா ஜனாதிபதி மிகுவல் டியாஸ்கனெலினால் 2023 செப்டம்பரில் ஹவானாவில் கூட்டப்பட்ட அரச தலைவர்கள் மாநாட்டில் பங்கேற்கவும் ஹவானா பிரகடனத்தை நிறைவேற்றவும் பங்களிக்க முடிந்தமை குறித்து நான் மகிழ்ச்சியடைகிறேன். G77 மற்றும் சீனா குழு உருவாகி 60 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், வளர்ந்து வரும் நாடுகளின் மிகப்பெரிய குழுவாக ஒன்றிணைந்து செயல்படுவதும் , நாம் எதிர்கொள்ளும் பல சவால்களை சமாளிக்க உலகளாவிய தெற்கின் நிலைப்பாட்டை தொடர்ந்து வெளிப்படுத்துவதும் இன்றியமையாதது. G77 மற்றும் சீனாவின் ஸ்தாபகக் கொள்கைகளான ஒற்றுமை, ஒத்துழைப்பு மற்றும் தடைகளின் நிலையான குறைப்பு என்பன நாம் ஒன்றிணைந்து செயல்படக்கூடிய உறுதியான அடித்தளத்தை உருவாக்குகின்றன.

இன்று உலகம் பல சவால்களை எதிர்கொண்டிருக்கும் வேளையில் நாம் இங்கு சந்திக்கிறோம். மோதல்களின் அதிகரிப்பு, தொற்றுநோய்களின் விளைவுகள், காலநிலை தொடர்பான இயற்கை பேரழிவுகள் மற்றும் உலகளாவிய நிதிச் சந்தைகளில் ஏற்படும் மாற்றங்கள் போன்ற பலவற்றினால் இந்த நிலைமைகள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. வளர்ந்து வரும் இந்த நிலைமைகள், G77 உறுப்பு நாடுகளின் பாதிக்கப்படக்கூடிய பொருளாதாரங்களில் சமமற்றதாகவும் பாதகமாகவும் பாதிப்பை ஏற்படுத்தும். மேலும், உலக நிதிக் கட்டமைப்பை முன்னெப்போதையும் விட இப்போது மறுசீரமைக்கப்பட வேண்டிய அவசரத் தேவை உள்ளது. பெரிஸ் கிளப் மற்றும் லண்டன் கிளப் ஆகியவற்றால் ஆதிக்கம் செலுத்தப்பட்ட உலகத்திற்கே நவீன சர்வதேச கடன் தீர்வு மாதிரி மிகவும் பொருத்தமானது. இன்று, உலகளாவிய கடன், குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளின் கடன், பெரிஸ் கிளப் மற்றும் சர்வதேச பிணைமுறிச் சந்தையினால் கட்டுப்படுத்தப்படுகிறது.

கையிருப்பிலிருக்கும் நிதி வளங்களை கடன் சேவைகளாகப் பெற்றுக்கொள்ளும் போது பொதுத் தேவைகள், மனித அபிவிருத்திச் செயற்பாடுகள் ஆகியவற்றுக்குத் தேவையான செலவுகளுக்கான நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாமல் இருக்கிறது. இதனால் நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதில் இந்த விடயம் தாக்கம் செலுத்துகிறது. தற்போது காணப்படும் பொது வரைவு விரைவில் கடன் தீர்வுகளைப் பெற்றுத் தருவதற்கு போதுமானதாக இல்லை. மேற்படி வரைவு மற்றும் நடைமுறையில் காணப்படும் பொருத்தமற்ற தன்மைகள் காரணமாக இலங்கை உள்ளடங்களாக நமது நாடுகள் அனைத்தும் அரச கடன் நெருக்கடிகளை நிவர்த்திப்பதற்கான முயற்சிகளை தாமதிக்க வேண்டியுள்ளது.

காலநிலை அனர்த்தங்களை மட்டுப்படுத்தல் மற்றும் அவற்றுக்கு ஏற்ப இசைவாக்கம் அடைதலுக்காக தென் துருவ நாடுகளின் தேவைகளைத் தீர்ப்பதற்கான செயற்பாடுகளில் உலக நிதிக் கட்டமைப்பில் பாரிய தோல்விகளைக் காணக்கூடியதாக உள்ளது. காலநிலை நிதி ஒத்துழைப்புக்கள் தொடர்பில் பல்வேறு உலக கலந்துரையாடல்களில் குறிப்பிடப்பட்டிருந்தாலும் அவற்றைப் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலைமை தற்போது வரையில் ஏற்படவில்லை.

டுபாய் COP28 மாநாட்டில் காலநிலை வெப்ப வலய முன்மொழிவைச் சமர்பித்தோம். அரச நிதியளித்தல் செயற்பாடுகளின் குறைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு உயிரியல் பல்வகைத்தன்மை மற்றும் எமது கடல் மற்றும் வன, வளங்கள் உள்ளிட்ட உலக அளவிலான பொது வளங்களை மேம்படுத்துவதற்கான முதலீடுகளை ஈர்க்கும் நோக்கில் அந்த முன்மொழிவு சமர்பிக்கப்பட்டது. இன்றளவில் உலக வர்த்தக ஒழுங்குபடுத்தலுக்குள் பொருளாதார அபிவிருத்தியை ஏற்படுத்த பயன்படுத்தப்படும் வளங்களின் அளவு குறைவதுடன் சுற்றாடல் பாதிப்பை மட்டுப்படுத்துதல், பாதிப்புக்களை தவிர்த்தல் போன்ற பாதுகாப்பான எண்ணக்கருக்களுடன் கூடிய எழுச்சியைக் காண முடிகிறது.

உலக வர்த்தக கட்டமைப்புக்குள் ஒருதலைப்பட்சமான மாற்றங்கள் நிகழக்கூடாது. அவ்வாறான தீர்மானங்களை ஒன்று அல்லது இரண்டு தலைநகரங்களை மாத்திரம் மையப்படுத்தியதாக மேற்கொள்வதை விடுத்து பலதரப்பு கலந்துரையாடல் ஊடாகவே செய்ய வேண்டும்.

நாம் உலக பொருளாதாரம் மற்றும் முதலீடுகளின் இலகுத் தன்மை, உயர்ந்தபட்ச செயற்திறன் ஆகியவற்றை உறுதிப்படுத்த வேண்டும். G77 அமைப்பு இந்த செயற்பாடுகளை பிரிக்ஸ் அமைப்பு நாடுகளுடன் ஒருங்கிணைக்க வேண்டும். அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் பொருளாதாரத்தில் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவது மற்றுமொரு நெருக்கடியாக அமைந்திருக்கிறது. "தொழில்நுட்ப மாற்றம், உற்பத்தி திறன் ஆகியன, மூலதனத்தை மிகவும் தீவிரமாக்கியுள்ளதுடன் குறைந்தபட்ச உழைப்பையை எதிர்பார்க்கிறது" என்ற ஜோசப் ஸ்டிக்லிடிஸின் கருத்து அதனை சரியாக விளக்குகிறது.

அதற்காக உலக நிதி கட்டமைப்பின் மறுசீரமைப்பை வலியுறுத்தும் அதேநேரம், G77 மற்றும் சீனா உள்ளிட்ட குழுக்கள் எமது அங்கத்துவ நாடுகளுக்கு, வலுசக்தி மற்றும் டிஜிட்டல் பரிமாற்றம், பசுமை பொருளாதாரம் மற்றும் புதிய உலக பொருளாதாரத்திற்காக பயிற்றுவிக்கப்பட்ட தொழில் படையைத் தயார்படுத்த வேண்டும்.

இலங்கை, G77 மற்றும் சீனா உள்ளிட்ட குழுக்கள் இணைந்து, நீதியானதும், சட்டத்திற்கு மதிப்பளிப்பதும், சமத்துவமானதுமான உலகிற்கான நோக்கை அடைந்து கொள்ளவும் பல தரப்பு கூட்டுத் தேவைகளைத் தொடர்ச்சியாக முன்னெடுத்துச் செல்வதற்கும் புதிய தலைமைத்துவத்தை ஏற்றுகொண்டிருக்கும் யொவேரி முசேவேனியின் தலைமைத்துவத்தின் மீது நம்பிக்கை கொண்டுள்ளோம்.

எனது உத்தியோபூர்வ விஜயத்தின் போது உகண்டா ஜனாதிபதி எனக்கும் எனது தூதுக்குழுவினருக்கும் அளித்த சிநேகபூர்வமான வரவேற்புக்கு நன்றி கூறி எனது உரையை நிறைவு செய்கிறேன்.'' என்று ஜனாதிபதி தெரிவித்தார்.

## இலங்கை தமிழரசு கட்சி...

நடைபெற்ற புதிய தலைவர் தெரிவுக்கு, ஏற்பாட்டுக் குழு நியமிக்கப்பட்டு வாக்கெடுப்புக்கு தயார்படுத்தப்பட்டிருந்தது.

காலை 10.15 மணியளவில் ஆரம்பமான வாக்கெடுப்பில் ஒவ்வொரு மாவட்டத்திலும் இருந்து கலந்து கொண்டிருந்த பிரதேசக் கிளைகளின் தலைவர், செயலாளர் பொருளாளர், மற்றும் உப தலைவர் உபசெயலாளர் ஆகியோரே வாக்கெடுப்புக்கு தகுதி பெற்றிருந்தனர். வாக்கெடுப்பில் வாக்குகள் எண்ணப்பட்டு தலைவர் மாவை சேனாதிராஜாவினால் முடிவுகள் அறிவிக்கபட்டது. பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் 137 வாக்குகள் பெற்றிருந்தார். பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் 184 வாக்குகளை பெற்றார். புதிய தலைவராக தெரிவே செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் கருத்துத் தெரிவிக்கும் போது, உள்ளக ஜனநாயகத்தை நிரூபித்த கட்சிக்கும் இன்றைய தெரிவு முறைக்கும் அதற்காக உழைத்த சகலருக்கும் நன்றி தெரிவித்தார். மேலும் தலைவர் பதவியானது வடக்கு மாகாணத்துக்கு கிடைத்துள்ளமையை தொடர்ந்து செயலாளர் பதவி கிழக்கு மாகாணத்துக்கு கிடைக்க வேண்டும். எனவே இது தொடர்பாக எதிர்வரும் 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெறவுள்ள 17ஆவது தேசிய மாநாடு பொதுச்சபைக் கூட்டத்தில் தீர்மானம் எடுக்கப்படுமென தெரிவித்தார். முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சீனித்தம்பி யோகேஸ்வரன், வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. அவருக்கு வாக்குகள் எதுவும் கிடைக்கவில்லை, எனினும் வாக்களிப்புக்கு முன்னதாக, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனுக்கு தாம், ஆதரவு தெரிவிப்பதாக அறிவித்திருந்தார்.

## VAT விலக்களிக்கப்பட்ட...

வருவதாக போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்த்தன தெரிவித்தார். இதன்படி, தெரிவு செய்யப்பட்ட இடங்களில் VAT வரியிலிருந்து விலக்களிக்கப்பட்ட 46 வகையான பொருட்களை விற்பனை செய்ய தலா 46 விற்பனை கூடங்களை அமைக்க எதிர்பார்ப்பதாக தெரிவித்த அமைச்சர், சில சமயங்களில் ஒரு கடையில் பல பொருட்களை விற்பனை செய்ய நேரிடலாமென்றும் கூறினார்.

அத்தியாவசிய நுகர்வுப் பொருட்களுக்கு கூட 18 வீதம் வரி அறவிடுவதாக பொய்ப் பிரச்சாரம் செய்து, சில அரசியல்வாதிகளும் சில மோசடி வியாபாரிகளும் விலைவாசியை உயர்த்தி நுகர்வோரை சுரண்டுவதாகத் தகவல் கிடைத்ததையடுத்தது. இதற்கு மாற்று நடவடிக்கையாக இந்த விற்பனை நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுத்து வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

இதன்படி வீதி அபிவிருத்தி அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகாரசபை, தேசிய தொலைக்காட்சி மற்றும் லேக் ஹவுஸ் ஆகியவற்றின் பணிப்பாளர்கள் அடங்கிய குழுவினால் VAT இல்லா பொருட்களை விற்பனை செய்யக்கூடிய இடங்களை அடையாளம் காணுமாறு போக்குவரத்து அமைச்சின் செயலாளர் கலாநிதி ரஞ்சித் ரூபசிங்கவுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இதன்மூலம் அரிசி, தேங்காய், மீன், கோதுமை மா, மரக்கறி வகைகள், பழங்கள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மருந்துகள், இளநீர் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் அடங்கிய விற்பனை நிலையங்கள் மூலம் மக்கள் VAT இல்லா பொருட்களை சலுகை விலையில் கொள்வனவு செய்வதற்கான வாய்ப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

நியாயமான வர்த்தகத்தில் சிறந்து விளங்கும் தனியார் துறை தொழில்முனைவோருக்கு இந்த விற்பனை நிலையங்கள் வழங்கப்படும். வாடகை அடிப்படையில் காலை 10.00 மணி முதல் இரவு 10.00 மணி வரை விற்பனை நிலையங்களை நடத்துவதற்கு சந்தர்ப்பம் வழங்கப்படவுள்ளது.

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பயன்பாட்டிலில்லாத வளங்களை முழுமையாகப் பயன்படுத்தி, வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் வருமானத்தைப் பெருக்கிக் கொள்வதற்கான சந்தர்ப்பம் உருவாகுமென அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## ஆபிரிக்காவுடனான உறவை...

அமைவான இலங்கையின் புதிய பொருளாதார பயணத்துக்காக, ஆபிரிக்க நாடுகளின் முதலீடுகளை ஈர்ப்பதற்கான பின்னணி உருவாகியிருப்பதாகவும் அமைச்சர் தெரிவித்தார். அணிசேரா நாடுகளின் 19 ஆவது அரச தலைவர்கள் மாநாடு சீனா மற்றும் தென் துருவத்தில் அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளின் மாநாட்டில் பங்கேற்பதற்காக உகண்டாவுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கொண்டுள்ள உத்தியோகபூர்வ விஜயம் தொடர்பில் கருத்து தெரிவிக்கும் போதே வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் அலி சப்ரி மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

"அணிசேரா நாடுகளின் மாநாட்டில் நேற்றைய தினம் உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, உலகளாவிய பிரச்சினைகள், காசா பகுதியின் நிலவரம், இஸ்ரேல் பாலஸ்தீன நிலவரம், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் எதிர்காலத்தில் மேற்கொள்ள வேண்டிய தீர்மானங்கள், கடன் சுமையில் முடங்கிக் கிடக்கும் தரப்பினரை மீட்பதற்கான முன்னெடுப்புகள், காலநிலை அனர்த்தம் உள்ளிட்ட விடயங்கள் தொடர்பில் உரையாற்றினார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இந்த உரையை வெளிநாட்டு பிரதிநிகள் பாராட்டினர். இதற்கு இணையாக ஆபிரிக்க வலயத்தின் தென் துருவ நாடுகளின் தலைவர்களையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சந்தித்து கலந்துரையாடினார். மாநாட்டை நடத்திய உகண்டாவின் ஜனாதிபதி, எத்தியோப்பிய பிரதமர், பெனின் குடியரசின் உப ஜனாதிபதி, பஹாமாஸ் பிரதமர், இந்திய வெளிவிவகார அமைச்சர் ஆகியோரை ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்க சந்தித்திருந்தார். மேலும் இந்த நாடுகளுடனான இருதரப்பு உறவுகளை பலப்படுத்திகொள்வது தொடர்பிலும் அவர் கலந்துரையாடினார். பெருமளவில் பேசப்படாத, 1.3 பில்லியன் மக்கள் தொகை கொண்ட, எதிர்காலத்தில் மிக வேகமாக வளர்ச்சியடையும் என்று உலகம் எதிர்பார்க்கும் ஆபிரிக்க நாடுகளுடனான உறவுகளை வலுப்படுத்த இந்தப் பயணம் வித்திட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் இலங்கை அடைந்து வரும் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதற்கு ஜனாதிபதியின் பங்களிப்பு ஆகியன இதன்போது அனைவராலும் பாராட்டப்பட்டது. ஜனாதிபதி நாட்டைப் பொறுப்பேற்பதற்கு முன்னர், இந்நாடு இருந்த நிலைமையுடன் ஒப்பிடுகையில் இன்று இலங்கை அடைந்துள்ள முன்னேற்றத்தை அனைவரும் பாராட்டினர்.

மேலும், இம்முறை அணிசேரா நாடுகளின் மாநாட்டின் ஊடாக, இலங்கையின் தற்போதைய நிலைமை குறித்த உண்மைகளை சர்வதேச சமூகத்துக்கு முன்வைக்கும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்தது. அத்துடன், ஆபிரிக்க பிராந்தியத்தில் உள்ள பல நாடுகளுடன் இருதரப்பு உறவுகளை வளர்த்துக்கொள்ள ஜனாதிபதியின் இந்த விஜயம் உதவியது என்றே கூற வேண்டும்என்றார்.

## புங்குடுதீவு மாணவி...

நீதிமன்ற நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் கடந்த (09) அழைக்கப்பட்டது. இதன்போது, இந்த வழக்கு தொடர்பான சிங்கள மொழிபெயர்ப்பு பிரதிகளை சட்ட மா அதிபரிடம் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மனுதாரர்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது. இதனையடுத்து, மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையை இன்று எடுத்துக்கொள்வதற்கு நீதியரசர்கள் குழாம் உத்தரவிட்டது. 2015 ஆம் ஆண்டில், யாழ். வித்தியா என்ற 18 வயது பாடசாலை மாணவி கடத்தப்பட்டு வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்யப்பட்ட சம்பவம் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. இந்த வழக்கு தொடர்பில் குற்றஞ்சாட்டப்பட்ட 07 பேருக்கு 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 27 இல், யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தின் மூவரடங்கிய நீதிபதிகள் குழாம் மரண தண்டனை விதித்தது. தமக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ள விதம் சட்டத்துக்கு முரணானதென பிரதிவாதிகள் தெரிவித்துள்ளனர். இதன்படி, குற்றச்சாட்டிலிருந்து தம்மை விடுவிக்குமாறு கோரி பிரதிவாதிகள் உயர் நீதிமன்றத்தில் மேன்முறையீட்டு மனுக்களை தாக்கல் செய்திருந்தனர்.

## சுதந்திர தின நிகழ்வில்...

சந்திப்புகளை நாட்டில் முன்னெடுத்திருந்தார். இதில், சுதந்திர தின நிகழ்வு ஏற்பாடுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. இதன்போதே சுதந்திர தினத்தின் விசேட விருந்தினராக தாய்லாந்து பிரதமரை அழைத்துள்ளமை குறித்து தகவல் வெளியிட்டார்.

இலங்கையின் வரலாற்றை எடுத்துரைக்கும் வகையில் நினைவு பதிப்பொன்றை அச்சிட்டு வழங்கவும் ஜனாதிபதி ஆலோசனை வழங்கினார். இதேவேளை சுதந்திர தினத்தை 'புதிய நாட்டை கட்டியெழுப்புவோம்' என்ற தொனிப்பொருளில் அனுஷ்டிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

தாய்லாந்து பிரதமர் ஸ்ரேத்தா தவிசின் தலைமையிலான உயர் மட்ட குழுவினரின் இலங்கை விஜயத்தின் போது , இரு நாடுகளுக்கு இடையிலான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் கைச்சாத்திடப்படவுள்ளது.

இந்தியா, பாகிஸ்தான் மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளுடனான ஒப்பந்தங்களைத் தொடர்ந்து இது, இலங்கையின் நான்காவது சுதந்திர வர்த்தக ஒப்பந்தமாகும். இதனூடக தேயிலை, தேங்காய்ப்பால் மற்றும் ஆடை உற்பத்தி போன்ற முக்கிய ஏற்றுமதிகளில், தாய்லாந்து சந்தையில் வரி இல்லாத அணுகலை இலங்கை பெறும்.

தாய்லாந்து உடனான சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் தொடர்பாக இதுவரையில் இருதரப்பினருக்கும் இடையில் எட்டு சுற்று பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு இறுதி இலக்கை அடைந்துள்ளன. மறுபுறம் இந்தியாவுடன் காலதாமதமான பொருளாதார மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கும், சீனாவுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் குறித்த பேச்சுவார்த்தைகளுக்கு மத்தியில் தாய்லாந்துடனான ஒப்பந்தம் சிறப்பாக முடிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு தாய்லாந்து மிகவும் நெகிழ்வான மற்றும் புரிதலுடன் செயல்பட்டமை உள்ளிட்ட இரு நாடுகளுக்கு இடையிலான கலாச்சார இணைப்புகள் முக்கியத்துவம் பெற்றிருந்ததாக பொருளாதார நிபுணர்கள் சுட்டிக்காட்டினர்.

எவ்வாறாயினும் ஒப்பந்தத்தின் பின்னர் பல ஏற்றுமதி பொருட்களுக்கான தாய்லாந்து சந்தையில் உடனடி வரியில்லா அணுகலை இலங்கை பெறுகிறது.

## கேம்பிரிட்ஜ் பல்கலை மாணவர்... (03 ஆம் பக்க தொடர்ச்சி)

மாணவர் சங்கத்தில் உரையாற்ற அழைக்கப்பட்ட பிரபல்யமான நபர்கள் என தெரிவிக்கப்படுகிறது. இந்த மாணவர் சங்கத்தில் உரையாற்றுவதற்கு அண்மைக்கால வரலாற்றில் அழைக்கப்பட்ட ஒரே இலங்கையர் அமைச்சர் அலி சப்ரி என்பது குறிப்பிடத்தக்கது, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக சமூகம் மற்றும் உலகளாவிய பொருளாதாரக் கண்ணோட்டத்தில் ஆர்வமுள்ளவர்கள் இந்த விரிவுரையில் கலந்துகொள்வரென நம்பப்படுகிறது. கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் Wilberforce Society, (வில்பர்ஃபோர்ஸ் சொசைட்டி) மற்றும் Lucy Cavendish Finance Society (லூசி கேவென்டிஷ் சொசைட்டி) இலங்கை மாணவர் சங்கம் ஆகியனவும் அமைச்சர் அலி சப்ரியை பலதரப்பட்ட தலைப்புகளில் கருத்துக்களை வழங்குமாறு அழைப்பு விடுத்துள்ளதுடன் விரிவுரைகள் 24ஆம் திகதி நடைபெறவுள்ளன. சர்வதேச விவகாரங்களில் கவனம் செலுத்தும் வில்பர்ஃபோர்ஸ் சொசைட்டி மற்றும் நிதியில் நிபுணத்துவம் பெற்ற லூசி கேவென்டிஷ் சொசைட்டி ஆகியவை உலகளாவிய பிரச்சினைகளில் ஆழமான விவாதங்களுக்கு வாய்ப்புகளை வழங்குகின்றன. அமைச்சர் அலி சப்ரிக்கும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும் இடையில் இலங்கையின் அனுபவத்தைப் புரிந்துகொள்வதற்கும் உரையாடலைக் கட்டியெழுப்புவதற்கும் இந்த விரிவுரைகள் முக்கியமான வாய்ப்பாக அமையும் என நம்பப்படுகிறது.

# இன்றைய பலன்கள்

**( 22. 01. 2024 )**

கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)



**மேஷம்:**
சிறு சிறு ஆரோக்கிய தொல்லைகள் வந்து அலைமோதும். பங்குதாரர்களின் விரோதத்தால் இதுவரை மூடி கிடந்த தொழில் இப்போது திறக்கப்படும்.

**ரிஷபம்:**
வரும் மாற்றங்களை ஏற்றுக் கொள்வது உத்தமம். சகோதரருக்குள் இருந்த வாக்குவாதங்கள் அகலும். பாகப்பிரிவினைகள் சுமூகமாக முடியும்.

**மிதுனம்:**
வெளிநாட்டில் உள்ள நல்ல நிறுவனங்களில் இருந்து உத்தியோகத்திற்கான அழைப்புகள் வரலாம். பணிபுரியும் இடத்தில் பல நாட்களாக இருந்த பிரச்சினைகள் நல்ல முடிவுக்கு வரும்.

**கடகம்:**
பூர்வீக சொத்துக்களை பிரித்துக் கொள்வதில் பிரச்சினைகள் உருவாக்கலாம். உத்தியோகத்தில் வேலை பளு அதிகரிக்கும்.

**சிம்மம்:**
பெற்றோர் வழியில் சில பிரச்சினைகளை சந்திப்பீர்கள். கடல் தாண்டி செல்வதில் தாமதங்கள் உருவாகும். புதிய வாகனங்கள் வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**கன்னி:**
தம்பதிகளுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் அகலும். கல்யாண முயற்சிகளில் இருந்த தடை விலகும்.

**துலாம்:**
குடும்பத்தில் சலசலப்புகள் ஏற்படாமல் கலகலப்பாக இருக்க விட்டுக் கொடுத்துச் செல்வது உத்தமம்.

**விருச்சிகம்:**
முத்தான தொழில்கள் வாய்க்கும் யோகம் உண்டு. முன்னேற்ற பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். எதிரிகள் பலம் குறையும்.

**தனுசு:**
பங்குச் சந்தை,வெளிநாட்டு வணிகத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு வருமானம் திருப்திகரமாக இருக்கும். அதே நேரம் விரயங்கள் கொஞ்சம் கூடுதலாக இருக்கும்.

**மகரம்:**
விலகிச் சென்ற சொந்தங்கள் விரும்பி வந்து சேரும். பாக்கியங்கள் வசூல் ஆகி பரவசப்படுத்தும். இடம் பூமி வாங்குவதிலிருந்த பிரச்சினை அகலும்.

**கும்பம்:**
வாழ்க்கைத் துணைக்கு வேலை கிடைத்து அதன் மூலம் உதிரி வருமானங்கள் வரலாம். பிள்ளைகளின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள்.

**மீனம்:**
பொருளாதாரப் பற்றாக்குறை அகலும். புதிய ஒப்பந்தங்களும் வந்து சேரும். குடும்பத்தில் ஒன்றுக்கும் மேற்பட்டவர்களின் வருமானம் கிடைத்து மகிழ்ச்சிபடுத்தும்.

## ரூ. 5,000 வாழ்வாதார...

கொடுப்பனவை 10,000 ரூபாவினால் அதிகரிக்கவும், ஏப்ரல் முதல் அதிகரிப்பை வழங்கவும் முன்மொழியப்பட்டது.இருந்த போதிலும், இம்மாதம் முதல் மார்ச் வரையில் அந்த தொகையில் ஐம்பது சதவீதத்தை வழங்குவதற்கு பின்னர் தீர்மானிக்கப்பட்டது.

இதன்படி, இம்மாதம் முதல் மார்ச் வரை தலா ஐந்தாயிரம் ரூபாவும், மீதமுள்ள தொகை அடுத்த ஆண்டும் வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போதைய வாழ்க்கைச் செலவுக் கொடுப்பனவான 7,800 ரூபாவுடன் 5,000 ரூபாவை சேர்த்து எதிர்வரும் மார்ச் மாதம் வரை பன்னிரண்டாயிரத்து எண்ணூறு ரூபாவை (12,800) செலுத்துமாறும் ஏப்ரல் மாதம் முதல் கொடுப்பனவை 17,800 ரூபாவாக அதிகரிக்குமாறும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதிகரித்த வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு, சாதாரண மற்றும் தினக்கூலி ஊழியர்களுக்கு வேலை நாட்களின் அடிப்படையில் வழங்கப்பட வேண்டுமெனவும் சுற்றறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நுண்நிதிக் கடன்துறை...

அதிகளவு பயன்பெறுவது பெண்களே. சிறு மற்றும் நடுத்தர வர்த்தகர்களின் நிதித் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் உத்தரவாத முறையொன்று எதிர்வரும் காலங்களில் அறிமுகப்படுத்தப்படும்.

இதேவேளை, அனைத்து வர்த்தகர்களும் வற் வரி செலுத்தினால் தற்போதுள்ள பதினெட்டு வீதமான வற் வரியை 15 வீதமாக குறைக்க முடியுமெனவும் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

## வாக்காளர் இடாப்பில்...

சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். 2023, வாக்காளர் பட்டியல் தயாரிப்பில் இளம் வாக்காளர்கள் மீது அதிக கவனம் செலுத்தப்படுமெனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து பாராளுமன்ற தேர்தல் 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதமும், மாகாண சபை தேர்தலை மார்ச் மாதத்திலும் நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

## நிகழ்நிலை பாதுகாப்பு...

விடுத்துள்ளார். “முன்மொழியப்பட்ட சட்டமூலம் , அதன் தற்போதைய வடிவத்தில் இயற்றப்பட்டால், ஒன்லைன் பாதுகாப்பு ஆணையம் மற்றும் பொருள் என்பன அமைச்சரின் சர்வாதிகார அதிகாரங்களுக்கான விதிகளை வழங்கும். இது மக்களின் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையை மீறும். இது ஆட்சியில் இருக்கும் அரசாங்கத்தின் அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் உதவும்” என பிரேமதாச தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

“இச் சட்டத்தின் விளைவாக சர்வதேச அளவில் புகழ்பெற்ற ஒன்லைன் சேவை வழங்குநர்கள் பாதிக்கப்படுவர்.இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு சட்டமூலத்தை ஆதரிக்கும் அனைத்துக் கட்சிகளும் பொறுப்பேற்க வேண்டும். எனவே, விவாதத்தை ஒத்திவைத்து, அனைத்து பங்குதாரர்களும் சட்டமூலம் மீது மேலும் விவாதம் நடத்த போதுமான கால அவகாசம் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறோம். இதேபோன்ற சட்டத்தை அறிமுகப்படுத்தும் போது, பல நாடுகள் பின்பற்றும் நடைமுறை இது,” என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## இந்தியப் பெருங்கடலில்...

பதிவாகியுள்ளது. சுனாமி அனர்த்தம் ஏற்படுவதற்கான ஆபத்துகள் எதுவும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், பிரேசில் நாட்டின் மேற்கு பகுதியிலும் 6.4 ரிச்டர் அளவில் நேற்றைய தினம் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

இந்திய பெருங்கடலின் தென் மேற்கு பகுதியில் நேற்று அதிகாலை 3.39 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கமொன்று பதிவாகியுள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.2 ஆக பதிவாகியுள்ளதாக இந்திய தேசிய நிலநடுக்க ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. சுமார் 10 கி.மீ. ஆழத்தில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டதாக அந்த மையம் தெரிவித்துள்ளது.

## சிவில் உடையில்...

ஒருவர் உயிரிழந்ததையடுத்து இந்த புதிய அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.















லேக் ஹவுஸ் நிறுவன ஊழியர்களின் பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு (19) நிறுவன கூடத்தில் நடைபெற்றது. அந்நிகழ்வில் லேக் ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம் உட்பட நிறுவன உயரதிகாரிகளும் கலந்து கொண்டுள்ளதை படங்களில் காணலாம். *(படங்கள்: சித்தக குமாரசிங்க)*

**House for Sale in Mount Lavinia**
**60/50, Templers Road, Mount Lavinia.**
Bedroom 3 Bathroom 2
House size 2000 sq.ft.
Land size 12 perches
**TP. No. 0742925923**
**Rs. 42 Million**

# மட்டு ICST பல்கலைக்கழகத்திற்கு ரவூப் ஹக்கீம் எம்.பி விஜயம்

மட்டக்களப்பில் அமைந்துள்ள ICST விஞ்ஞான, தொழில் நுட்பத்திற்கான சர்வதேச பல்கலைக் கழகத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் சனிக்கிழமை (20) விஜயம் செய்தார்.

பல்கலைக்கழக நிறுவுனரும் முன்னாள் ஆளுநருமான கலாநிதி எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வின் அழைப்பின் பேரில் அங்கு சென்ற ரவூப் ஹக்கீம், கற்கை பிரிவுகளை பார்வையிட்டதுடன் கல்வி கற்கும் மாணவர்களுடனும் கலந்துரையாடினார்.

சில மாதங்களுக்கு முன்னர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் அங்கிருந்து இராணுவம் வெளியேறியதுடன் நிறுவுனர் ஹிஸ்புல்லாஹ்விடம் குறித்த பல்கலைக்கழகம் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில் பலத்த சேதமடைந்திருந்த பல்கலைக்கழக கட்டடத் தொகுதிகள், தளபாடங்கள், உபகரணங்கள் யாவும் புனரமைப்பு செய்யப்பட்டு, கடந்த வியாழனன்று (18) பல்கலைக்கழக வளாகம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டு, அங்கு கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.




ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளி 2024.01.19
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5364 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 31,853,632.00
ஆங்கில எழுத்து Q — வெற்றி இலக்கங்கள் 1 8 5 1 7 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3606 — சீட்டிழுப்பு திகதி 2024.01.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,544,538.56
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 16 18 29 39 — விசேட எழுத்து F — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 51204

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1712 — 2024.01.19 — 33676 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 421,110,130.00
ஆங்கில எழுத்து P — சுப்பர் இலக்கம் 14 — வெற்றி இலக்கங்கள் 18 22 25 34
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.01.19 — சீட்டிழுப்பு இலக்கம் 0190
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 8 5 8 9 9 0 — L7 எழுத்து G
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 23,509,952.84

ராசி சுப பலன் — திகதி 2024.01.19 — சீட்டிழுப்பு இலக்கம் 673 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,372,902.08
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 12 31 32 56 — தனயோக இலக்கம் 20549 — நாளுக்கான விதி எண் 27

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1394 — 2024.01.19 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 131,091,820.88
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 25 43 62 74 — விசேட எழுத்து U — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 63645

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.01.20
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5365 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 32,428,800.00
ஆங்கில எழுத்து K — வெற்றி இலக்கங்கள் 7 9 4 4 3 0

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3607 — சீட்டிழுப்பு திகதி 2024.01.20 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,694,040.56
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 05 29 55 70 — விசேட எழுத்து S — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 11812

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1713 — 2024.01.20 — 64661 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 421,230,806.00
ஆங்கில எழுத்து I — சுப்பர் இலக்கம் 21 — வெற்றி இலக்கங்கள் 18 28 35 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

Lucky 7 VIP — திகதி 2024.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0191
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 8 7 5 8 5 2 — L7 எழுத்து U
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 23,572,096.04

ராசி சுப பலன் — திகதி 2024.01.20 — சீட்டிழுப்பு இலக்கம் 674 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,373,938.88
வெற்றி இலக்கினம் மேஷம் — வெற்றி இலக்கங்கள் 09 12 42 59 — தனயோக இலக்கம் 18357 — நாளுக்கான விதி எண் 09

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1395 — 2024.01.20 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 131,236,844.08
ஆங்கில எழுத்து F — வெற்றி இலக்கங்கள் 12 38 47 51 — விசேட எழுத்து F — இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 33807

# கிழக்கின் குரல்



## கல்முனை சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம்





( காரைதீவு குறூப் நிருபர் )

வரலாற்று பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் சந்தான ஈஸ்வரர் ஆலய மஹா கும்பாபிஷேகம் நேற்று (21) ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

கடந்த புதன்கிழமை (17) கிரியைகள் ஆரம்பமாகின. வியாழன், வெள்ளி மற்றும் சனி ஆகிய மூன்று தினங்கள் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெற்றன. பெருந்திரளான பக்தர்கள் கொட்டும் மழைக்கு மத்தியிலும் எண்ணெய் காப்பு சாத்தினர்.

சாய்ந்தமருது, அக்பர்

## பள்ளிவாசல் மையவாடியில் சிரமதானம்

(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

"நிச்சயிக்கப்பட்ட வீட்டினை சுத்தம் செய்வோம்" என்ற தொனிப்பொருளில் சாய்ந்தமருது அக்பர் பள்ளிவாசல் மையவாடியில் சிரமதான நிகழ்வு இடம்பெற்றது. ஓ.ஜி. சொசைட்டியினால்இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதற்கு ஓ.ஜி. விளையாட்டு கழகம், ஜனாஸா நலன்புரி மக்கள் பேரவை மற்றும் இயற்கை நேசிக்கும் மன்றம் என்பன ஒத்துழைப்பை வழங்கியிருந்தன. இந்த மையவாடியில் மரங்கள் வளர்ந்து காணப்பட்டமையினால் ஜனாஸா அடக்குவதற்கு உகந்த நிலை இருக்கவில்லை. இதை அவதானித்த சொசைட்டி அமைப்பினர் இதனை சுத்தம் செய்து ஜனாஸா அடக்குவதற்கு உகந்த மையவாடியாக மாற்றி உள்ளனர்.

இச்சமூகப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்கிய அமைப்புக்கள் மற்றும் பொது மக்களுக்கும் மற்றும் கனரக இயந்திரம், திண்ம கழிவகற்றும் இயந்திரம் என்பவற்றை தந்து உதவிய கல்முனை மாநகர சபைக்கும் ஓ.ஜி. சொசைட்டி அமைப்பினர் நன்றி தெரிவித்துள்ளனர்.

## வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள மாணவர்களுக்கு உபகரணங்கள்



(கல்முனை மத்திய தினகரன் நிருபர்)

சவளக்கடை பிரதேசத்தில் வறுமைக்கோட் டிற்கு கீழுள்ள குடும்பங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் (20) வழங்கப்பட்டன.

தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் மாவட்ட சமுக உளநல உத்தியோகத்தர் யூ.எல். அசார்டீனின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்நிகழ்வில், பிரதம அதிதியாக அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு.வீ. ஜெகதீசன், உபகரணங்களை வழங்கினார். இங்கு மாணவர்களின் பெற்றோர்களும் கலந்து கொண்டனர்.

## அல்குர்ஆன் மத்ரஸா திறந்து வைப்பு



குவைத் இஸ்லாமிய நலன்புரி அமைப்பின் நிதியுதவியில்,கிண்ணியா கற்குழி கிராமத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அல்குர்ஆன் மத்ரஸாவின் புதிய கட்டிடம், அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.அல்ஹிமா இஸ்லாமிய அமைப்பின் பணிப்பாளர் அஷ்ஷெய்க் எம்.ஏ.எம். நூறுல்லாஹ்விடம் (நளீமி) மத்ரஸா நிர்வாகிகள் விடுத்த வேண்டுகோளின்பேரில், இக்கட்டிடம் குவைத் நாட்டின் பரோபகாரிகளின் நிதியுதவியில் நிர்மாணிக்கப்பட்டது. இத்திறப்பு விழாவில் அல்ஹிமா பணிப்பாளர், மௌலவி பாஸி மற்றும் இம்ரான் மஹ்ரூப் எம்.பியின் இணைப்பாளரும் கலந்து சிறப்பித்தனர்.

## அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க அமைச்சருடன் பேச்சு

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)



சீரற்ற காலநிலையால், பாதிக்கப்பட்ட அம்பாறை மாவட்ட விவசாயிகள் மற்றும் மக்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீரவுடன் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் அண்மையில் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார். அமைச்சின் செயலாளர், அதிகாரிகள் கலந்து கொண்ட இக்கூட்டத்தில் அம்பாறை மாவட்ட விவசாயிகளுக்கு ஏற்பட்ட நஷ்டங்கள் மற்றும் பாதிப்புக்கள் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் ஹரிஸ் எடுத்துக்கூறினார்.

விவசாய நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியதால் வேளாண்மை மற்றும் மரக்கறிச் செய்கைகள் பாதிக்கப்பட்டிருந்தன.

இவர்களுக்கு முழுமையான நஷ்ட ஈட்டை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் சேதமடைந்த கால்வாய்கள்,அணைக்கட்டுக் கள் மற்றும் குளங்களை புனரமைக்க ஏற்பாடுகள் செய்யுமாறும் அமைச்சரிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இவற்றை கேட்டறிந்த அமைச்சர் மஹிந்த அமரவீர, மிகத்துரிதகெதியில் விவசாயிகளுக்கு நஷ்ட ஈட்டை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் அணைக்கட்டுக்களை புனரமைப்பது தொடர்பில் நீர்ப்பாசன அமைச்சரிடம் கலந்துரையாடி தீர்வை வழங்க நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மையில் பெய்த அடை மழையால் பாரிய வெள்ளம் ஏற்பட்டது. மேலும் குளங்களின் நீர் மட்டம் உயர்ந்ததால். வான் கதவுகளும் திறந்து விடப்பட்டன.

இதனால், விவசாயிகள் பெரும் பாதிப்புக்கு உள்ளானதுடன் பல குடியிருப்பு பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையின் கலை இலக்கிய மன்றத்தினர் ஏற்பாடு செய்த சுகாதார விழிப்புணர்வுக் கவியரங்கு, அண்மையில் வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் கலாபூசணம் கவிதாயினி பரீதா இஸ்மாயில் தலைமையில் இடம்பெற்றது. வைத்தியசாலையின் பெரும்பாலான உத்தியோகத்தகர்கள் கலந்து கொண்ட இக்கவியரங்கில், வைத்தியசாலை அத்தியட்சகர் வைத்திய கலாநிதி அஸாத் எம் ஹனிபா, மருத்துவர் நியாஸ் அஹமட், மருத்துவர் காலித்,தொழிநுட்ப உத்தியோகத்தர் கவிஞர் அலியார் மற்றும் கவிதாயினி ஆசிரியர் சம்சுனிஸா ஆகியோர் கவிமழை பொழிந்தனர்.

## சமைத்த உணவுகளை வழங்குவதில் சிவில் அமைப்புக்கள் ஆர்வம்

(அட்டாளைச்சேனை குறூப் நிருபர்)

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு சமைத்த உணவுப்பொதிகளை வழங்கும் திட்டமொன்றை அக்கரைப்பற்று "ஸகாத்' நிதியத்தினர் செயல்படுத்தி வருகின்றனர்.

அக்கரைப்பற்று பிரதேச செயலக பிரிவில் 6871 குடும்பங்களைச் சேர்ந்த 25,492 பேர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தனர்.

பாதிப்புற்ற மக்களுக்கு சமைத்த உணவுகளை வழங்கும் இத்திட்டத்துக்கு அக்கரைப்பற்று ஜெம்மியதுல் உலமா சபை, அக்கரைபற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளனம் உள்ளிட்ட பல அமைப்புக்கள் உதவி வருகின்றன.

பொது மக்கள் சமைத்த உணவுகளை பொதியிட்டு சகாத் நிதிய காரியாலயத்தில் ஒப்படைத்து வருகின்றனர்.

இவை, வீடுகளிலும், இடைத்தங்கல் முகாம்களிலும் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகின்றன. இதேவேளை, இப்பகுதியிலுள்ள சில தனவந்தர்கள், மிகவும் இரகசியமான முறையிலும் உதவி வருவதாகவும் அறிவிக்கப்படுகிறது.

## சாரணர்களுக்கான செயலமர்வு

(பாலமுனை தினகரன் நிருபர்)



இலங்கை சாரணர் சங்கத்தின் ஏற்பாட்டில் பயிற்சிக்குப் பொறுப்பான உதவி மாவட்ட சாரண ஆணையாளர்கள் மற்றும் மாகாண ஒருங்கிணைப்பாளர்களுக்கான செயலமர்வு சாரணர் சங்கத்தின் தலைமைக் காரியாலயத்தில் அண்மையில் நடைபெற்றது.

சாரணர் சங்கத்தின் தேசிய பயிற்சி ஆணையாளர் பத்மலால் பெரேரா தலைமையில் நடைபெற்ற இச்செயலமர்வில், வடக்கு கிழக்கு உட்பட சகல மாவட்டங்களிலுமிருந்து ஒருங்கிணைப்பாளர்களும், பயிற்சிக்கு பொறுப்பான உதவி மாவட்ட ஆணையாளர்களும் கலந்து கொண்டனர். மாவட்ட ரீதியாக எதிர்காலத்தில் சாரணியத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாகவும், சாரணர்களுக்கான பயிற்சிகள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டு அவற்றை செயற்படுத்தவும் தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன .

## வெல்லாவெளியில் நடமாடும் சேவை

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

வெல்லாவெளி பிரதேச செயலக பகுதிகளில் அறுபது வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு அசுவெசும கொடுப்பனவுக்கான அடையாள அட்டை அத்தியாவசியமாக்கப்பட்டுள்ளது. இதனால், இந்த அடையாள அட்டையை பெறுவதற்கு தகுதியுடையோருக்கு சேவை நடத்தப்பட்டது. இந்நடமாடும் சேவை திருப்பழுகாமம் கலாசார நிலையத்தில் இடம்பெற்றது.வன்னிநகர், மாவேற்குடா, வீரஞ்சேனை, பழுகாமம் 01, பழுகாமம் 02 மற்றும் விபுலானந்தபுரம் ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் வசிக்கும் 60 வயதுக்கு மேற்பட்ட அசுவெசுமக்கு தகுதியுள்ள பலர் இதில், கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## ஆத்தியடிக்கட்டு பிரதேசத்தில் 564 ஏக்கர் நெற்செய்கை நிலங்கள் சேதம்

(ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்)



ஒலுவில் ஆத்தியடிக்கட்டு, அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தால் உடைப்பெடுத்து அட்டாளைச்சேனை வழலவாய் கிழல் கண்டத்தில் பாரிய வெள்ளத்தை ஏற்படுத்தியது.

இதனால், இப்பிரதேசத்தின் 564 ஏக்கர் வயல் நிலங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாக வழலவாய் கிழல் கண்டத்தின் செயலாளர் எஸ்.எம். சபியூதீன் தெரிவித்துள்ளார்.

அட்டாளைச்சேனை கமநல சேவை மத்திய நிலையப் பிரிவிற்குட்பட்ட வழலவாய் கிழல் கண்டத்தில்,மேற்கொள்ளப்பட்ட நெற்செய்கை குடலைப்பருவமாக உள்ள நிலையில், இவ்வாறு திடீரென ஏற்பட்ட வெள்ளம் நெற் செய்கையை கடுமையாக பாதித்துள்ளது. வங்கிக் கடன்களைப் பெற்று நெற்செய்கை மேற்கொண்டிருந்த விவசாயிகள், இதனால் பெருங்கவலைக்கு உள்ளாகியுள்ளனர். இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடனடியாக நடவடிக்கைகளை மேற்கொண்டு விவசாயிகளுக்கு நஷ்ட ஈடு வழங்குமாறு வேண்டியுள்ளனர்.

## இரண்டாம்மொழி கற்கைநெறிகளை பூர்த்தி செய்தோரின் கலை நிகழ்வுகள்

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

**மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷனி ஸ்ரீகாந்த் பிரதம அதிதி**

மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களுக்கான இரண்டாம் மொழி சிங்கள கற்கைநெறியின் இறுதி நாள் கலைவிழா (20) மட்டக்களப்பில் இடம் பெற்றது. இந்த கற்கை நெறிகள் 150 மணித்தியாலங்களாக 19 நட்கள் இடம்பெற்றன. இதன் இறுதி நாள் கலைவிழா மண்முனை வடக்கு பிரதேச செயலக டேபா மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சுதர்ஷனி ஸ்ரீகாந்த் பிரதம அதிதியாக கலந்து கொண்ட இந்நிகழ்வில், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வீ.வாசுதேவன் விசேட அதிதியாக கலந்து சிறப்பித்திருந்தார்.

அதிதிகள் பாரம்பரிய முறைப்படி வெற்றிலை கொடுத்து வரவேற்கப்பட்டு மங்கள விளக்கு ஏற்றி, இறைவணக்கத்துடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது. கற்கை நெறியை பூர்த்தி செய்த உத்தியோகத்தர்களின் கண்கவர் கலை கலாசார நிகழ்வுகள் இடம் பெற்றன.

நாடளாவிய ரீதியில் தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட இக் கற்கைநெறியை மட்டக்களப்பு மாவட்ட செயலகம், மண்முனை வடக்கு பிரதேச செயலகம் மற்றும் ஏனைய திணைக்களங்களில் கடமையாற்றும் 65 அரச உத்தியோகத்தர்கள் பூர்த்தி செய்திருந்தனர். அரச உத்தியோகத்தர்களின் ஆளுமை மற்றும் மொழி வாண்மையை மேம்படுத்துவதற்கும் அலுவலக கடமையில் ஈடுபடும் போது இரண்டாம் மொழி தொடர்பாடலை மேம்படுத்தவும் இக்கற்கைநெறி ஏற்பாடு செய்யப்பட்டது.

# மலையகத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழா









மலையக வரலாற்றில் முதன்முறையாக, தேசிய தைப்பொங்கல் விழா ஹட்டனில் நேற்று (21) கோலாகலமாக நடைபெற்றது. கலை, கலாசார நிகழ்வுகள், தமிழர்களின் பாரம்பரிய விளையாட்டுகள், போட்டிகள் என பிரமாண்டமான முறையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டு, தேசிய தைப்பொங்கல் விழா வெற்றிகரமாக நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில் ஹட்டன் டன்பார் மைதானத்தில் நடைபெற்ற தேசிய தைப்பொங்கல் விழாவில் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க, இ.தொ.காவின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், இ.தொ.காவின் தவிசாளரும், நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ராமேஷ்வரன், வடக்கு மாகாண ஆளுநர் சார்ள்ஸ், மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே, அமைச்சுகளின் செயலாளர்கள், நுவரெலியா மாவட்ட அரச அதிபர், அரசாங்க அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் உட்பட தென்னிந்திய நடிகைகளும் பங்கேற்றனர்.



## தலைமறைவாகிய நித்தியானந்தா அயோத்திக்கு இன்று வருகிறாரா?



அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகின்ற நிலையில், இதில் கலந்து கொள்ளப்போவதாக இந்தியாவில் தலைமறைவாக உள்ள சுவாமி நித்தியானந்தா அறிவித்துள்ளமை பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

ராமர் பிறந்ததாக நம்பப்படும் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் இராமருக்கு பிரம்மாண்ட கோயில் கட்டப்பட்டு வருகிறது. மூன்று தளங்களில் கோயில் கட்டப்பட்டுள்ள நிலையில், அதன் கும்பாபிஷேகம் இன்று நடைபெறுகிறது. அயோத்தியில் இப்போது பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது. இன்று பிரதமர் மோடி தொடக்கம் பல்வேறு தலைவர்கள் அயோத்திக்கு வரும் நிலையில், ஏற்கனவே அனுமதி உள்ளவர்களைத் தவிர யாரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், ஒட்டுமொத்த அயோத்தி நகரமும் இப்போது பொலிஸ் பாதுகாப்பில் இருக்கிறது. இதற்கிடையே அயோத்தி இராமர் கோயில் கும்பாபிஷேக நிகழ்வில் கலந்து கொள்ளப் போவதாகக் கூறியுள்ளார் தலைமறைவாக உள்ள சாமியார் நித்தியானந்தா.

இந்தச் சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இன்று நடைபெறுகின்ற இராமர் கோயில் திறப்பு விழாவுக்கு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், அந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ளப் போவதாகவும் நித்தியானந்தா கூறியுள்ளார்.

பாலியல் பலாத்கார குற்றச்சாட்டில் சிக்கி இப்போது தலைமறைவாக உள்ள நித்தியானந்தாவின் இந்தக் கருத்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்தியாவில் தேடப்பட்டு வரும் குற்றவாளியான நித்தியானந்தா கைலாசா என்ற தனி நாட்டை உருவாக்கியுள்ளதாக அவரே கூறி வருகிறார்.

அவர் தனது எக்ஸ் பக்கத்தில், "இந்த வரலாற்று மற்றும் அசாதாரண நிகழ்வைத் தவறவிடாதீர்கள்! அயோத்தி கோயிலில் இராமர் பிரதிஷ்டை செய்யப்படுகிறார். இது உலகம் முழுவதையும் அலங்கரிக்கும் ஒரு நிகழ்வாகும். முறைப்படி அழைப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில், இந்து மதத்தின் உயர் மதத் தலைவர், பகவான் ஸ்ரீ நித்தியானந்த பரமசிவம் இந்த மாபெரும் நிகழ்வில் கலந்துகொள்வார்" என்று கூறப்பட்டுள்ளது.

## ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழக மருத்துவபீட கற்கைகளுக்கென 10 மாடிகள் கொண்ட கட்டடம்

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் மருத்துவபீட மாணவர்களுக்கான மருத்துவப் பயிற்சிக்குத் தேவையான சகல வசதிகளுடனான பத்து மாடிகளைக் கொண்ட கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வு அண்மையில் பதுளை போதனா வைத்தியசாலையில் இடம்பெற்றது.

பத்து மாடிகளைக் கொண்ட இந்தக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் 2.26 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளதுடன், நிர்மாணப் பணிகளை 2025 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் புதிதாக ஸ்தாபிக்கப்பட்ட 11 ஆவது மருத்துவ பீடத்திற்குத் தேவையான பேராசிரியர் பிரிவை நிர்மாணித்தல் மற்றும் மாகாண பொது வைத்தியசாலையாக இருந்த பதுளை பொதுவைத்தியசாலையை போதனா வைத்தியசாலையாக மாற்றும் பணியும் இங்கு இடம்பெற்றது.

இங்கு கட்டப்படும் கட்டடத்தில் உடலியல், அறுவை சிகிச்சை, குழந்தைகள், மகப்பேறு மற்றும் மகப்பேறு மருத்துவம், மனநல மருத்துவம் ஆகிய சிறப்புப் பிரிவுகளின் பேராசிரியர் பிரிவுகளை நிறுவி மருத்துவக் கற்கைகளைத் தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது.




ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மருத்துவ பீடம் 50 மாணவர்களை இணைத்துக்கொண்டு அவர்களின் கற்கைநெறிகளை ஆரம்பிக்கின்றது.

இந்நிகழ்வில் துறைமுகங்கள் மற்றும் விமானப் போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில், ஆரம்ப கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் சாமர சம்பத் தசநாயக்க, கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்த குமார் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் சம்பத் அமரதுங்க, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக் கழகத்தின் வேந்தர் பேராசிரியர் ஜயந்த பாலவர்தன, துணைவேந்தர் பேராசிரியர் கோலித பண்டார, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் (சேவைகள்) கலாநிதி அசேல குணவர்தன உட்பட பலர் கலந்து கொண்டனர். பேராசிரியர்கள், விசேட வைத்தியர்கள், தாதியர்கள் உட்பட பெருமளவானோரும் கலந்து கொண்டனர்.



பதுளை போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் உபுல் கருணாரத்ன மற்றும் பணியாளர்கள் இந்த நிகழ்வை ஏற்பாடு செய்திருந்தனர். பதுளையில் அமையப்பெறும் இம்மருத்துவ பீடம் கிழக்கின் மட்டக்களப்பு, கல்முனை, அக்கரைப்பற்று, அம்பாறை, திருக்கோயில், பொத்துவில், ஊவா மாகாணத்தில் மொனராகலை, பிபிலை, மஹியங்கணை, பதுளை, பண்டாரவளை, வெலிமடை மற்றும் மலையக மாணவர்களுக்கு மிக வரப்பிரசாதமாக அமையுமென்பது குறிப்பிடத்தக்கது.

**எம்.ஏ.எம்.ஹசனார்**
(ஊவா சுழற்சி நிருபர்)

## கண்டி ரயில்நிலைய சுற்றாடலை தூய்மைப்படுத்தும் பணியில் நோர்வே பல்கலைக்கழக மாணவர்கள்

இலங்கையின் சுற்றாடலை தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதில் எமது நாட்டவரை விட வெளிநாட்டவர்கள் அக்கறை கொண்டிருப்பது வியப்பளிக்கின்றது. மனிதன் தன்னையும் தனது குடும்பத்தினரையும் நேசிப்பது போன்று தனது சூழலையும் நேசிக்க வேண்டும். சூழலை நாம் நேசித்தால் சூழல் நம்மை நேசிக்கும்.

சுற்றாடலை சுத்தமாகவும், சுகாதாரமாகவும் வைத்திருக்க வேண்டும் என்பதை ஞாபகப்படுத்தும் வகையில் உலக சுற்றாடல் தினம் அனுஷ்டிக்கப்படுகிறது.

நீர், நிலம், வளி என்ற வகையில் மனிதனின் அக்கறையற்ற செயற்பாட்டினால் பல வழிகளில் நம்மை அறியாமலேயே சூழல் மாசடைகின்றது.

சூழலில் குப்பைகள் சேர்ந்தால் பிரதேசத்திலுள்ள ஆர்வலர்கள் சிலர் சிரமதானம் என்ற போர்வையில் சுத்தம் செய்து கூடிக்கலைவது மரபாகி விட்டது. அப்படியான செயற்பாட்டின் பின்னர் சூழல் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டும் என்பதை மறந்து விடுகின்றனர்.

நமது நாட்டிலுள்ள மக்களை விட வெளிநாட்டவர்களிடம் சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டும் என்ற எண்ணம் சிறு வயது தொடக்கம் மனதில் ஊட்டப்படுகின்றது. அதனால் அம்மக்கள் சுத்தமாகவும் சுகாதாரமாகவும் நோய் நொடியின்றியும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்த நோர்வே பல்கலைக்கழக மாணவர்கள் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் அதிகம் சஞ்சரிக்கும் கண்டி புகையிரத நிலையத்தை தூய்மைப்படுத்தும் பணிகளில் ஈடுபட்டமை எம் அனைவரையமே வியக்க வைத்துள்ளது.

இச்செயற்பாடு எமது நாட்டு மக்களுக்கு அவர்கள் ஏற்படுத்தியுள்ள பெரும் படிப்பினையாகும்.




**தகவல்: எம்.ஐ.எம்.அஸ்ஹர்**
(மாளிகைக்காடு குறூப் நிருபர்)

## இயற்கை கடதாசி உற்பத்தி



அனுராதபுரம் இராஜாங்கனை பிரதேச செயலகப் பகுதிக்குட்பட்ட வெஹெரகல கிராம அலுவலகர் பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இயற்கை கடதாசி உற்பத்தி செயற்திட்ட கிராமத்திற்கு இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க சமீபத்தில் விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

குறித்த உற்பத்தித் திட்டம் அனுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள உற்பத்திக் கிராமங்களினுள் ஒரு சிறப்பான இடத்தை ஆக்கிரமித்துள்ளது. தற்போது இந்த உற்பத்திகளுக்கு வெளிநாட்டு சந்தையில் அதிக கேள்வி எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



(அனுராதபுரம் மேற்கு தினகரன்நிருபர்)

# கண்டி நகர அபிவிருத்திக்கு ரூபா 650 மில்லியன்





(அக்குறணை குறூப் நிருபர்)

கண்டி நகர அபிவிருத்திக்கு 650 மில்லியன் ரூபா வழங்குவதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாக மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகே தெரிவித்தார்.

கண்டி நகர அபிவிருத்தி தொடர்பாக மகாநாயக்கத் தேரர்களை தெளிவு படுத்தும் வகையில் அவர்களை சந்தித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில் ஜனாதிபதியின் விசேட உத்தரவிற்கு அமைய எதிர்வரும் பெப்ரவரி மாதம் இதற்கான நிதி வழங்கப்பட உள்ளதாகவும் அப்பணிகளை எதிர்வரும் ஜூலைமாதம் 31ம் திகதிக்கு முன்னர் நிறைவு செய்யும் படியும் ஜனாதிபதி உத்தர விட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மல்வத்தை விகாரை, அஸ்கிரிய விகாரை மற்றும் கெட்டம்பே ராஜோபவனாராம விகாரை என்பவற்றிற்கு விஜயம் செய்து மகாநாயக்கத் தேரர்கள் மற்றும் அனுநாயக்கத் தேரர்களை சந்தித்து நல்லாசி பெற்றபின் இத்தகவல்களை அவர் தெரிவித்தார்.

## சாமிமலை பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை மீட்பு

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர் )

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவில் தோட்ட வைத்திய சாலைக்கு அருகில் உள்ள வைத்தியர் குடியிருப்புப் பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை குட்டி ஒன்று மீட்கப்பட்டுள்ளது.

கடந்த 19 ம் திகதி மாலை சாமிமலை ஸ்ரஸ்பி தோட்ட குமரி பிரிவில் உள்ள தொழிலாளர்கள் பணியாற்றி கொண்டு இருந்த வேலையில் வைத்தியரின் குடியிருப்புப் பகுதியில் இறந்த நிலையில் சிறுத்தை உள்ளதை கண்டு தோட்ட முகாமையாளருக்கு அறிவித்தனர். தோட்ட முகாமையாளர் இது குறித்து நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் கவனத்திற்குக் கொண்டு வந்தார். சம்பவ இடத்துக்கு சென்ற நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் இறந்த நிலையில் கிடந்த சிறுத்தையை எடுத்து சென்று உள்ளனர்.

## டெங்கு ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி

(தலவாக்கலை குறூப் நிருபர்)

டெங்கு ஒழிப்பு மற்றும் கழிவு முகாமைத்துவம் தொடர்பான விழிப்புணர்வு நிகழ்ச்சி தலவாக்கலை, நாகசேனை நகரம் மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் இடம்பெற்றது. லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக அதிகாரிகள் மற்றும் அக்கரப்பத்தனை பிரதேச சபை அதிகாரிகள் இணைந்து இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருந்ததுடன், நாகசேனை நகரை சுத்தப்படுத்தும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டன. லிந்துலை சுகாதார வைத்திய அதிகாரி ரெஷினி துரைராஜ் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், அகரப்பத்தனை சபையின் சுற்றாடல் உத்தியோகத்தர் உட்பட ஊழியர்கள், நாகசேனை பிரிவுக்கு பொறுப்பான பொது சுகாதார பரிசோதகர் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## மலைச்சாரல்

## இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

இரத்தினபுரி மாவட்டத்தில் டெங்கு நோய் பரவும் அபாயம் குறித்து சுகாதாரத்துறை அதிகாரிகளின் அவதானம் திரும்பியுள்ளது. இந்நிலையில் இரத்தினபுரி மாவட்டத்தில் இது குறித்து பரவலான பிரச்சாரப்பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இரத்தினபுரி மாவட்டத்தின் எம்பிலிப்பிட்டிய பகுதியில் குறிப்பாக மகாவலி வலயத்தின் பல பிரிவுகள் உடவளவ சந்திரிகாவெவ சங்கபால பகுதிகளில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகவும் இதனால் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அவசியமான அறிவுரைகள் துண்டுப்பிரசுரங்கள் மூலம் வழங்கப்பட்டு வருகின்றன.

## இலங்கை – இந்திய நட்புறவு ஒன்றியம் ஏற்பாட்டில் விஜயகாந்துக்கு அஞ்சலி

(அக்குறணை குறூப் நிருபர்)

அண்மையில் காலமான தென் இந்திய பிரபல திரைப்பட நடிகர் விஜயகாந்தின் நினைவு தின அஞ்சலி நிகழ்வு (21.1.2024) கண்டி டெவோன் ஹோட்டலில் இடம்பெற்றது. இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியம் ஒழுங்கு செய்த இந்நிகழ்வில், தொழில் அதிபர் பனையடியான் பிள்ளை பிரதம அதிதியாகவும் கலைஞர்களான செல்வராஜ், ரொபர்ட் டேனியல், நூல் வெளியீட்டாளர் இரா அ. இராமன் உட்பட பல கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

மறைந்த நடிகர் விஜயகாந்தின் உருவப்படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. இவ் வைபவத்தில் உரையாற்றிய இரா அ. இராமன் தெரிவித்தாவது

ஈழத்து தமிழர்களுக்காகக் குரல் கொடுத்த ஒரு கலைஞரை நாம் இன்று நினைவு கூருகிறோம். இவரைப் பொருத்தவரை ஒரு செயல்வீரராக நாம் கருத வேண்டும். அவரது இழப்பு எமக்கு பாரிய துயரத்தை தந்துள்ளது. அவரது ஆத்மா சாந்திக்காகப் பிராத்திக்கிறோம் என்றார்.



தினகரன், தினகரன் வாரமஞ்சரியின் அனுசரணையுடன் இலங்கை இந்திய நட்புறவு ஒன்றியம் அதன் தலைவர் தேச கீர்த்தி, தேசபந்து மு.தீபனின் தலைமையில் மறைந்த புரட்சி நடிகர் விஜயகாந்தின் அஞ்சலி நிகழ்வொன்றை கண்டி டெவோன் மண்டபத்தில் நேற்று நடத்தியது. இதில் கலந்து கொண்டவர்கள் அஞ்சலி செலுத்துவதைக் காணலாம்.
(அக்குறணை குறூப், மாவத்தகம நாவலப்பிட்டி குறூப் நிருபர்கள்)

# மழை காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கு விரைவாக நஷ்ட ஈடு

### பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான்

மழை காரணமாக பாதிப்படைந்த விவசாயிகளுக்கு விரைவாக நஷ்ட ஈடு வழங்கப்படும் என கிராமிய, பொருளாதார அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்று சனிக்கிழமை (20) விவசாயிகளுக்கான லேண்ட்மாஸ்டர் இயந்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதேஅவர்இவ்வாறுதெரிவித்தார்.

அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

வவுனியா மாவட்டத்துக்கு 6 லேண்ட்மாஸ்டர்களும், முல்லைத்தீவு மாவட்டத்துக்கும் 6 லேண்ட்மாஸ்டர்களும் வழங்கப்பட்டுள்ளன.

இதில் 50 வீதம் எமது அமைச்சின் ஊடாக மானியமாகவும், மிகுதி 50 வீதம் பயனாளிகளும் வழங்குகிறார்கள். 10 இலட்சம் பெறுமதியான ஒவ்வொரு லேண்ட்மாஸ்டருக்கும் 5 இலட்சத்தை எமது அமைச்சு வழங்கியுள்ளது.

மழை காரணமாக பாதிப்படைந்த மக்களுக்கு தீர்வினை பெற்றுக் கொள்ளும்முகமாகவும்பலவேலைத் திட்டங்களை முன்னெடுத்துள்ளோம்.



மாற்று பயிர்ச்செய்கை, மரக்கறி செய்கை ஊக்குவிப்பு வேலைத்திட்டங்களை முன்னேற்ற நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எமது மக்களுக்கு குறைந்த விலையில் பொருட்களை வழங்க வேண்டும் என்ற ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைய எமது அமைச்சரும், நாங்களும் பல வேலைகளை முன்னெடுத்துள்ளோம். அதில்ஒருகட்டமாகலேண்ட் மாஸ்டர் வழங்கப்பட்டுள்ளது.

மழை காரணமாக விவசாயிகள் பாதிப்படைந்துள்ளார்கள். அவர்கள் மீண்டும் தொழில் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

அவர்களுக்கு நஷ்ட ஈடு வழங்க துரித நடவடிக்கை எடுத்துள்ளோம். தற்போது விபரங்கள் திரட்டப்பட்டுள்ளன. விரைவாக நஷ்டஈடு வழங்கப்படும்.

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் அமைந்துள்ளது.

விவசாயிகளுக்கான ஊக்குவிப்புக்கள் உள்ளன. அதனை நாம் ஆதரிக்க வேண்டும். அதை கொண்டு வந்த ஜனாதிபதிக்கு எமது ஆதரவு உண்டு.

எதிர்வரும் செப்டெம்பர் அல்லது ஒக்டோபர் காலப்பகுதியில் தேர்தல் நடப்பதற்கான வாய்ப்புகள் உள்ளன. அந்த நிலமையின்போது கூட்டுக்கள் தொடர்பில் ஆராய்வோம்.

அப்போது தற்போதைய ஜனாதிபதியை ஆதரிப்பதற்கான கூட்டுக்களே வரும் என நம்புகின்றோம். நாட்டு மக்கள் இன்று எதிர்பார்ப்பது தமது பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதையே.

யாரும் முன்வராத நிலையில் ஜனாதிபதியாக வந்து மக்களது பல பிரச்சினைகளுக்குத் தீர்வு கண்டவர் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க. அவரை தேர்தலில் ஆதரிக்கக்கூடிய நிலையே வரும். அதுவே நாட்டுக்கும் நல்லது. வீட்டுக்கும் நல்லது. மக்களும் அதனையே விரும்புகின்றனர் என்றார்.

## வடக்கின் உதயம்

## வடக்குக்கான இந்திய ஒத்துழைப்பு தொடரும்



இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை , வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் நேரில் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

கொழும்பிலுள்ள இந்திய இல்லத்தில் நேற்று இந்த சந்திப்பு நடைபெற்றது. வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் நல்லிணக்க செயற்பாடுகள், அபிவிருத்தித்திட்டங்கள் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து இதன்போது ஆளுநரால் இந்திய உயர் ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இலங்கைக்கு இந்தியா தொடர்ந்தும் உதவிபுரியும் என தெரிவித்த உயர் ஸ்தானிகர், விசேடமாக வடக்கு மாகாணத்துக்கான ஒத்துழைப்புகள் தொடர்ச்சியாக வழங்கப்படும் எனவும் உறுதியளித்துள்ளார்.

## நயினாதீவு நாகபூசனை அம்மன் ஆலய கும்பாபிஷேகம்

யாழ்.விசேட நிருபர்

நயினாதீவு நாகபூசனை அம்மன் ஆலய திருக்குடமுழுக்குக்காக தங்கத்திலான திருக்குடம் ஆலயத்தில் வைத்து செய்யப்பட்டுள்ளது.

குறித்த தங்க திருக்குட பவனி நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை நடைபெற்று, திருக்குடமுழுக்கிற்காக கங்காதரணி தீர்த்தக் கேணியில் இருந்து தீர்த்தம் எடுக்கும் நிகழ்வு இடம்பெற்றது.

ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 24ஆம் திகதி புதன்கிழமை இடம்பெறவுள்ளது.

பிரதிஷ்டா கிரியைகள் கடந்த புதன்கிழமை ஆரம்பமாகி கிரியைகள் இடம்பெற்று வருகின்றன.

இன்று திங்கட்கிழமை காலை 07 மணி முதல், நாளை செவ்வாய்க் கிழமை மாலை 05 மணி வரை எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும்.

அதனைத் தொடர்ந்து நாளை மறுதினம் புதன்கிழமை காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

அனைவரும் வருகைதந்து நயினாதீவு நாகபூசனை அம்மன் அருள் பெறுமாரு நிர்வாகத்தினர் வேண்டிகொள்கின்றனர்.

## வீதியில் சடலம்

வவுனியா விசேட நிருபர்

வவுனியா திருகோணமலை பிரதான வீதியில் சடலம் ஒன்று மீட்கப்பட்டுள்ளது. வவுனியா, திருகோணமலை பிரதான வீதியின் வவுனியா எல்லைப்புறமாக ஹெப்பற்றிப்கொல்லாவ பகுதியிலேயே இச் சடலம் (20.01) கண்டெடுக்கப்பட்டுள்ளது.

## உயிருக்கு உலை வைத்த ஊஞ்சல்

ஓமந்தை விஷேட நிருபர்

செம்மலை பகுதியில் சிறுவன் ஒருவன் பரிதாபமாக உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது. முல்லைத்தீவு செம்மலை பகுதியில் (20.01.2024) வீட்டில் ஊஞ்சல் ஆடி விளையாடிக் கொண்டிருந்த சிறுவன் கழுத்தில் ஊஞ்சல் கயிறு சுற்றி இறுகியுள்ளது. இதனையடுத்து குறித்த சிறுவனை முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளனர். வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லும் முன்னரே குறித்த சிறுவன் உயிரிழந்து விட்டதாக வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்துள்ளன.

## மின்சாரம் தாக்கி இளைஞன் பலி

சாவகச்சேரி விசேட நிருபர்

கொடிகாமம் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வரணி இயற்றாலைப் பகுதியில் மின்சாரம் தாக்கி 34வயதான இளைஞன் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இந்த இளைஞன் தனது வீட்டில் மின் திருத்த வேலையில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கியதாக தெரிவிக்கப்படுகிறது. உயிரிழந்த இளைஞனுடைய சடலம் மீட்கப்பட்டு சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். இதில் தாவளை இயற்றாலைப் பகுதியைச் சேர்ந்த 34வயதான இளைஞன் ஒருவரே பரிதாபமாக உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

2024ஆம் ஆண்டில்

# அநுராதபுரம் மாவட்ட அபிவிருத்திக்கு ரூபா 517 மில்லியன் ஒதுக்கீடு

## பிரதேச செயலகங்களுக்கும் பகிர்ந்தளிக்க தீர்மானம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

2024ஆம் ஆண்டு அமுல்படுத்தப்படவுள்ள வரவு செலவுத்திட்ட வேலைத்திட்டம் தொடர்பில் மாவட்டத்தின் அபிவிருத்தி முன்னேற்றங்களை ஆராயும் அநுராதபுரம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் வடமத்திய மாகாண சபை கேட்போர் கூடத்தில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது இதில் கலந்து கொண்ட மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் சுகத் நயானந்தா, மாவட்டத்திற்கு 2024 ஆம் ஆண்டுக்கு 517 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மக்கள் தேவை, நிலப்பரப்பு மற்றும் தற்போதுள்ள தேவைகளைக் கருத்தில் கொண்டு, 2024 ஆம் ஆண்டிற்கான பரவலாக்கப்பட்ட தொகை மாவட்டத்தின் ஒவ்வொரு பிராந்திய செயலகத்திற்கும் ஒதுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி பதவிய 17 மில்லியன் , கெப்பிதிகொல்லாவ 28 மில்லியன், மதவாச்சி 29 மில்லியன், ரம்பாவை 24 மில்லியன்,ஹொரவ்பத்தானை 36 மில்லியன், கலென்பிந்துனுவெவ 25 மில்லியன், கஹடகஸ்திகிலிய 27 மில்லியன் , கிழக்கு நுவரகம் பிரிவு 18 மில்லியன், மத்திய நுவரகம் பளாத்தை 29 மில்லியன், மஹவிலச்சி 25 மில்லியன், நொச்சியாகம 33 மில்லியன், தலாவ 25 மில்லியன், தம்புத்தேகம 25 மில்லியன், ராஜாங்கன 15 மில்லியன் , கல்நேவ 18 மில்லியன், இப்பலோகம 18 மில்லியன் , மிஹிந்தலை 18 மில்லியன் , திறப்பனை 23 மில்லியன் , கெக்கிராவ 29 மில்லியன் , பலுகஸ்வெவ 15 மில்லியன், பலாகல 22 மில்லியன், நாச்சாதுவ 14 மில்லியன் ரூபாவும் ஒதுக்கீடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாவட்டத்திற்கு கிடைக்கும் ஒதுக்கீட்டில் குறைந்தபட்சம் ஐம்பது சதவீதத்தை பௌதீக கட்டமைப்பு மேம்பாட்டிற்கும், சுற்றுலாத்தலங்கள் உள்ள இடங்களில் பொது வசதிகளை மேம்படுத்துதல், கிராமப்புற குடிநீர் திட்டங்களை செயல்படுத்துதல், மின்சார வசதி மேம்பாடு, வன விலங்குகளால் பயிர்களுக்கு ஏற்படும் அச்சுறுத்தல் கட்டுப்பாடு, தொழில் முனைவு. அபிவிருத்தி, விவசாய அபிவிருத்தி போன்றவற்றில் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளன.



இந்தக் கூட்டத்திற்கு முன்னாள் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். சந்திரசேன, முன்னாள் மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித், முன்னாள் அமைச்சர் எச்.பி. சேமசிங்க, உட்பட அரசியல் அதிகாரிகள், மாவட்ட செயலாளர் ஜனக ஜயசுந்தர, மேலதிக மாவட்ட செயலாளர் செல்வி ஷமிலா விக்கிரமாராச்சி, மாவட்டத்தின் அனைத்து பிரதேச செயலாளர்கள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர்கள் கலந்து கொண்டனர்.

# பம்பலபிட்டி முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு சூரிய ஒளியிலான மின்சார திட்டம்

**ருஸைக் பாரூக் , அஷ்ரப் சமத்**

கொழும்பு 04, முஸ்லிம் மகளிர் கல்லூரியில் முதல் தடவையாக சூரிய ஒளி யிலான மின் இணைப்பு திட்டம் அண்மையில் பாடசாலையில் கல்லூரி அதிபர் நஸ்ரியா முனாஸ் தலைமையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

பாடசாலை பழைய மாணவிகள் சங்கத்தினால் இத்திட்டம் பாடசாலை அதிபரிடம் அண்மையில் கையளிக்கப்பட்டு வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

பசுமை ஆற்றலுடன் புதிய யுகத்துக்கான பயணத்தைத் தொடங்கும் பாடசாலையில் பழைய மாணவர் சங்கம் கனவுகளை நனவாக்குவதில் பெரும் பங்காற்றி வருவதாக பாடசாலை அதிபர் இதன்போது தெரிவித்தார். பாடசாலை பழைய மாணவர் சங்கத்தின் ஆண்டுத் திட்டத்தில் 2023 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட திட்டங்களில் இதுவும் ஒன்றாகும்.

சங்கத்தின் தலைவி திருமதி பெரோசா முஸம்மில், தனக்குத் தெரிந்த தொடர்புகள் மூலம் நன்கொடையாளரை அழைத்து வருவதில் வெற்றி பெற்றுள்ளதாகவும் ஏற்பாட்டாளர்கள் நன்றியும் தெரிவித்தனர்.





கொழும்பு பல்கலைக் கழக சுதேச வைத்திய பீடத்தின் யூனாணி மருத்துவத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I) புத்தளத்தைச் சேர்ந்த டாக்டர் மஹீஸ் அவர்களுக்கு நீண்ட காலம் (35 வருடங்கள்) சேவையாற்றிமைக்கான "LONG SERVICE AWARD" விருதினை கொழும்பு பல்கலைக் கழகம் வழங்கி அண்மையில் கௌரவித்தது. கொழும்பு பல்கலைக் கழகத்தின் New Arts Theatre இல் இடம் பெற்ற விருது வழங்கும் நிகழ்வில் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எச். டி குணரத்னவினால் இவருக்கு விருது வழங்கி கௌரவிக்கப்படுவதை படத்தில் காணலாம். (படம்: புத்தளம் தினகரன் நிருபர்)


## க்ளசிக் டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல. - PV3950

2007ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டப் பிரிவுகளுக்கு அமைவாக கம்பனி கலைப்பு அறிவித்தலும் கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தலும்

| | |
|---|---|
| கம்பனியின் பெயர் | : க்ளசிக் டீஸ் (பிரைவேட்) லிமிட்டட் |
| பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி | : இல. 200, அம்பத்தலே வீதி, கித்தம்பஹுவ, வெல்லம்பிட்டிய |
| நீதிமன்றம் | : வர்த்தக உயர் நீதிமன்றம் மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்) |
| வழக்கு இல. | : CHC 22/2021/CO |
| நீதிமன்ற கட்டளைத் திகதி | : 15.03.2023 |
| கோரிக்கை தாக்கல் செய்த திகதி | : 15.05.2021 |
| கம்பனி கலைப்பாளரின் பெயர், முகவரி | : Gerad Jeevananthan David Liquidator, No. 11, Castle Lane, Colombo 4 |
| நியமன திகதி | : 15.03.2023 |

### மாவட்ட செயலகம் - அநுராதபுரம்

## நிர்மாணத்திற்கான ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் — 2024

அநுராதபுர மாவட்ட செயலகத்தில் கீழ் உள்ள கீழ்க்காணும் பிரதேச செயலகங்கள் 22 உடன் சம்பந்தப்பட்ட 2024ம் ஆண்டிற்கான நிர்மாண ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்வதற்கு அநுராதபுர மாவட்டத்தில் அமைந்துள்ள நிறுவனங்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. பதவிய | 09. நாச்சாதுவ | 17. கலென்பிந்துனுவெவ |
| 02. ஹொரொவ்பொதான | 10. நொச்சியாகம | 18. தம்புத்தேகம |
| 03. ரம்பேவ | 11. நெ.நு.ப. | 19. தலாவ |
| 04. பலாகல | 12. கெபிதிகொல்லாவ | 20. மஹவிலச்சிய |
| 05. இபலோகம | 13. மெதவச்சிய | 21 ராஜாங்கனை |
| 06. கஹட்டகஸ்திகிலிய | 14. பிலுகஸ்வெவ | 22. ம.நு.ப. |
| 07. மிஹிந்தலை | 15. திரப்பனே | |
| 08. கல்நேவ | 16. கெக்கிராவ | |

02. பதிவிற்கான விண்ணப்பங்களை மாவட்ட செயலகம் அல்லது மேற்படி பிரதேச செயலகங்களின் காசாளரிடம் ரூ. 1000.00 தொகையை (இத்தொகை மீளளிக்கப்பட மாட்டாது) செலுத்தி வாரத்தின் வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை பெற்றுக் கொள்ளலாம். விண்ணப்பங்கள் விநியோகித்தல் 2024.01.23 முதல் 2024.02.13 வரை இடம் பெறும்.

03. விண்ணப்பதாரிகளுக்கு மாவட்ட செயலகம் மற்றும் சகல பிரதேச செயலகம் சார்பாக பதிவு செய்யக்கூடியதுடன் தேவையெனில் பெயர் தேர்ந்தெடுக்கப்படும் சில அலுவலகங்களுக்கும் பதிவு செய்யலாம்.

04. பதிவிற்காக நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) பதிவு கட்டாயமாகும்.

05. விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதி 2024.02.20 ஆவதுடன் அன்று மு.ப. 11.00 இற்கு முன் கிடைக்குமாறு சகல விண்ணப்பங்களையும் பதிவுத் தபாலில் மாவட்ட செயலாளர் மாவட்ட செயலகம், அநுராதபுரம் என்ற முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் கையோடு கொண்டு வந்து ஒப்படைப்பதாயின் மாவட்ட செயலகத்தின் கணக்குப் பிரிவிற்கு கொண்டு வந்து ஒப்படைக்கலாம். குறித்த தினம் குறித்த நேரத்தின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

06. விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது மேல் மூலையில் 'ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல் 2024' என்று குறிப்பிடல் வேண்டும்.

07. மாவட்ட செயலகத்தின் பிரதம கணக்காளரின் தொ.பே. இல. 071-8345952ஐ அழைத்து மேலதிக விபரங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

**ஜே.எம்.ஜே.கே. ஜயசுந்தர,**
**அரசாங்க அதிபர்/மாவட்டசெயலாளர்,**
**அநுராதபுரம்.**

2024.01.22

## சிறு விளம்பரம்

### மோட்டார் வாகனங்கள்

117 **வேன்கள் விற்பனைக்கு**

2536573 Toyota Hi-ace, 1991, கூடியவிலைக் கோரி க்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 0714 542958 005085

118 **ஜீப்புகள்,பிக்கப்புகள் விற்பனைக்கு**

PS-5249 Mahindra Bolero Cab - 2012, கூடியவிலைக் கோரிக்கைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி, இல. 310, காலி வீதி, கொழும்பு 03. தொ. பே 07 145 42958 005087

### இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

**TENDER FOR INSTALLATION & COMMISSIONING OF MANAGED FIREWALL SYSTEM (MONTHLY RENTAL BASIS) FOR HQ BUILDING AT DARLY ROAD & CBD BUILDING AT COLOMBO-01 OF SLPA**

**Tender No.: EW/13/EL/2024/FIREWALL**

1. Tender for installation & commissioning of Managed Firewall System (Monthly Rental Basis) for HQ building at Darly Road & CBD Building at Colombo-01 of SLPA என்பதற்காக ஆர்வமுள்ள சாரார்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபையின் சார்பாக, திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார்.
2. 05 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட கேள்விக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென விலைமனுதாரர்கள் இத்தால் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக, ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபாடுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தத்தின் முழுக்காலமும் மேற்கூறப்பட்ட சட்டத்திற்கு கண்டிப்பாக அமைந்தொழுகுவதுடன் அவரின் விலைமனு ஆவணங்களுடன் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழையும் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
3. கடந்த மூன்று வருடங்களில் விலைமனுதாரரானவர் நிகரான வர்த்தக சேவையில் இருந்திருத்தல் வேண்டும்.
4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, மின்னியல் மற்றும் இலத்திரனியலுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று வேலை நாட்களிலும் சாதாரண அலுவலக நேரங்களிலும் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.
5. ஒப்பந்தத்தைப் பெறுவதற்கான தகுதிக்காக, சித்திகரமான விலைமனுதாரர் ஈஎம்3 (ஈஎல்வி) என்ற தரத்தில் **CIDA** பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
6. 2024.01.22 ஆம் திகதியிலிருந்து 2024.02.06 ஆம் திகதி வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமாக 2,000 ரூபாவை (வரிகள் அடங்கலானது) ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், மின்னியல் மற்றும் இலத்திரனியல் பிரதான பொறியியலாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், கொழும்பு-01, லெய்டன் பஸ்தியன் வீதி, 45 ஆம் இலக்கத்திலுள்ள இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை, பொறியியல் வேலைகள் கிளையிலிருந்து ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.
7. 2024.02.07 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் அதே முகவரியில் கேள்வியை மூடிய பின்னர், சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் உடனடியாகவே திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் 22,000 ரூபா பெறுமதியான விலைமனுப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு (இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை),**
**பிரதான பொறியியலாளர் (மின்னியல் மற்றும் இலத்திரனியல் மே/பா.)**
**மின்னியல் மற்றும் இலத்திரனியல் பொறியியல் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி,**
**கொழும்பு-01.**

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

## போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்

| S.No. | Item Code | Non-refundable tender fee (Rs) | Supply, Installation, Maintenance & Commissioning of | Bid Security |
|---|---|---|---|---|
| 1. | JTH/SA/P01/GAR.BAG/2024 | 1,000.00 | Supply of Garbage Bags & Shoes | 100,000.00 |
| 2. | JTH/SA/P02/HDWE & WKSP/2024 | 1,000.00 | Supply of Building & Workshop Items | 100,000.00 |
| 3. | JTH/SA/P03/STATIONARY/2024 | 1,000.00 | Supply of Stationary Items | 100,000.00 |
| 4. | JTH/SA/P04/WASHING.MATER/2024 | 1.000.00 | Supply of Washing Materials | 100,000.00 |
| 5. | JTH/SA/P05/CLO.MAT/2024 | 1,000.00 | Supply of Cloth Materials | 100,000.00 |
| 6. | JTH/SA/P06/WATER SUPPLY/2024 | 1,000.00 | Supply of Water Supply Items | 100,000.00 |
| 7. | JTH/SA/P07/TONER/2024 | 1,000.00 | Supply of Toners | 50,000.00 |
| 8. | JTH/SA/P08/ELECTRICAL/2024 | 1,000.00 | Supply of Electrical Items | 100,000.00 |

1. யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவரினால் மேலே குறிப்பிடப்பட்டுள்ள வகுதிக்கான வழங்கலுக்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பெற்றுக் கொள்ளப்படும்.
2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் முறைமை மூலம் நடாத்தப்படும்.
3. இலங்கை சந்தையில் முன்வைக்கப்படும் உற்பத்திகளின் ஏக நியமிக்கப்பட்ட பிரதிநிதி/தரஅங்கீகாரம் பெற்ற முகவர்கள் மாத்திரமே இந்த விலைமனுவில் பங்கேற்பதற்கான தகுதியை பெற்றுக்கொள்வர்.
4. மூலப்பிரதியில் செயற்றிட்டத்திற்காக விலைமனுக்கோரல் ஆவணங்களில் முழுமையான தொகுதியொன்றில் தயாரிக்கப்பட்ட முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் 2024 பெப்ரவரி 06 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என முகவரியிடப்பட்டு பதிவுத்தபாலில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டும்.
5. பின்வருவனவற்றைச் சமர்ப்பித்து, 2024.01.22 ஆம் திகதியிலிருந்து 2024.02.04 ஆம் திகதியன்று வரையும் மேலேயுள்ள முகவரியிலுள்ள கணக்காளரிடமிருந்து விலைமனு ஆவணங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.
   - அ) யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பிராந்திய பெறுகைக் குழுத் தலைவருக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்று.
   - ஆ) வியாபார பதிவுச் சான்றிதழ் (உறுதிப்படுத்தப்பட்ட பிரதி)
   - இ) யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலையின் பணிப்பாளரிடம் ரொக்கப் பணத்தில் மேலே கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை செலுத்துதல்.
6. விலைமனு செயற்றிட்டங்கள் அட்டவணை/ ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளவாறான விலைமனுப் பிணையானது இலங்கைப் பணத்தில் அனைத்து விலைமனுக்களுடனும் ரொக்கப் பணத்தில் அல்லது வங்கி உத்தரவாதத்துடனும் இணைக்கப்படல் வேண்டுமென்பதுடன் செல்லுபடியாகும் காலப்பகுதியானது விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு (2024.06.04 ஆம் திகதி வரையும்) இருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர், உடனடியாகவே பணிப்பாளர்/பணிப்பாளரின் அலுவலகத்தில் திறக்கப்படுமென்பதுடன் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவார்கள்.
8. எமது வைத்தியசாலையின் பெறுகைப் பிரிவில் விலைமனு ஆவணங்கள் இலவசமாக பரீட்சிக்கப்படலாம்.
9. யாழ்ப்பாணம், போதனா வைத்தியசாலை, பணிப்பாளர்/ கணக்காளரிடமிருந்து 021-222 3149/ 021 221 2482 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக மேலதிக தகவலைப் பெற்றுக் கொள்ளலாம்.

**பணிப்பாளர்/தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**போதனா வைத்தியசாலை,**
**யாழ்ப்பாணம்.**
**22.01.2024**

# இலங்கை முதலீட்டுச் சபை (BOI)

## பெறுகை அறிவித்தல்

கீழே குறிப்பிட்டுள்ள பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பானது 2024 ஜனவரி 22 ஆம் திகதியிடப்பட்ட "டெயிலி நியுஸ்" பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ளதுடன் இமுச இன் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

**INVITATION FOR BIDS FOR SUPPLY, INSTALLATION, COMMISSIONING AND MAINTENANCE OF SURVEILLANCE CCTV SYSTEMS TO KEPZ & BEPZ**
**Contract No.: BOI/ADMIN/S&S/Q/008/2024**

இந்த பெறுகைக்கான விலைமனுக்கோரல் ஆவணமானது ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளதினால் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் 'டெயிலி நியுஸ்' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்திற்கமைவாகவும் முதலீட்டுச் சபையின் www.investsrilanka.com என்ற உத்தியோகபூர்வ இணையதள விளம்பரத்திற்கு அமைவாகவும் செயற்படலாம்.

மேலதிக தகவலை விலைமனுதாரர்கள் 011 2543041/074 1531432 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் வழியாக நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

# இலங்கை வங்கி

## ஏலவிற்பனை அறிவித்தல்

**1968ஆம் ஆண்டின் 34ஆம் இலக்கச் சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டின் 10ஆம் இலக்கச் சட்டத்தாலும் 2000 ஆம் ஆண்டின் 54 ஆம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கிக் கட்டளைச்சட்டத்தின் 22 ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் அறிவித்தல்.**

மேலதிகப்பற்று தொடர்பு இல. 85228626.

நீர்கொழும்பு, துங்கலபிட்டிய, தேவாலய வீதி, எனும் முகவரியைச் சேர்ந்த திருமதி சக்ரவர்திகே சித்ரா பெர்ணான்டோ - நீர்கொழும்பு துங்கலபிட்டிய, தேவாலய வீதியில் அமைந்த ஜொஸ்றின் விக்ஸன் டிசைன் அன்ட் மொடெல் சென்றர் பிரைவேற் லிமிடெற்றின் பணிப்பாளர் ஈடு வைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 19ஆம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர் சபை மேற்கொண்ட தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2023.10.13 ஆம் திகதி 2354 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 2023.10.11ஆம் திகதி தினகரன், தினமின, மற்றும் டேய்லிநியூஸ் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கு அமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26 இன் கீழ் அறவிடவேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் அதே இடத்தில் வைத்து இல. 50/3, விஹார மாவத்தை, கொலன்னாவ எனும் முகவரியைச் சேர்ந்த M/s T&H ஒக்ஷன் ஏலநிறுவனத்தின் ஏலதாரர் திரு M.H.T. கருணாரத்ன அவர்கள் 20.02.2024 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**முதலாவது அட்டவணையானது**

"கொரக்காஹாவத்த" என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு.எஸ்.எஸ். பெரேரா தயாரித்த 1993.05.27ஆந் திகதியிட்ட 2057ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான **காணியானது** மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அலுத்குரு கோரளை தசியா பற்று, நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள்,163 B துங்கலபிடிய கிராம அலுவலர் பிரிவில், துங்கலபிடிய எனும் இடத்தில் அமைந்துள்ளது. இக்காணித்துண்டானது வடக்கில் வீதியையும், (வி.சி) **கிழக்கில்** வீதியையும், (வி.சி) **தெற்கில்** ஜெ.எம். எட்மண்ட் ஜெயமஹா மற்றும் எல்.எம். ரணசிங்ஹ மற்றும் ஏனையோரின் காணிகளையும் **மேற்கில்** எல், ரணசிங்ஹ மற்றும் ஏனையோரின் காணிகளையும் மற்றும் வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது இக்காணித்துண்டானது குறிப்பிட்ட 2057ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள், மற்றும் அக்காணியிலுள்ள அனைத்துடனும் **ஒரு ஏக்கர் ஒரு ரூட் மற்றும் பதினான்கு பேர்ச்சுகள் A1.R1-P14)** பரப்பளவைக் கொண்டுள்ளது.

**குறித்த காணியானது இங்குக் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள காணியின் மீளளவையாகும்.**

**"கொரககாஹாவத்த"** என்ற காணியின் உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ. சிறிசேன தயாரித்த 1977.10.28ஆந் திகதியிட்ட 120/77ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள அடையாளமிடப்பட்ட பிரிக்கப்பட்டதும் எல்லை வரையறுக்கப்பட்டதுமான **காணியானது** மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம் அலுத்குரு கோரளை தசியா பற்று, நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட, நீர்கொழும்பு மாநகர சபை எல்லைகளுள் 163 B துங்கலபிடிய கிராம அலுவலர் பிரிவில், துங்கலபிடிய எனும் இடத்தில் அமைந்துள்ளது இக்காணித் துண்டானது வடக்கில் கிராமசபை வீதியையும், **கிழக்கில்** கிராமசபை வீதியையும், **தெற்கில்** ஜெ.எம். எட்மண்ட் மற்றும் ஜெத்தா குருனாண்சே ஆகியோரின் காணிகளையும் மேற்கில் ஜெத்தா குருனாண்சே என்பவரின் காணியையும் கிராம சபை வீதியையும் எல்லைகளாகக் கொண்டுள்ளது இக் காணித்துண்டானது குறிப்பிட்ட 120/77ஆம் இலக்க வரைபடத்தின்படி அங்குள்ள மண், மரங்கள், தோட்டங்கள், கட்டடங்கள், மற்றும் அக்காணியிலுள்ள அனைத்துடனும் **ஒரு ஏக்கர் ஒரு ரூட் மற்றும் பதினைந்து பேர்ச்சுகள் (A.1R1-P 15)** பரப்பளவுடன் C888/268 என்ற இலக்கத்தின் கீழ் நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

"மேற்குறிப்பிட்ட ஆதனம் சம்பந்தமான உரித்துரிமை உறுதிகளையும் சம்பந்தப்பட்ட ஏனைய ஆவணங்களையும் ஏலவிலை கூறுவோர் சுதந்திரமாக பரீட்சிப்பதற்கு தொ.பே.இல. 0112930397 ஊடாக பேலியகொடை மேற்தரக் கிளை சிரேஷ்ட முகாமையாளருடன் தொடர்பு கொள்வதன் மூலம் பரீட்சிக்கலாம்."

**1.1 பணம் செலுத்தும் முறை.**

விலைக்கு வாங்குபவர் ஏலவிலை கூறல் வெற்றியடைந்ததும் பணத்தை பின்வருமாறு செலுத்த வேண்டும்.

1.1 வாங்குபவர் கொள்வனவு விலையில் 10%ஐ (பத்து சதவீதம்) உடனே செலுத்த வேண்டும்.
1.2 வற் (VAT) கட்டணம். (ஏற்புடையதாயின்)
1.3 விற்பனை வரி விதிப்பனவாக உள்ளூராட்சி அதிகாரசபைக்கு 1% (ஒரு சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.4 ஏலதார தரகுக் கட்டணம் மற்றும் ஏனைய செலவுகளாக 2.5% (2.5 சதவீதம்) செலுத்த வேண்டும்.
1.5 விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய செலவுகள். (ஏற்புடையதாயின்)
1.6 ஏனைய கட்டணங்கள் மற்றும் செலவுகள்.

மேலும் கொள்வனவு விலையில் 10% ஐ ஏலவிற்பனைத் திகதி தொடக்கம் 30 நாட்களுக்குள் செலுத்த வேண்டும். அத்துடன் விற்பனைத் தினத்திலிருந்து மூன்று மாதங்களுக்குள் கொள்வனவு விலையில் மீதி 80% ஐ செலுத்த வேண்டும். இவற்றுக்கு மேலதிகமாக முத்திரைக்கட்டணம் மற்றும் நொத்தாரிஸ் கட்டணம், விற்பனை நிபந்தனைகள் மற்றும் விற்பனைச் சான்றிதழ் அத்தாட்சிப்படுத்தல் கட்டணம் ஆகியவற்றை செலுத்த வேண்டும்.

மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்கமறுப்பின் ஏல விலை கூறிய தினத்தில் கொள்வனவாளர் செலுத்திய சகல பணங்களையும் பறிமுதல் செய்யும் அதிகாரமும் ஆதனத்தை மீண்டும் ஏலத்தில் விடும் அதிகாரமும் வங்கிக்கு உண்டு.

**ஆதனத்துக்கு பிரவேசிக்கும் வழி**

கொழும்பிலிருந்து ஜா - எல வரை பயணித்து பமுனுகம வீதிக்கு இடதுக்கு திரும்பி நீர்கொழும்பு வீதியில் சுமார் 12 கி.மீ. துங்கல்பிட்டிய பள்ளி வரை பயணித்து சியவஸ் ஜூபிலி மாவத்தையை நோக்கி வலதுக்கு திரும்பி சுமார் 400 கி.மீ. பயணித்து இடதுக்கு திரும்பி ஆதனத்துக்கு செல்லும் வீதியில் சுமார் 150 மீற்றர் சென்றால் இக்காணி இடது பக்கத்தில் விஸ்கன்ட் ஹோல்டிங் தொழிற்சாலைக்கு முன்னால் காணப்படுகின்றது. இக்காணிக்கு நீர்கொழும்பிலிருந்து வாகனப் போக்குவரத்துக்கான வழி உள்ளது.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு.ஜீ.எச்.எம்.என். ஜயதிலக்க**
**சிரேஷ்ட முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**மேற்தரக் கிளை**
**பேலியகொடை.**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

The Housewives' companion
Classifieds on
Daily News

# மாத்தளை நிக்ககொள்ள வை.எம்.எம்.ஏயின் 25 வருட பூர்த்தி விழா நிகழ்வுகள்

*(மாத்தளை சுழற்சி நிருபர்)*

மாத்தளை நிக்ககொள்ள வை.எம்.எம்.ஏயின் 25 வருட பூர்த்தியை முன்னிட்டு வெள்ளி விழா எதிர்வரும் 25ஆம் திகதி காலை 8 மணிக்கு நிக்ககொள்ள மின்ஹாஜ் மகா வித்தியாலய பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. மேற்படி வை.எம்.எம்.ஏ தலைவர் டி .எம். சனீர் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் அகில இலங்கை வை. எம். எம். ஏ. பேரவையின் தேசிய தலைவர் ஹமீத் ஹுசைன் பிரதம அதிதியாகவும் வை.எம்.எம்.ஏ பேரவையின் முன்னாள் தலைவர் எம்.எல்.ஏ. ரிஸ்மி விசேட அதிதியாகவும் கலந்து கொள்ளவுள்ளனர். இவ்விழாவை முன்னிட்டு கட்டுரை, கவிதை, அரபு எழுத்தணி, விவாத போட்டிகள் மற்றும் மரதன் ஓட்டப் போட்டி, மைதான விளையாட்டு நிகழ்வுகள் என்பன கடந்த 15 தினங்களாக இடம்பெற்று வருகின்றன.

இப்போட்டிகளில் பங்குபற்றி வெற்றியீட்டியவர்களுக்கு அந்நிகழ்வில் பரிசில்களும் , சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல் (IFB)

**பலாங்கொடையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைக்கு (Aggregate Materials) வழங்குவதற்கான விலைமனுக்கோரல்**

பலாங்கொடையிலுள்ள வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் அஸ்போல்ட் ஆலைக்கு (Aggregate Materials) வழங்குவதற்கான முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.01.22** ஆம் திகதி முதல் **2024.02.12** ஆம் திகதி வரை **www.rda.gov.lk** இல் வீதி அபிவிருத்தி அதிகார சபை மற்றும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணையதளத்தைப் பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வவுனியாப் பல்கலைக்கழகம் இலங்கை**

# துணைவேந்தர் பதவி

01. வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பேரவை 1978 ஆம் ஆண்டைய 16ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் சட்டத்தின் 34ஆம் பிரிவு மற்றும் அதன்பின் வந்த திருத்தங்களின் பேரில் செயற்படுமாறு வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரி அழைப்பு விடுக்கின்றது. பதவிக்கான தெரிவு 03/ 2023 இலக்க 10.04.2023 திகதிய சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ள முறையில் இடம்பெறும் என விண்ணப்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளவர்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன். விபரங்கள் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் வலைத்தளத்தின் https://www.ugc.ac.lk/attachments/2442_Commission%20 Circular%20No.%2003-2023.pdf இணைப்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் விண்ணப்ப முடிவுத்தினத்தில் 63 வயதிற்குட்பட்டவராகவும் இருக்க வேண்டும். பதவிக்கு நியமனம் செய்யப்படும் விண்ணப்பதாரி நியமனம் பெற்ற தினத்திலிருந்து மூன்று வருடங்களுக்கு அல்லது அவர் தனது 65 வயதைப் பூர்த்தி செய்யும் நாள் இவ்விரண்டில் எது முன்வருகின்றதோ அதுவரை பதவி வகிப்பார்.

    நிலையான மாற்றத்துக்கான அறிவு முன்னேற்றத்திலும் அதன் பரவலிலும் சிறந்து விளங்கும் முன்னணி நிலையமாதல் வவுனியா பல்கலைக்கழகத்தின் தூரநோக்கமாகும். பிராந்தியத்தினதும் தேசத்தினதும் நிலையான அபிவிருத்திக்கும் பட்டதாரிகளை வலுவூட்டுவதற்கான முழுமையான கூட்டுழைப்பு, கல்வித்தரம், புத்தாக்கத்துக்கான ஆராய்ச்சி என்பவற்றில் சிறந்து விளங்குதல் வவுனியாப் பல்கலைக்கழகத்தின் பணிக்கூற்றாகும். இப்பல்கலைக்கழகம் வவுனியாவில் மூன்று பீடங்களை கொண்டமைந்து ஏறத்தாழ மூவாயிரம் பட்டதாரி மாணவர்களை கொண்ட தொகையினருக்கு தொழில்சார் மற்றும் சான்றங்கீகாரமளிக்கப்பட்ட பட்டப்படிப்பு நெறிகளை வழங்கி வருகிறது. துணைவேந்தர் இந்நடவடிக்கைகளுக்கு வலுவூட்டித் துணைபுரியமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

02. துணைவேந்தர் தனது அறிவுசார் வாண்மை மற்றும் மேலாண்மை என்பவற்றின் பிரகாசிப்பினூடாக பல்கலைக்கழத்தின் உயர்நோக்கு மற்றும் அதன் இலக்குகளை முன்னெடுத்து செல்வதற்கு ஏற்ற வகையில் ஒரு உயர்நோக்கு உடையவராக இருத்தல் வேண்டும். மேலும், துணைவேந்தர் உயர்கல்விக்கான தேசியக் கொள்கைகள் தொடர்பில் தேசத்தின் தேவைகளை இனங்காண்பதற்கு அழைப்பு விடுக்கப்படுபவராகவும் உள்ளார். அவர் ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு உள்ளடங்கலாக அவரது தலைமைத்துவம் மற்றும் கல்விசார் நடவடிக்கைகளினூடாக பல்கலைக்கழகத்தை முன்னேற்றுவதற்காகக் காலத்தால் பரீட்சிக்கப்பட்ட விழுமியங்களைப் பலப்படுத்த வல்லவராகவும் இருத்தல் வேண்டும். எனவே விண்ணப்பதாரி கல்வியில் மீயுயர் நிலையும், நாணயமும் வலிமையான ஆராய்ச்சிப் பின்புலத்தோடு கூடிய தலைசிறந்த சாதனைகளுக்கு உரித்துடையவராகவும், பலதரப்பட்ட ஆர்வக் குழுக்களுடன் அறிவார்ந்த நிலையில் தொடர்புறுவதற்காக நிரூபிக்கப்பட்ட தலைமைத்துவ பண்புகளையும் ஆட்தொடர்பாடல் திறன்களையும் கொண்டவராகவும், கொள்கை விடயங்களில் ஒரு தெளிவான புரிதல் உடையவராகவும், மாணவர் மற்றும் ஊழியர் ஆகியோரின் பலதரப்பட்ட ஈடுபாட்டைத் தூண்டக்கூடிய வல்லமையுடன் கூடிய உன்னதமான தொடர்பாடற் திறன்களையும் தீர்மானங்களைத் திறம்பட நடைமுறைப்படுத்துவதில் பற்றுறுதியும் கொண்டவராகவும் விளங்குமாறு எதிர்பார்க்கப்படுகிறார்.

    துணைவேந்தர் முழுநேர உத்தியோகத்தர் என்பதோடு அவரே பிரதம நிறைவேற்று அதிகாரியும், பிரதம கல்விசார் அதிகாரியும் ஆவார். துணைவேந்தரே பிரதம கணக்கீட்டு அதிகாரியும் ஆவார். பல்கலைக்கழகப் பேரவை மற்றும் மூதவை என்பவற்றின் பதவி வழி உறுப்பினரும் தலைவரும் அவரே ஆவார். பல்கலைக்கழகத்துள் ஒழுக்கத்தை பேணும் பொறுப்பு அவருக்குரியது. பல்கலைக்கழகத்தின் சட்டமும் அதன் எந்தவொரு பொருத்தமான கருவியும் விதித்துரைத்தவைகள் முறையாகப் பேணப்படுவதனை உறுதி செய்தல் துணைவேந்தரின் கடமை என்பதனால் அந்த நோக்கத்திற்காக அவர் அவசியம் என்று கருதத்தக்க எல்லா அதிகாரங்களையும் பயன்படுத்துதல் வேண்டும்.

    துணைவேந்தர் கல்விக்கான தலைமைத்துவத்தை வழங்கல், ஆற்றொழுக்கான வகையில் அமையுமாறு மேலாண்மைக்கான கொள்கைகளை உருவாக்குதல், அறிமுகப்படுத்தல், நடைமுறைப்படுத்தல் என்பவற்றோடு பேரவைத் தீர்மானங்களை நடைமுறைப்படுத்தல், பல்கலைக்கழகத்தின் பொது நிர்வாகம் என்பவற்றுக்குப் பொறுப்பானவர் என்பதனால் கல்வியில் உன்னதம், நல்லாட்சி ஆகிய கோட்பாடுகளை உயர்த்திப் பிடிப்பவராக இருத்தல் வேண்டும். வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூறும் தகைமை, ஜனநாயக மேலாண்மை மற்றும் சார்புநிலையற்ற திறமிகு தலைமைத்துவம் என்பவற்றையும் நிலைநிறுத்தும் பொறுப்பும் துணைவேந்தருக்குரியது.

    வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகும் விருப்புடையவர் கடினமானதும், நெருக்கடியானதும், சடுதியான நிலைமாறுதல்களை உடையதுமான சூழ்நிலைகளை தன் திறனாற்றல் மற்றும் சாதுர்யத்தின் மூலம் திறம்படக் கையாளக் கூடியவராக இருத்தல் வேண்டும். கைக்கொண்ட காரியத்தின் தன்மையைப் பொறுத்து நெடுமணி நேரம் பணியாற்றக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்.

    துணைவேந்தர் பல்கலைக்கழக முறைமையில் கல்விசார் சம்பள அளவுத்திட்டத்தில் அதியுயர் நிலையில் வைக்கப்படுவதற்கு உரித்துடையவர் என்பதோடு அதன்மேல் அச்சம்பளத்தின் 15% இனை உபசரிப்புப் படியாகப் பெறுவதற்கும் உரித்துடையவராவார்.

03. விண்ணப்பங்கள் கீழ்வரும் ஆவணங்களை இணைக்க வேண்டும்.
    i. பிறந்த திகதியையும் உள்ளடக்கிய ஒரு முழுமையான சுயதகைமை விபரப் பட்டியல்.
    ii. விண்ணப்பதாரி பல்கலைக்கழக அபிவிருத்திக்கான உயர் நோக்குக்கான கூற்றுடன் அவர் நியமிக்கப்படும் பட்சத்தில் தான் அடைய முன்மொழிவன பற்றியதொரு சுருக்கமான விளக்கம்.
    iii. தற்போது இப்பதவியை வகிப்பவர் அல்லது முன்னர் இப்பதவியை வகித்தவர் விண்ணப்பதாரி எனின் அவர் தான் தன்னுடைய முன்னைய பதவிக்காலத்தில் சாதித்தவை பற்றியும் எதிர் காலத்திற்கான திட்டங்கள் பற்றியும் கோடிட்டுக் காட்டும் வகையிலான அறிக்கையொன்றை மேலே பந்தி (ii) இல் குறிப்பிட்டுள்ள ஆவணங்களுக்கு மேலதிகமாக கையளிக்க வேண்டும்.
    iv. விண்ணப்பதாரி அரச பொதுத்துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சபைகள், வவுனியாப் பல்கலைக்கழகம் தவிர்ந்த ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள் என்பவற்றில் யாதாவதொன்றில் சேவை புரிபவராயின் அவர் இப்பதவிக்கு நியமிக்கப்படுவாராயின் அவர் விடுவிக்கப்படமுடியுமா என்பதனை அறியத்தரும் பொருட்டு தொழில் கொள்வோரிடமிருந்து ஒரு கடிதம்.

    விண்ணப்பங்கள் "பேரவைச் செயலாளர், பதிவாளர் அலுவலகம், வவுனியாப் பல்கலைக்கழகம், மன்னார் வீதி, பம்பைமடு, வவுனியா" என முகவரியிட்டு மூடிய கடித உறையில் **21.02.2024** அன்று பி.ப **3.00** மணிக்கு முன்னதாகக் கிடைக்கக் கூடியதாகப் பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைக்கப்படவோ நேரடியாகக் கையளிக்கப்படவோ கூடும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் 'துணைவேந்தர் பதவி' எனக் குறித்திருக்க வேண்டும்.

    மேலதிகமாக, மேலே உள்ள ஆவணங்கள் மற்றும் கையடக்க ஆவண வடிவமைப்பு (PDF) வடிவத்தில் உள்ள வேறு ஏதேனும் துணை ஆவணங்களின் மென்பிரதி எனது மின்னஞ்சல் முகவரி: registrar@vau.ac.lk இற்கு 21.02.2024 அன்று முடிவடைவதற்கு முன் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

04. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 03/2023 இல் பரிந்துரைக்கப்பட்டுள்ளபடி, விண்ணப்பங்கள் முடிவு திகதியிலிருந்து இரு மாதங்களுக்குள் மதிப்பீட்டிற்காக மற்றும் நேர்காணலுக்காக சிறப்பு பேரவைக் கூட்டம் வேலை நாள் ஒன்றில் கூட்டப்படும். ஒரு விதிவிலக்கான சூழ்நிலையில், எந்தவொரு விண்ணப்பதாரரும் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு நேரில் தோன்றமுடியாத நிலையில், செயலாளரிற்குத் தரும் முன்னறிவித்தல் மூலம் நிகழ்நிலையில் (virtual mode) தோன்ற அனுமதிக்கப்படுவார்.

    ஒரு சுருக்கமான 10 நிமிடங்களுக்குக் குறையாததும் 15 நிமிடங்களுக்கு மேற்படாததுமான விளக்கக் காட்சியை நிகழ்த்துவதற்கு விண்ணப்பதாரர்கள் சிறப்பு பேரவைக் கூட்டத்திற்கு முன் அழைக்கப்படுவார்கள். ஆயினும் எந்தவொரு வேட்பாளரும் அவ்வேட்பாளர் பேரவை உறுப்பினராய் இருந்தாலும் கூட வேறொரு வேட்பாளரின் விளக்கக்காட்சியின் போது பங்குபற்றுவதற்கு அனுமதிக்கப்படமாட்டார்.

    விசேட பேரவைக் கூட்டத்தின் அறிக்கையொன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கை 03/2023 இன் படி மூன்று பெயர்களை விதந்துரைக்கும்படி தயார்செய்யப்பட்டு அனைத்து ஆவணங்களுடனும் இணைத்து பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவிற்கு மேலதிக நடவடிக்கைகளுக்காக முன்வைக்கப்படும்.

    முடிவு நாளுக்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் கருத்திற்கொள்ளப்படமாட்டாது.

**பதிவாளரும் பேரவையின் செயலாளரும்**
**வவுனியாப் பல்கலைக்கழகம்,**
**வவுனியா.**
19.01.2024

# 'Good Hope' மகளிர் சங்க புதிய அலுவலகம் திறப்பு



*( நீர்கொழும்பு தினகரன் நிருபர் )*

நாத்தாண்டிய பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கொட்டராமுல்ல, Good Hope ( குட் ஹோப் ) மகளிர் நலன்புரிச் சங்கத்தின் புதிய அலுவலகத் திறப்பு விழா கடந்த வெள்ளிக்கிழமை ( 19 ) கொட்டராமுல்ல பிரதேசத்தில் இடம்பெற்றது. மகளிர் நலன்புரிச் சங்கத்தின் போஷகர் ஆசிரியை ஹைரியா யாசீன் மற்றும் தலைவி தஸ்லீமா பைனாஸ் ஆகியோரின் தலைமையில் நடைபெற்ற குறித்த விழாவில் பிரதம அதிதியாக கொட்டராமுல்ல பிரதேசத்தின் முன்னாள் கிராமசேவகர் கீர்த்தி விக்ரமசிங்க கலந்து கொண்டார்.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் புத்தளம் மாவட்டத் தலைவர் நஸ்ரின் மரிக்கார், மகளிர் நலன்புரிச் சங்கத்தின் ஒருங்கிணைப்பாளர் முர்ஷிட் பைசர் , நாத்தாண்டிய பிரதேச சபையின் முன்னாள் உறுப்பினர் ஏ.எச்.எம். றில்வான் மற்றும் பிரதேச உலமாக்கள், மகளிர் நலன்புரிச் சங்கத்தின் உறுப்பினர்கள் உட்பட நலன்விரும்பிகளும் கலந்து கொண்டனர் .

# வட மத்திய மாகாண பாடசாலைகளுக்கு 'ஸ்மார்ட் போர்ட்கள்' வழங்கி வைப்பு



**(அநுராதபுரம் மேற்கு தினகரன், கல்நேவ தினகரன் விசேட நிருபர்கள்)**

வடமத்திய மாகாணத்தில் உள்ள மாணவர்களின் கல்வித்தரத்தை மேம்படுத்தி, நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய முழுமையான கல்வியை வழங்கும் நோக்கில் வட மத்திய மாகாண கல்வித் திணைக்களம், மாகாண பாடசாலைகளுக்கு 'ஸ்மார்ட் போர்ட்கள்' மற்றும் நவீன கணினிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்படி, பொலன்னறுவை மாவட்டத்தில் 20 பாடசாலைகளுக்கு 20 ஸ்மார்ட் போர்ட்களும், 28 பாடசாலைகளுக்கு 66 கணினிகளும் வடமத்திய மாகாண ஆளுநர் மஹிபால ஹேரத் தலைமையில் கடந்த 18 ஆம் திகதி பொலன்னறுவை ஆளுநர் காரியாலயத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

உலக வங்கிக் கடன் உதவியின் கீழ் செயல்படுத்தப்படும் பொதுக் கல்வி நவீனமயமாக்கல் திட்டம் (GEMP) இதற்கான நிதியை வழங்குகிறது. வட மத்திய பிராந்தியத்தில் உள்ள பாடசாலைகளுக்கு வழங்கப்பட்ட ஸ்மார்ட் போர்டுகளின் எண்ணிக்கை 150 ஆகும் என தெரிவிக்கப்படுகிறது.

# முந்தல் பகுதியில் வாகன விபத்து; மூவர் காயம்



**(கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்)**

புத்தளம் கொழும்பு பிரதான வீதியின் முந்தல் 15 ஆம் மைல்கல் பிரதேசத்தில் நேற்று முன்தினம் (20) இடம்பெற்ற வாகன விபத்தில் பிரதேச சபை ஊழியர்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பைகளை ஏற்றும் உழவு இயந்திரத்தில் பணிபுரியும் ஊழியர்களே இவ் விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பஸ், முந்தல் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, முன்னால் சென்ற புத்தளம் பிரதேச சபைக்கு சொந்தமான குறித்த உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, எதிர்த்திசையில் இருந்து வருகை தந்த கார் மோதியதுடன் முன்னால் சென்ற உழவு இயந்திரத்தின் பின்பக்கமாக மோதியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தில் பயணித்த மூன்று ஊழியர்கள் காயமடைந்துள்ள நிலையில் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்று ஊழியர்களும், மேலதிக சிகிச்சைக்காக முந்தல் வைத்தியசாலையிலிருந்து சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## ருவேக்கா ட்ரேடிங் கல்கிசை கிளை வியாபாரத்திலிருந்து காலி செய்தல்

எமது நிறுவனமானது உங்களுக்கு அறிவித்தவாறு 2023.10.01ஆம் திகதியிலிருந்து அடவுச் சேவை நிறுத்தப்பட்டுள்ளதுடன் 2024.01.31ஆம் திகதியிலிருந்து கல்கிசை, காலி வீதி, 90B என்ற இடத்திலிருந்து காலி செய்யப்படும் என இத்தால் தயவு செய்து அறிவிக்கின்றோம்.

## அறிவித்தல்

892163073V என்ற தேஅஅ இலக்கத்தையுடைய சம்சுதீன் மொஹமெட் இம்ரான் **Legacy Global Services (Pvt) Ltd (PV00223382)** இன் முழுநேர ஊழியர் அல்லர். மேற்குறிப்பிட்டுள்ள நபரானவர் ஒரு சில சுயாதீனமான வேலைகளை கம்பனிக்காக 2021ஆம் ஆண்டுக்காலத்தில் செய்துள்ளார். இக்கம்பனியானது கடந்த இரு வருடங்களாக செயற்படாத தன்மையில் இருந்ததினால் அவருக்கு எந்தவொரு நிதியிடல் கொடுக்கல் வாங்கல்கள் அல்லது ஒப்பந்தங்களில் கம்பனியின் ஆதார ஆவணங்களை பாவித்து செயற்படுவதற்கான சட்டபூர்வமான அதிகாரம் அல்லது உரிமைகள் இல்லை. கம்பனியானது முடிவுறுத்தல் செயற்பாட்டில் உள்ளதினால் எந்தவொரு மூன்றாம் சாரானினால் சம்சுதீன் மொஹமெட் இம்ரானுடன் செய்யப்படும் எந்தவொரு கொடுக்கல் வாங்கல்கள் அல்லது ஒப்பந்தங்களில் ஈடுபட்டால் மேற்குறிப்பிட்ட கம்பனியானது எவ்வித பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்ள மாட்டாது.

**முன்னைய பணிப்பாளர்,**
**Legacy Global Services (Pvt) Ltd.**

## இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிகொலய மற்றும் ஓபல்கல (குடாஓய பகுதி) அரச தோட்டங்களில் ஏலம் பயிர்ச்செய்கையை ஒருவருட காலத்திற்கு குத்தகைக்கு விடல்

இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிர்வகிக்கப்படும் நிகொலய மற்றும் ஓபல்கல (குடாஓய பகுதி) அரச தோட்டங்களில் ஏலம் பயிர்ச் செய்கையை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. விலைமனுக்களுக்கான நிபந்தனைகள் அடங்கிய விலைமனு பத்திரத்தை 2024.01.23 முதல் 2024.02.05 வரை கல்பிஹில்ல பிரதேச அலுவலகங்களில் அல்லது 2024.02.06 பி.ப. 2.30 வரை கொழும்பு தலைமையகத்தில் கொள்வனவு செய்யலாம் 2024.02.06 பி.ப. 2.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படல் முடிவடைந்தவுடன் கேள்விகள் கொழும்பில் அமைந்துள்ள தலைமையகத்தில் திறக்கப்படும்.

**பெறுகை சபை,**
**இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்,**
**இல. 257, சிறிதம்ம மாவத்தை, கொழும்பு -10.**
**தொ. பே. 0114-194879**

# கேள்வி அறிவித்தல்

## மாவட்ட செயலகம் - திருகோணமலை

திருகோணமலை மாவட்ட பெறுகை சபைத்தலைவரால் கீழுள்ள அட்ட வணையில் குறிப்பிடப்பட்டுள்ள செயற்றிட்டம் தொடர்பான கேள்விமனுக்கள் கோரப்படுகின்றன.

| (I) பெறுகை இலக்கம் | (II) வேலை விபரம் | (III) விலைமனுக் காப்பீடு (ரூபா) | (IV) ஒப்பந்தக் காலம் | (V) மீளளிக்கப்படாத வைப்புப் பணம் |
|---|---|---|---|---|
| GAT/FIN/ PU09/ CLEAN/2024 | திருகோணமலை மாவட்ட செயலகம் மற்றும் அலுவலக பூமி, மற்றும் அதனுடன் இணைந்த 11 பிரதேச செயலகங்கள், அரசாங்க அதிபர் விடுதி மற்றும் சங்கமித்தா ஓய்வு விடுதிக்கு சுத்திகரிப்பு சேவை வழங்குதல் | ரூபா. 100,000/- | 01.03.2024 முதல் 28.02.2025 வரை | ரூபா.1000/- |

2. இக் கேள்வி அறிவித்தல் தேசிய விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும். ஆனாலும் கிழக்கு மாகாண எல்லைக்குள் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் சுத்திகரிப்பு சேவையினை சரியான முறையில் நிறைவேற்றாத அல்லது ஒப்பந்த நிபந்தனைகளை மீறிய ஒப்பந்தக்காரர்களுக்கு கேள்விகோரல் படிவங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.
3. கேள்விகோரல் விண்ணப்பப் படிவங்களை திருகோணமலை மாவட்ட செயலக கணக்கு கிளையில் மீளளிக்கப்படாத வைப்புப் பணமாக ரூபா.1000 /- செலுத்தி 23.01.2024 முதல் 13.02.2024 வரையான காலப் பகுதிக்குள் அலுவலக நாட்களில் மு.ப.9.00 மணியிலிருந்து பி.ப.2.30 மணிவரை பெற்றுக் கொள்ள முடியும்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விகோரல் படிவங்களின் 2 பிரதிகளை 14.02.2024 ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு "பெறுகை சபைத் தலைவர், அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும், மாவட்ட செயலகம், திருகோணமலை" எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும் அல்லது கணக்காளரின் அலுவலக அறையிலுள்ள பெறுகைக் கோரல் பெட்டியினுள் இடுதல் வேண்டும்.
5. கேள்விகோரல் படிவங்களுடன் மேற்படி அட்டவணையில் நிரல் (III)ல் குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கான விலைமனுக் காப்பீடு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
6. விலைமனுக் காப்பீடானது பெறுகை சபைத் தலைவருக்கு முகவரியிடப்பட்ட, அரசினால் அங்கீகரிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெறப்பட்ட 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் முறியாக அல்லது மாவட்ட செயலகத்தின் வங்கி கணக்கில் (இலங்கை வங்கி - 7042096) நேரடியாக வைப்பிலிட்ட பற்றுச்சீட்டாக சமர்ப்பிக்கப்படலாம்.
7. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "திருகோணமலை மாவட்ட செயலகத்திற்கான சுத்திகரிப்பு சேவை வழங்குதல் தொடர்பான கேள்விப்பத்திரம் 2024" என குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். தாமதமாக கிடைக்கப்பெறும் கேள்விகோரல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
8. இது தொடர்பான மேலதிக விபரங்களை திருகோணமலை மாவட்ட செயலகத்தின் கணக்கு கிளையில் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இல. 026-2050919

ஒப்பந்தம் வழங்குவது தொடர்பில் பெறுகைச் சபையின் தீர்மானமே இறுதி முடிவாக அமையும்.

**சாமிந்த ஹெட்டியாராச்சி**
**பெறுகை சபைத் தலைவர்**
**அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளரும்**
**மாவட்ட செயலகம்,**
**திருகோணமலை.**

**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு**

# விலைமனுக்கோரல்

### திறைசேரி வளவுக்கான தரைத்தோற்ற அழகுபடுத்தல் சேவைக்கான பெறுகை 2024/2025

நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் சார்பாக, அமைச்சின் (சிறு) பெறுகைக் குழுவின் தலைவரினால் திறைசேரி வளாகத்திற்கான தரைத்தோற்ற அழகுபடுத்தல் சேவைகளை ஒரு வருட ஒப்பந்த காலத்திற்கு பெற்றுக்கொள்வதற்கு பொருத்தமான தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

02. தேசிய போட்டிக்குரிய விலைமனு நடைமுறை மூலம் ஏலம் நடத்தப்படும்.

03. ஆர்வமும் தகுதியும் உள்ள விலைமனுதாரர்கள் கொழும்பு 01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் கணக்காளரிடமிருந்து (வழங்கல்), 011-2484538/ 011-2484600 (நீடிப்பு 1430) தொலைபேசி இலக்கங்களின் ஊடாக மேலதிக விவரங்களை பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கின்ற அதேவேளையில், 2024 பெப்ரவரி 09 ஆம் திகதியன்று மு.ப. 9:00 மணி முதல் பி.ப. 3:00 மணி வரை கீழே கொடுக்கப்பட்டுள்ள முகவரியில் ஏல ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்க முடியும்.

04. தகுதித் தேவைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குகின்றன.

- வியாபாரப் பதிவு ஒழுங்கு விதிகளின் கீழ் பதிவு செய்திருத்தல்.
- குறைந்தபட்சம் ஒரு ஒப்பந்தத்தின் பெறுமதி ரூபா 3 மில்லியனுக்கு குறையாத தரைத்தோற்ற அழகுபடுத்தல் மற்றும் தோட்டப் பராமரிப்பு சேவைகளை நடத்துவதில் குறைந்தபட்சம் 2 அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் குறைந்தபட்சம் 2 வருட அனுபவம் மற்றும் திருப்திகரமான சேவை பதிவுகளுடன், விலைமனுப் படிவத்துடன் வாடிக்கையாளர்களின் பட்டியலை இணைப்பு-1 ஆக சமர்ப்பிக்க வேண்டும்.
- விலைமனுதாரருக்கு ஒரு தோட்ட அபிவிருத்தி உதவியாளர் (மேற்பார்வையாளர்) மற்றும் 2 மரப் பராமரிப்பாளர்கள் உட்பட ஐந்து (05) தோட்டத் தொழிலாளர்களை சேவையில் ஈடுபடுத்தக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

05. மேலதிக விவரங்கள் ஏல ஆவணத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. கொழும்பு 01, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சில், புதிய கட்டிடம், மேல் தளம், கணக்குப் பிரிவில் பிரதான கணக்காளரிடம் எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் மூலம் 2024 ஜனவரி 22 முதல் 2024 பெப்ரவரி 09 வரை மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை திருப்பிச் செலுத்தப்படாத ரூபா 1,500.00 கட்டணத்தைச் செலுத்தியதன் பின்னர் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஏல ஆவணங்களின் முழுமையான தொகுப்பை பெற்றுக் கொள்ள முடியும். கொடுப்பனவுகள் பணமாக செலுத்தப்பட வேண்டும்.

06. தரப்பட்டுள்ள மாதிரி படிவத்திற்கு அமைவாக தயாரிக்கப்பட்ட அனைத்து விலைமனுக்களும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின் செயலாளர் பெயரில் வழங்கப்பட்ட விலைமனுப் பாதுகாப்புடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

07. விலை மனுக்கள் 2024 பெப்ரவரி 12 ஆம் திகதியன்று பிற்பகல் 2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னதாக கொழும்பு 01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சு, புதிய கட்டிடம், மேல் தரை தளத்தில் கணக்குப் பிரிவில் உள்ள அமைச்சின் (சிறு) பெறுகைக் குழுவின் தலைவருக்கு பதிவுத் தபாலில் அனுப்புவதன் மூலம் அல்லது நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின், புதிய கட்டடத்தில் மேல் தரை தளத்தில் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விமனு பெட்டியில் இடுவதன் மூலம் வைப்புச் செய்யப்பட வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் விலை மனுக்கள் நிராகரிக்கப்படும். மேல் இடது மூலையில் "பொதுத் திறைசேரி வளவுக்கான தரைத்தோற்ற அழகுபடுத்தல் சேவைக்கான பெறுகை 2024/2025" எனக் குறிப்பிடப்படுதல் வேண்டும். விலை மனுக்களை பொறுப்பேற்று முடிவடைந்த உடனேயே, கொழும்பு 01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின், புதிய கட்டிடத்தில், மேல் தரை தளத்தில், கணக்குப் பிரிவில் விலைமனுதாரர்கள் மற்றும் அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதி நிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

08. 2024 ஜனவரி 31 அன்று மு.ப.11.00 மணிக்குகொழும்பு 01, லோட்டஸ் வீதி, நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சின், புதிய கட்டிடத்தில், மேல் தரை தளத்தில், கணக்குப் பிரிவில் விலை மனுக்களுக்கு முன்னரான கூட்டம் ஒன்று இடம்பெறும்.

**தலைவர், அமைச்சின் (சிறு) பெறுகைக் குழு,**
**நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்**
**தேசியக் கொள்கைகள் அமைச்சு,**
**லோட்டஸ் வீதி, கொழும்பு 01.**

www.adz.lk
it's what you want

## இலங்கை புகையிரத சேவைகள்

# விலைமனுக்கோரல்

### இலங்கை புகையிரதம் கிழக்கு மாவட்டத்திலுள்ள கந்தளாக்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5,000 எண்ணிக்கையிலான LESS HIGH CONCRETE SLEEPERS வழங்கல்

### IFB இலக்கம் - SRS F.7953

1. கொழும்பு இலங்கை புகையிரத சேவைகள் திணைக்கள கொள்வனவுக் குழுவின் தவைரினால் இலங்கை புகையிரதம் கிழக்கு மாவட்டத்திலுள்ள கந்தளாக்கு EN 45 E1 தண்டவாளங்களுக்கு பொருத்தமான 5,000 எண்ணிக்கையிலான LESS HIGH CONCRETE SLEEPERS வழங்குவதற்காக வெளிநாட்டு உற்பத்தியாளர்கள் / வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. கேள்விகோரல் **தேசிய போட்டி நடைமுறை மூலம் நடத்தப்படும் (NCB)**
3. மேலதிக தகவல்கள் மற்றும் மனு ஆவண பரிசீலனையினை **2024.01.22** ஆம் திகதி **2024.02.12** ஆம் திகதி வேலைநாட்களில் **மு.ப.9.00 மணி முதல் பி.ப.3.00 வரை** கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள முகவரியில் செய்ய முடியும்.

   **பிரதிப் பொது முகாமையாளர் (கொள்முதல்),**
   **புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
   **ஓல்கொட் மாவத்தை, கொழும்பு 10, இலங்கை.**
   **தொலைபேசி இல : +94(11) 2438078, அல்லது +94(11) 2436818**
   **தொலைநகல் இல : +94 (11) 2432044**
   **மின்னஞ்சல் : srs.slr@gmail.com**
   **இணையத்தளம் : www.railway.gov.lk**

4. மனுதாரர், இலங்கை **புகையிரத சேவைக்கு 5,000 இற்கும் அதிகமான உயரம் குறைந்த LESS HIGH CONCRETE SLEEPERS** வழங்கியிருக்க வேண்டும் அல்லது **ரூ.50 மில்லியன் ரூபாய்க்கு** மேல் மதிப்புள்ள முன் அழுத்தப்பட்ட கொன்கிரீட் கம்பங்களை (pre-stressed Concrete Beams) வழங்கியிருக்க வேண்டும். இல்லையெனில் கடந்த (05) ஐந்து ஆண்டுகளில் **ரூ.500 மில்லியன் ரூபாய்க்கு** குறையாத கொன்கிரீட் கம்பங்களை வழங்கியமைக்கான விலைப்பட்டியலிடப்பட்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் இலங்கையின் ரயில்வே கொள்முதல் புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத **ரூ.31,250/-** கொள்முதல் கட்டணத்தை செலுத்தி **2024.01.22** ஆம் திகதி முதல் **2024.02.12** ஆம் திகதி **பி.ப.3.00** மணிக்கு அலுவலகத்தில் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
6. அனைத்து மனுக்களுக்கும் மனுப் பாதுகாப்புடன் இருத்தல் வேண்டும். மனுப் பாதுகாப்புத் தொகையாக **ரூ.1,750,000.00** இருத்தல் வேண்டும், மேலும் இலங்கையில் இயங்கும் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட நிபந்தனையற்ற உத்தரவாதமாக இருத்தல் வேண்டும்.
7. மனுக்கள் **2024.02.13** ஆம் திகதி **பி.ப.2.00 மணிக்கு அல்லது அதற்கு முன்** கீழே உள்ள முகவரியில் உடனடியாக திறக்கப்படும். விலைமனுக்கள் திறக்கும் சந்தர்ப்பத்தில் மனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்றலாம். தாமதமான மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படாது.

**தலைவர்,**
**திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),**
**புகையிரதக் கொள்முதல் உபப் பிரிவு,**
**இலங்கை புகையிரத சேவைகள்,**
**ஓல்கொட் மாவத்தை,**
**கொழும்பு 10.**

தலைவர்,
திணைக்களத்தின் பெறுகைக் குழு (மேஜர்),
இலங்கை புகையிரத சேவைகள்.
கொள்முதல் இல.: **SRS/F.7953**

SEL ACINE

Repeat Your ad For Better Offers

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா.)

(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு – மேல் மாகாணம்)

### திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியம் மற்றும் கொழும்பு நிறைவேற்று பொறியியல் பணிமனைக்கு தேவையான தேர்மோபிளாஸ்டிக் பொருட்களை கொள்வனவு செகய்தல்

மேல் மாகாண வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியம் மற்றும் கொழும்பு நிறைவேற்று பொறியியல் பணியகத்திற்கு தேவையான தேர்மோபிளாஸ்டிக் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக வழங்குநர்களிடமிருந்து திறந்த விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கேள்விச் சுருக்கம்**

| கேள்வி இலக்கம் | விபரம் | வகை CSLS Standard) | அளவு | | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணையின் பெறுமதி | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | திவுலபிட்டிய | கொழும்பு | | காசாக ரூ. | வங்கிப் பிணை மூலம் |
| PRDA/WP PRO/2023/ 108 | திவுலபிட்டிய முன்வார்ப்பு கொங்கிறீட் களஞ்சியத்திற்கு தேவையான தேர்மோ பிளாஸ்டிக் பொருள் மற்றும் கொள்வனவு செய்தல் | Thermo Plastic I(kg) | 12500 | 5000 | ரூ. 1000.00 + Vat + SSCL | 275,000.00 | 550,000.00 |
| | | Glass Beads (kg) | 625 | 175 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2024.01.22 முதல் 2024.02.05ம் திகதிகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.30 வரை கேள்விப் படிவக் கட்டணங்களை ரூ. 1,178.75 இற்கு, (அதிகாரசபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, இவ் அதிகாரசபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணையை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் 2024.02.06 பி.ப. 2.30 இற்கு இடம்பெறுவதுடன், இவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

04. கேள்வி வழங்குவதற்கு தகைமை பெறுவதற்கு கேள்வித் தொகை ரூபா 5.0 மில்லியனுக்கு மேற்படும் வேளையில் கேள்விதாரரால் 1987 இல. 03 பொது ஒப்பந்த சட்டத்தின் 8ஆம் பிரிவின் கீழ் கம்பனி பதிவாளரால் வழங்கப்படும் பதிவுச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**மாகாண வீதி, அபிவிருத்தி அதிகாரசபை (மே.மா),**
**இலக்கம் 59, புனித செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு -12.**
**தொ. இலக்கம் 011 - 4849825 / 011 - 4849845**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch
Acc. No. 000000377

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

| இல. | ஒப்பந்ததின் பெயர் | அளவு (தொகை) |
|---|---|---|
| 01 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division , Navinna Depot | 1 |
| 02 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division , Rathmalana Depot | 1 |
| 03 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Colombo Division , Orugodawaththa Depot | 1 |
| 04 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Avissawella Division , Galagedara Depot | 1 |
| 05 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Avissawella Division , Homagama Depot | 1 |
| 06 | Hiring of Tipper 1.25 cube (5 ton) – Avissawella Division , Kesbewa Depot | 1 |
| 07 | Hiring of JCB – Colombo Division , Orugodawaththa Depot | 1 |
| 08 | Hiring of JCB – Colombo Division , Navinna Depot | 1 |
| 09 | Hiring of JCB – Avissawella Division , Galagedara, Homagama, Kaluaggala, Kesbewa Depot | 2 |
| 10 | Hiring of Crew Cab– Colombo Division , Nawala Depot | 1 |
| 11 | Hiring of Crew Cab– Colombo Division , Orugodawaththa Depot | 1 |

மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்காக **தேசிய போட்டி** ஏல நடைமுறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **2024.01.22** ஆம் திகதி முதல் **2024.01.29** ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளம் **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தலைவர்,
பிராந்திய கொள்முதல் குழு,
தலைமை பொறியியலாளர் பிரிவு - கொழும்பு,
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

SELACINE

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

## விலைமனுக்களுக்கான அழைப்பு

### கண்டி மாநகர சபைக்குத் தேவையான Aluminium Sulphate பெற்றுக்கொள்ளல்

கண்டி மாநகர சபைக்குத் தேவையான பின்வரும் பொருட்களை வழங்குவதற்காக 2024-02-09ஆம் திகதி வரை விலைமனுக்கள் கோரப்படுகின்றன. இதன் பொருட்டான தகைமைவாய்ந்த விலைமனுதாரர் விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு பணப் பற்றுச்சீட்டு அல்லது காசுக் கட்டளையுடன் வேண்டுகோள் கடிதம் மற்றும் வியாபாரப் பெயர்ப் பதிவுச் சட்டத்தின் கீழ் அல்லது கம்பனி பதிவுச் சட்டத்தின் கீழான பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

| | உருப்படிகள் | அளவு | விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் | விலைக் கோரல் பிணை முறியின் பெறுமதி | விலைக் கோரல் ஆவணக் கட்டணம் (வெட் சகிதம்) |
|---|---|---|---|---|---|
| 01 | Aluminium Sulphate | 100 MT | CPC/KMC/FD/S/PC 02/2024/2/2 | 150,000.00 | ரூபா 2,360.00 |

| | | |
|---|---|---|
| 01 | விலைமனுவின் விலை | • மேற்கூறப்பட்ட வகையில்<br>• கண்டி மாநகர சபையின் சிறாப்பருக்குச் செலுத்தி விலைமனு ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில்<br>• காசுக் கட்டளையொன்றானால் 'மாநகர ஆணையாளர், கண்டி' எனும் பெயருக்குச் செலுத்தி 2024-02-07ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். |
| 02 | விலைமனு ஆவணங்கள் வழங்க ஆரம்பிக்கும் திகதி | 2024-01-22ஆம் திகதி முதல் மு.ப. 9.00 முதல் பி.ப. 2.45 வரை வாரத்தின் வேலை நாட்களில் |
| 03 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2024-02-08ஆம் திகதி பி.ப. 2.45 மணி வரை |
| 04 | விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் மற்றும் நேரம் | 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் |
| 05 | விலைமனுப் பிணை முறி | இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட அரச அல்லது வர்த்தக வங்கியொன்றில் பெற்றுக்கொள்ளப்பட்ட 03 மாதங்கள் வரை செல்லுபடியாகும் தன்மையுடன் மேலே தரப்பட்டுள்ள பெறுமதிக்காக பெற்றுக்கொண்ட திரும்பப் பெறமுடியாத நிபந்தனையற்ற கோரும்போது செலுத்தக்கூடிய பிணை முறியொன்றை 'கண்டி மாநகர ஆணையாளர்' பெயரில் சமர்ப்பித்தல் வேண்டும்.<br>(செல்லுபடிக் காலம் 2024-02-09ஆம் திகதி முதல் 2024-05-08ஆம் திகதி வரை) |
| 06 | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி, இடம் மற்றும் நேரம் | 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கண்டி மாநகர சபை மண்டபத்தில்.<br>இந்நிகழ்வில் நீங்கள் அல்லது உங்களால் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம். |
| 07 | விலைமனு ஆவணங்கள் வழங்கப்படும் இடம் | மாநகர வழங்கல் பிரிவு, மாநகர சபை, கண்டி. |
| 08 | பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இடம் | நேரில் கொண்டு வந்து ஒப்படைப்பதானால் 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் பிரதான மாநகர கணக்காளரின் பொறுப்பில் வைக்கப்பட்டுள்ள விலைமனுப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.<br>பதிவுத் தபால் மூலம் அனுப்புவதானால் 2024-02-09ஆம் திகதி மு.ப. 10.00 மணி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் அனுப்புதல் வேண்டும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும். (விலைக்கோரல் குறிப்பீட்டிலக்கம் - CPC/KMC/FD/S/PC 02/2024/2/2) |

இந்த பெறுகை தீர்மானம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை கண்டி மாநகர சபை / மாநகர ஆணையாளர் தன்னகத்தே கொண்டுள்ளது.

விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை கணக்காளர் (வழங்கல்) அவர்களிடமிருந்து 081-2232071 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

**கே.கே.ஜீ.ஐ.டீ.ஜீ. விஜேதிலக்க.**
**மாநகர ஆணையாளர்,**
**மாநகர சபை கண்டி.**

2024-01-22

කෘෂිකර්ම නවීකරණ ව්‍යාපෘතිය
விவசாய நவீனமயமாக்கல் திட்டம்
Agriculture Modernization Project

THE WORLD BANK
IBRD • IDA | WORLD BANK GROUP

කෘෂිකර්ම අමාත්‍යාංශය
**கமத்தொழில் அமைச்சு**
**Ministry of Agriculture**

### இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

**விவசாயத் துறையை நவீனமயமாக்கல் செயற்றிட்டம் - கமத்தொழில் அமைச்சு**

**IDA Credit No.: 5873 LK**

## பெறுகை அறிவித்தல்

### நீர்ப்பாசன முறைகளின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் மற்றும் ஒட்டவைக்கப்பட்டTJC மாமரக் கன்றுகளை வழங்கல் மற்றும் விநியோகித்தல்

1. கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட (ASMP ஆகுசெலவிற்காக) 58.63 மில்லியன் அஜடொ இற்கு நிகரான தொகையை பல் வேறு நாணயங்களில் சர்வதேச அபிவிருத்தி சங்கத்திடமிருந்து (IDA) கடனொன்றை இலங்கை சனநாயக சோசலிச குடியரசானது பெற்றுள்ளதுடன் இக்கடன் பெறுகைகளின் பகுதியொன்றை நீர்ப்பாசன முறைகளின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் மற்றும் ஒட்டவைக்கப்பட்ட**TJC** மாமரக் கன்றுகளை வழங்கல் மற்றும் விநியோகித்தல் என்ற ஒப்பந்தத்தின் கீழ் தகுதியுள்ள பணக் கொடுப்பனவுகளுக்காக செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

2. நீர்ப்பாசன முறைகளின் வழங்கல், ஒப்படைத்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் மற்றும் ஒட்டவைக்கப்பட்டTJC மாமரக் கன்றுகளை வழங்கல் மற்றும் விநியோகித்தல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து கமத்தொழில் அமைச்சின் விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட, செயற்றிட்ட பெறுகைக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| விளக்கம் | ஒப்பந்த இலக்கம் | விலைமனுப் பிணையின் பெறுமதி (ரூபாவில்) | மீளளிக்கப் படாத கட்டணம் |
|---|---|---|---|
| 120 Nos of drip and sprinkler irrigation systems for Potato cultivation in Badulla District | LK-MOA-PMU-353370-GO-RFB | 1,06,000.00 | 15,000.00 |
| 200 Nos. of Micro sprinkler with Drip tape for Mango Production Cluster in Matale District | LK-MOA-PMU-396288-GO-RFB | 840,000.00 | 10,000.00 |
| 200 Nos. of Micro sprinklers for Banana production program in Monaragala District | LK-MOA-PMU-396279-GO-RFB | 840,000.00 | 10,000.00 |
| மாத்தளை மாவட்டத்தில் மாம்பழ உற்பத்தி கொத்தணிக்காக 56,000 எண்ணிக்கையான மாமரக் கன்றுகள். | LK-MOA-PMU-396286-GO-RFB | 201,000.00 | 5,000.00 |

3. உலக வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட தேசிய போட்டிரீதியிலான விலைமனுக் கோரல் மூலம் விலைமனுக் கோரல் நடாத்தப்படும்.

4. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை 2024.01.21ஆம் திகதியிலிருந்து 2024.02.12ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 2 மணி வரையும் 0777419521 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக கமத்தொழில் அமைச்சு, விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்ட பெறுகை திணைக்களத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

5. மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பின்னர் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். செயற்றிட்டத்தின் நிதிமுகாமையாளருக்கு ரொக்கப் பணத்தில் பணக்கொடுப்பனவு முறை இருத்தல் வேண்டும்.

6. 2024.02.12ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். இலத்திரனியல் விலைமனுக் கோரல் அனுமதிக்கப்பட மாட்டாது. தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. 2024.02.12 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு கீழேயுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. பூர்த்திசெய்யப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் ''மூலப்பிரதி'' மற்றும் ''நகல்பிரதியென'' சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியானது தனித்தனியாக அடக்கப்பட்டு முறையே 'மூலப்பிரதி' மற்றும் 'நகல்பிரதி' என அடையாளமிடப்பட்டு முத்திரையிடப்படல் வேண்டும். இந்த இரு தபாலுறைகளும் தனியொரு தபாலுறையில் அடக்கப்பட்டு ஒப்பந்த இலக்கமான "Supply, Delivery, Installation & Commissioning of Irrigation Systems and Supply & Delivery of Grafted TJC Mango Plants" என்ற சொற்கள் தபாலுறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடப்படல் வேண்டும்.

8. மேலே குறிப்பீடு செய்யப்பட்டுள்ளமுகவரியானது பின்வருமாறு:

**தலைவர்,**
**செயற்றிட்ட பெறுகைக் குழு,**
**விவசாயத்துறை நவீனமயமாக்கல் செயற்றிட்டம்,**
**இல. 123/2, பன்னிப்பிட்டிய பாதை,**
**பத்தரமுல்ல.**

**தொலைபேசி: 011-2696086 அல்லது 0777419521**
திகதி: 22.01.2024

## பெறுகை அறிவித்தல் (IFB)

### உள்ளூராட்சித் திணைக்களம், வடக்கு மாகாணம்

### சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி

### பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம்

1. பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் செலவீனங்களுக்காக உலக வங்கியிடமிருந்து இலங்கை சனநாயக சோசலிஷக் குடியரசுக்கு ஒரு கடனுதவி கிடைக்கப்பெற்றுள்ளதுடன் அதன் ஒரு பகுதியினை கீழ்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள வேலைத்திட்ட கொடுப்பனவிற்கு பிரயோகிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு, நகராட்சி மன்றம், சாவகச்சேரி அவர்கள் தகுதி வாய்ந்த ஒப்பந்தகாரர்களிடமிருந்து அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்காட்டப்பட்ட அட்டவணையில் விபரிக்கப்பட்ட வேலைக்காக கோருகின்றார்.

| தொ. இல | கேள்வி எண் | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை மில்லியனில் | வேண்டப்படும் தரம் | ஒப்பந்த காலம் (நாட்கள்) | கேள்விப் பிணை வைப்பு | கேள்வி செல்லு படியாகும் காலம் | கேள்விப் பிணை வைப்பு செல்லு படியாகும் காலம் |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | LDSP/ NP/ JAF/ CUC/ BT4/ 2024 /01 | சாவகச்சேரி நகரத்தில் கடைகள் அமைத்தல் வேலைத் திட்டம், கட்டம் - II | 12.47 | C6 அல்லது மேல் தரம் கட்டடங்கள் | 90 | 125,000.00 | 07-05-2024 | 04-06-2024 |

03. தேசிய போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கு அமைவாகவே கேள்வி கோரப்படுகின்றது.
04. ஒப்பந்தம் கையளிக்கப்பட தகுதி பெறுவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் எந்தவொரு நிறுவனங்களினாலும் கறுப்புப் பட்டியல் படுத்தப்படாதிருக்க வேண்டியதுடன் உள்ளூர் ஒப்பந்தக்காரர்கள் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தரத்தில் நிர்மாணிப்பு கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபை (CIDA) இல் கட்டடங்கள் நிர்மாணிப்புத் துறையில் பதிவினை கொண்டிருக்கவும் வேண்டும்.
05. தேவையான தகைமைகள், கேள்வி ஆவணம் பகுதி 4 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி 5இல் காட்டப்பட்டுள்ளது.
06. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் செயலாளர், நகராட்சி மன்றம், சாவகச்சேரி தொலைபேசி 021 227 0806, தொலைநகல் 021 227 0079 மின்னஞ்சல்: chavauc@gmail.com இல் இருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலை நாட்களில் 2024.01.22 ஆம் திகதியிலிருந்து 2024.02.19 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணி முதல் பி.ப 3.00 மணி வரை கேள்வி ஆவணங்களைப் பார்வையிடலாம்.
07. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான கேள்வி ஆவணமொன்றை செயலாளர், சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி இடமிருந்து வேலை நாட்களில் 2024.01.22 ஆம் திகதியிலிருந்து 2024.02.19 ஆம் திகதி வரை மு.ப 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்குமிடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.4000/- செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.
08. கேள்விகளை இரு பிரதிகளில் தயாரித்து கோரப்படும் ஆவணங்களுடன் தனித்தனியாக இரு உறைகளில் இட்டு தலைவர், உள்ளூர் அதிகாரசபை பெறுகைக் குழு, பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டம் (பி.அ.உ.தி), சாவகச்சேரி நகராட்சி மன்றம், சாவகச்சேரி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு 2024.02.20 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு முன்பதாக கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்படல் வேண்டும். பிந்திய கேள்விகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்துமூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.
09. அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள தகவல்களுக்கமைவாக கேள்விப் பிணைமுறியானது கேள்வி ஆவணங்களுடன் இணைக்கப்படல் வேண்டும்.
10. கேள்வி கோரல் பற்றிய முன் கூட்டிய கூட்டம் 2024.02.12 ஆம் திகதி மு.ப 10.00 மணிக்கு சாவகச்சேரி நகராட்சி மன்ற அலுவலகத்தில் நடைபெறும். ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் தமது சொந்த செலவில் கலந்து கொள்ளமுடியும்.

**தலைவர்,**
**உள்ளூர் அதிகாரசபை பெறுகைக்குழு,**
**பிரதேச அபிவிருத்தி உதவித்திட்டம்(பி.அ.உ.தி),**
**சாவகச்சேரி நகராட்சி மன்றம்,**
**சாவகச்சேரி.**
**2024.01.22**

## சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 16ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

### கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில்

1) மைதிரிபால சிரிசேன
தலைவர்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
இல. 79/C,
கொப்பேகடுவ மாவத்த,
கொழும்பு -07

2) சாரதீ துஷ்மந்த மித்ரபால
பதில் செயலாளர்
ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி
528, கரவனெல்ல
ருவன்வெல்ல

**முறைப்பாட்டாளர்கள்**

**வழக்கு இலக்கம்:** DSP00019/2024
**தன்மை:** விசேடம்
**செயற்பாடு:** பொது
**பெறுமதி:** ரூ. 5,000,000/-

**- எதிராக -**

தயாசிரி ஜயசேக்கர
ஹெவ்லொக் சிட்டி அபாட்மென்ட் கம்ப்லெக்ஸ்
கிருலபன, கொழும்பு -05

**எதிர்மனுதாரர்கள்**

கூட்டிணைக்கப்படாத நிறுவனமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதி நிதித்துவப்படுத்துவதற்காக மற்றும் மேற்படி கட்சி சார்பாக மேற்படி பெயர் குறிப்பிடப்படும் முறைப்பாட்டாளர்களால் கீழ்க்காணும் சலுகைகளைப் பெற்றுக் கொள்வதற்காக கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் மேற்படி இலக்கம் கொண்ட வழக்கு தொடுக்கப்பட்டுள்ளது.

**மேற்படி சலுகைகளாவன**

(அ) எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தப்பட்டிருக்கும் வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகுப்பது கீக்கப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் செயற்படுவதற்கு ஏதேனும் இடையூறு அல்லது தடையை மேற்கொள்ளல் மற்றும்/அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு தொந்தரவு அல்லது தடை ஏற்படுமாறு ஏதேனும் அல்லது பிரதிநிதித்துவப்படுத்தல் அல்லது தொடர்பாடல் ஒன்றை தேர்தல் ஆணைக்குழு உட்பட நிறுவனம் மற்றும் தனிநபருக்கு மேற கொள்ளல் கூடாது என கட்டளை பிறப்பிக்குமாறும்,

(ஆ) எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது அகற்றப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஒழுங்குமுறை அரசியல் மற்றும் நிர்வாக விடயங்களில் இடையூறு அல்லது தடைகளை மேற்கொள்ளக் கூடாது என கட்டளை பிறப்பிக்குமாறும்,

(இ) எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தப்பட்டுள்ளது வரை மற்றும்/ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பதில் இருந்து அகற்றப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுவதற்கு மற்றும்/அல்லது அவ்வாறு செயற்படுவதாக பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு (act and/or represent) எதிர்மனுதாரருக்கு சட்டத்தின் முன் எந்த உரித்துரிமையும் இல்லையென்ற கருத்தை வழங்குமாறும்,

(ஈ) எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது நீக்கப்படின் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் செயற்படுவதற்கு ஏதேனும் இடைஞ்சல் அல்லது தடை மேற்கொள்ளப்படுவதற்கு மற்றும்/அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் அல்லது தடையாகும் விதத்தில் ஏதேனும் பிரதிநிதித்துவம் அல்லது தொடர்பாடலை தேர்தல் ஆணைக்குழு உட்பட நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு மேற்கொள்வதற்கு எதிர்மனுதாரருக்கு சட்டத்தின் முன் எந்த உரித்துரிமையும் இல்லையென கருத்து வழங்குமாறும்,

(உ) எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது அகற்றப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுவதற்கும் மற்றும்/அல்லது அவ்வாறு செயற்படுவதாக பிரதி நிதித்துவப்படுத்தலை (act and/or represent) எதிர்மனுதாரர் தவிர்க்கும் நிரந்தர இனஜெக்சன் கட்டளையை வழங்குமாறும்,

(ஊ) எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது அகற்றப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் செயற்படுவதற்கு ஏதேனும் இடைஞ்சல் அல்லது தடைமேற் கொள்ளல் மற்றும்/அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதிவல் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடைஞ்சல் அல்லது தடை மேற்கொள்ளல் மற்றும்/அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படுமாறு ஏதேனும் பிரதிநிதித்துவம் அல்லது தொடர்பாடலொன்றை தேர்தல் ஆணைக்குழு உடபட நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு மேற்கொள்வதை எதிர்மனுதாரர் தவிர்க்குமாறு நிலையான இன்ஜெக்சன் தடைக் கட்டளையை வழங்குமாறும்,

(எ) இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு முடிவாகும்வரை அமுலாகுமாறு எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது அகற்றப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுவதை மற்றும்/அல்லது அவ்வாறு செயற்படுவதாக பிரதி நிதித்துவப்படுத்தல் (act and/or represent) எதிர்மனுதாரர் தவிர்க்கும் இடைக்கால இன்ஜெக்சன் தடைக் கட்டளையை வழங்குமாறும்,

(ஏ) இவ்வழக்கு விசாரிக்கப்பட்டு தீர்மானிக்கும் வரை அமுலாகுமாறு எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வகிப்பதை இடைநிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது நீக்கப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் செயற்படுவதற்கு ஏதேனும் அல்லது இடையூறு அல்லது தடை மேற்கொள்ளப்படின் மற்றும்/அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடையூறு அல்லது தடை ஏற்படுமாறு ஏதேனும் பிரதிநிதித்துவப்படுத்தல் அல்லது தொடர்பாடல் ஒன்றை தேர்தல் ஆணைக்குழு உட்பட நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு மேற்கொள்வதை எதிர்மனுதாரர் தவிர்க்கும் இடைக்கால இன்ஜெக்சன் தடைக் கட்டளையை வழங்குமாறும்,

(ஒ) இடைக்கால இன்ஜெக்சன் தடைக் கட்டளைக்கான முறைப்பாட்டாளரின் வேண்டுகோளை செவிமடுத்து தீர்மானிக்கும் வரை அமுலாகுமாறு, எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை வகிப்பதை இடை நிறுத்தியுள்ளது வரை மற்றும்/அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பதிலிருந்து அகற்றப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளராக செயற்படுதல் மற்றும்/அல்லது அவ்வாறு செயற்படுவதாக பிரதிநிதித்துவப் படுத்தலை (act and/or represent) எதிர்மனுதாரர் தவிர்க்கும் தடை உத்தரவு கட்டளையை வழங்குமாறும்,

(ஓ) இடைக்கால இன்ஜெக்சன் தடையுத்தரவு கட்டளைக்காக முறைப்பாட்டாளரின் வேண்டுதலை செவிமடுத்து தீர்மானிக்கப்படும் வரை அமுலாகுமாறு எதிர்மனுதாரர் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவி வகிப்பது இடை நிறுத்தப்பட்டுள்ளது வரை மற்றும்/ அல்லது ஒழுக்காற்று நடவடிக்கையின் பின்னர் மேற்படி பதவியை வகிப்பது நீக்கப்படின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் செயற்படுதலுக்கு ஏதேனும் இடையூறு அல்லது தடை ஏற்படுத்தல் மற்றும்/அல்லது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராக இரண்டாம் முறைப்பாட்டாளர் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுக்கு இடையூறு அல்லது தடையாகுமாறு ஏதேனும் பிரதிநிதித்துவப்படுத்தல் அல்லது தொடர்பாடலை தேர்தல் ஆணைக்குழு உட்பட நிறுவனம் மற்றும் தனிநபர்களுக்கு மேற்கொள்வதை எதிர்மனுதாரர் தவிர்க்கும் தடையுத்தரவு கட்டளையொன்றை வழங்குமாறும்,

(ஔ) கூட்டிணைக்கப்படாத நிறுவனமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக மற்றும் மேற்படி கட்சி சார்பாக 1ம் முறைப்பாட்டாளருக்கு சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 16ம் பிரிவின் கீழ் கட்டளை பிறப்பிக்குமாறும்,

(ஐ) வழக்கு கட்டணங்களை வழங்குமாறும் மற்றும்,

(ஃ) கௌரவ நீதிமன்றம் கருதுகின்ற வேறு மற்றும் மேலதிக சலுகைகளை வழங்குமாறும் ஆகும்.

மேலே பெயர் குறிப்பிடப்படும் முறைப்பாட்டாளர்களால் மேற்படி வழக்கு தொடுக்கப்பட்டிருப்பது கூட்டிணைக்கப்படாத நிறுவனமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக மற்றும் மேற்படி கட்சி சார்பாக ஆவதால் அது பற்றி ஆர்வம் உள்ள சகலரினதும் அறிவூட்டலுக்காக மேற்படி வழக்கு பற்றிய கூட்டிணைக்கப்படாத நிறுவனமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக மற்றும் மேற்படி கட்சி சார்பாக அதன் அங்கத்தவர்களின் அறிவூட்டலுக்காக இவ்வழக்கு பற்றிய பகிரங்க அறிவித்தலைப் பிரசுரிப்பதற்கு கௌரவ நீதிமன்றம் கட்டளை பிறப்பித்துள்ளது.

மேற்படி கட்டளையின் பிரகாரம் கூட்டிணைக்கப்படாத நிறுவனமான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக மற்றும் மேற்படி கட்சி சார்பாக மற்றும் மேற்படி அங்கத்தவர்களின் அறிவூட்டலுக்காக இவ் அறிவித்தல் இவ்வாறு பிரசுரிக்கப்படுகிறது. அடுத்த வழக்கு தினம் 2024 ஜனவரி 22ம் திகதியென மேலும் இத்தால் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்,**
**பதிவாளர்/பிரதி பிஸ்கால்,**
**கொழும்பு மாவட்ட நீதிமன்றம், கொழும்பு -12.**
2024 ஜனவரி 18ம் திகதியன்று

# சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்

2023ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்திற்காகப் பின்வரும் சம்பளச் சபைகளின் முடிவுகளினால் மேவப்பட்ட வேலையாளர்களுக்கு ஏற்புடைத்தான சம்பள விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**எச்.கே.கே.ஏ. ஜயசுந்தர**
**தொழில் ஆணையாளர் நாயகம்**

**தொழில் திணைக்களம்**
**கொழும்பு -05.**
2024ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 18ஆம் திகதி

| | |
|---|---|
| கொக்கோ, ஏலக்காய், மிளகு என்பன வளர்த்தல் மற்றும் உற்பத்தித் தொழில் | வேலையாள் ஒரு நாளைக்கு ரூபா 1866.28 |

❖ இதற்கு மேலதிகமாக 2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க வரவு செலவு திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் மற்றும் 2016ஆம் ஆண்டின் 04ஆம் இலக்க வரவு செலவுத்திட்ட நிவாரணப்படிச் சட்டத்தின் நியதிகளின் படியும் வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவை ஒவ்வொரு தொழில் தருநரும் குறித்த தொழிலாளர்களுக்கு வழங்க வேண்டும்.

## இலங்கை வங்கி

### ஏல விற்பனை அறிவித்தல்

1968ஆம் ஆண்டு 34ஆம் இலக்கச்சட்டத்தாலும் 1974ஆம் ஆண்டு 10ஆம் இலக்க அதிகாரச்சட்டத்தாலும் திருத்தப்பட்டவாறு இலங்கை வங்கி கட்டளைச்சட்டம் 22ஆம் பிரிவின் (397ஆம் அத்தியாயம்) கீழ் வெளியிடப்படும் விற்பனை அறிவித்தல்.

1. கடன் தொடர்பு இல. 80941242

நிக்கவெரட்டிய, மஹ எல வீதி, ரங்கிரி அரிசி ஆலை எனும் முகவரியைச் சேர்ந்த திரு.தென்னகோன் முதியான்சேலாகே சுகதபால தென்னகோன் (ரங்கிரி அரிசி ஆலை பங்காளர்கள்) ஈடுவைத்த ஆதனத்தின் விற்பனை.

இலங்கை வங்கி கட்டளைச் சட்டம் 19ம் பிரிவின் கீழ் இலங்கை வங்கி பணிப்பாளர்கள் சபை எடுத்த தீர்மானத்துக்கமைய இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் 02.11.2018ஆம் திகதி 2096ஆம் இலக்க வர்த்தமானியிலும் 17.10.2018ஆம் திகதி தினமின, டெய்லி நியூஸ் மற்றும் தினகரன் ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கமைய நிலுவை முதலையும் விற்பனைத் திகதி வரை வருமதியாக உள்ள வட்டியையும் மேற்குறிப்பிட்ட கட்டளைச்சட்டத்தின் பிரிவு 26ன் கீழ் அறவிட வேண்டிய செலவு மற்றும் பணங்களையும் அறவிடும் பொருட்டு இங்கு கீழ் அட்டவணையில் விபரித்த சொத்தையும் நிலமனையையும் இல.24, டொறிங்டன் வீதி, கண்டி எனும் முகவரியைச் சேர்ந்த திருவாளர்கள் சொக்மன் & சமரவிக்ரம ஏலநிறுவனத்தின் ஏலதாரர் 2024.02.13ஆம் திகதி மு.ப.11.00 மணிக்கு அதே இடத்தில்வைத்து பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்வாரென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

**மேற்குறிப்பிட்ட அட்டவணை**

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் வன்னி ஹத்பற்று மாகுல் ஓதொட்ட கோரளையில் நிக்கவெரட்டிய பிரதேச சபை எல்லைகளுள் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராமத்தில் அமைந்த "கோன்கஹமுலஹேன" என அழைக்கப்படும் காணியின் உத்தரவு பெற்ற நில அளவையாளர் B.G.பந்துதிலக்க தயாரித்த 25.07.2016 திகதியிட்ட வரைபடம் இல. 6378/2016 ல் துண்டு 1 விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் T.M.P.ரண்ஹாமி மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும், கிழக்கில் நிக்கவெரட்டிய ஆஸ்பத்திரி காணியும் வரைபடம் இல.24/86ல் துண்டு 1 என விபரித்த அதே காணியின் மீதிப்பாகமும், தெற்கில் ஓடைக்கு ஒதுக்கப்பட்டிருப்பதும் டிங்கிரி அம்மா உரிமைகோரும் காணியும், மேற்கில் பண்டார மெனிகே உரிமைகோரும் காணியும் டிங்கிரி அம்மா உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0.பே6) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள பயிர்கள் மற்றும் சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் வன்னி ஹத்பற்று மாகுல் ஓதொட்ட கோரளை நிக்கவெரட்டிய பிரதேச சபை எல்லைகளுள் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராமத்தில் அமைந்த "கோன்கஹமுலஹேன" என அழைக்கப்படும் காணி உத்தரவு பெற்ற நில அளவையாளர் S.M.திசாநாயக்க தயாரித்த 07.11.1998 திகதியிட்ட வரைபடம் இல.6830ல் துண்டு 1 என விபரித்த பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் T.M.P. ரண்ஹாமி மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியும், கிழக்கில் நிக்கவெரட்டிய ஆஸ்பத்திரி காணியும் வரைபடம் இல. 24/86ல் துண்டு 1 என விபரித்த அதே காணியின் மீதிப்பாகமும், தெற்கில் வேல்லயும், மேற்கில் பண்டார மெனிகே உரிமைகோரும் காணியும் டிங்கிரி அம்மா உரிமைகோரும் காணியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0. பே6) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும்.

மேற்குறிப்பிட்ட காணி கீழே விபரித்த காணியின் ஒரு மீளளவை ஆகும்.

வடமேல் மாகாணம் குருநாகல் மாவட்டம் வன்னி ஹத்பற்று மாகுல் ஓதொட்ட கோரளையில் நிக்கவெரட்டிய பிரதேச சபை எல்லைகளுள் நிக்கவெரட்டிய பிரதேச செயலாளர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராம உத்தியோகத்தர் பிரிவில் நிக்கவெரட்டிய கிராமத்தில் அமைந்த "கோன்கஹமுலஹேன" என அழைக்கப்படும் காணியின் பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் T.M.P. ரண்ஹாமி மற்றும் ஏனையோர் உரிமைகோரும் காணியின் வேலியும், கிழக்கில் நிக்கவெரட்டிய ஆஸ்பத்திரி காணியின் வேலியும் அதே காணியின் மீதிப்பாகமும், தெற்கில் வேல்லயும், மேற்கில் R.M.P. கிரிபண்டா மற்றும் A.M. புஞ்சி பண்டா உரிமைகோரும் காணியின் வேலியும் எல்லைகளாகக் கொண்டு இரண்டு ஏக்கர் ஆறு பேர்ச்சுகள் (ஏ2.றூ0.பே விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது நிக்கவெரட்டிய காணிப்பதிவகத்தில் A80/254ல் பதிவுசெய்து A80/275 க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

"ஏலவிலை கூறுபவர்கள் மேற்குறித்த ஆதனங்கள் தொடர்பான உரித்துறுதியையும் ஏனைய தொடர்புபட்ட ஆவணங்களையும் நிகவெரட்டிய கிளை முகாமையாளரைத் தொடர்புகொள்வதன் மூலம் பார்வையிட முடியும். தொலைபேசி இலக்கம் - 0372260280.

மேற்குறிப்பிட்ட அட்டவணை வரிசை முறையில் உள்ளது.

பணம் செலுத்தும் முறை : ஏலத்தில் வெற்றிபெறுபவர் ஏலம்கூறி முடிந்ததும் பின்வரும் தொகையைப் பணமாகச் செலுத்த வேண்டும்.

1. கொள்வனவு விலையிலிருந்து 10% (பத்து வீதம்)
2. பெறுமதிசேர் வரிக் (VAT) கட்டணங்கள் (பொருத்தமாயின்)
3. விற்பனை வரியாக உள்ளூர் அதிகார சபைக்கு 1% (ஒரு வீதம்)
4. ஏலதாரருக்கான தரகுப் பணமாக 2.5% (இரண்டு தசம் ஐந்து வீதம்)
5. விற்பனைச் செலவு உட்பட இதர செலவுகள் ஏதும் இருப்பின்
6. பிற கட்டணங்களும் அறவீடுகளும்

ஏலம் நடைபெற்றதிலிருந்து 30 நாட்களுக்குள் கொள்வனவு விலையிலிருந்து இன்னொரு 10% (பத்து வீதத்தை) செலுத்த வேண்டும் என்பதோடு விற்பனைத் திகதியிலிருந்து 3 மாதங்களுக்குள் கொள்வனவு விலையின் மீதி 80% (எண்பது வீதத்தை) செலுத்த வேண்டும். மேலும், விற்பனைச் சான்றிதழை அத்தாட்சிப்படுத்துவதற்கான முத்திரைத் தீர்வை மற்றும் நொத்தாரிசுக் கட்டணம் என்பவற்றையும் கொள்வனவாளர் செலுத்த வேண்டும்.

மேலே கூறப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு கொள்வனவாளர் இணங்காதவிடத்து ஏல நாளன்று செலுத்தப்பட்ட அனைத்துப் பணங்களையும் செல்லுபடியற்றதாக அறிவித்து ஆதனத்தை மீண்டும் விற்பனை செய்யும் உரிமை வங்கிக்கு உண்டு.

இலங்கை வங்கி பணிப்பாளர் சபை கட்டளைப்படி,

**திரு.வீ.ஏ .ஆர் .பீ. விதாணாரச்சி**
**முகாமையாளர்**

**இலங்கை வங்கி**
**நிக்கவெரட்டிய**

1975 BOC CALL CENTRE www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங். இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்
தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.
இலங்கை வங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## களனி பல்கலைக்கழகம் - இலங்கை

### பதவி வெற்றிடங்கள்

2022/2023 ஆம் கல்வி ஆண்டிற்காக பின்வரும் பதவிகளுக்காக 2024.02.09 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

- தற்காலிக விரிவுரையாளர்
- தற்காலிக செய்விளக்கம் காட்டுனர் (Demonstrator)

## விஞ்ஞான கற்கைநெறிப் பீடம்

கைத்தொழில் முகாமைத்துவ திணைக்களம்

**விண்ணப்பிக்கும் முறை:**

விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்லைனூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**
**22.01.2024**

## தென் மாகாண சபை

### தென் மாகாண விவசாய அமைச்சு

# கேள்விக்கான அழைப்பு

### பாதுகாப்புச் சேவையைப் பெற்றுக் கொள்ளல் 2024.03.01 முதல் 2025.02.28

தென் மாகாண விவசாய அமைச்சு... பெறுகைக் குழுவினால் விவசாயத் திணைக்களம் மற்றும் அதன் கீழ் உள்ள கீழ்க்காணும் உப அலுவலகம், பண்ணை, விற்பனைசாலைகளுக்கு பகல்/இரவு பாதுகாப்புச் சேவையை பெற்றுக் கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்காக அமைச்சு பெறுகைக் குழுவினால் தகைமையுள்ள அரசில் பதிவு செய்துள்ள பாதுகாப்புச் சேவை வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| தொடர் இல. | நிறுவனம் | தொடர் இல. | நிறுவனம் |
|---|---|---|---|
| 01 | பிரதி விவசாய பணிப்பாளர் பணிமனை - காலி | 10 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (மாத்தறை மத்தி) கிரிந்த, புஹுல்வெல்ல |
| 02 | அரச பண்ணை - லபுதுவ விற்பனை சாலைக்காக | 11 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (மாத்தறை வடக்கு வலயம்) அகுரஸ்ஸ |
| 03 | அரச பண்ணை - லபுதுவ விற்பனை சாலைக்காக (ஞாயிறு தினம் மட்டும்) | 12 | மண் ஆய்வு கூடம் கிரிமெட்டி முல்ல, தெலரிஜ்ஜவில |
| 04 | அரச பண்ணை - லபுதுவ அலுவலகம் அருகில் | 13 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (வலயம் - 01) ஹம்பாந்தோட்டை |
| 05 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (காலி கிழக்கு வலயம்) லபுதுவ | 14 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (வலயம் - 01) ஹம்பாந்தோட்டை |
| 06 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (காலி மேற்கு வலயம்) | 15 | ருஹுனு ரஸார விற்பனைசாலை ஹம்பாந்தோட்டை |
| 07 | பிரதி விவசாயப் பணிப்பாளர் பணிமனை - மாத்தறை | 16 | ரிதியகம பண்ணை வளாகம் |
| 08 | மாவட்ட விவசாயப்பயிற்சி நிலையம் - தெலரிஜ்ஜவில | 17 | கச்சிகல்ஆர ஏற்றுமதி வாழை தயாரிப்பு நிலையம், அக்குணகொல பெலெஸ்ஸ |
| 09 | உதவி விவசாய பணிப்பாளர் பணிமனை (மாத்தறை தெற்கு) கிரிடிமெட்டிமுல்ல தெலிஜ்ஜவில | | |

அதன் பிரகாரம் கீழ்க்காணும் ஒழுங்குகளுக்கு உட்பட்டு உங்களது விலைமனுக்களை சமர்ப்பித்தல் வேண்டும்.

1. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு 2024.01.22 மு.ப. 9.00 - பி.ப. 4.00 வரை காலி லபுதுவ, தக்ஷினபாய நான்காம் மாடியில் அமைந்துள்ள தென் மாகாண விவசாய அமைச்சிற்கு வருகைதந்து கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
2. அவ்வாறே 2024.01.22 முதல் 2024.02.12 வரை மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரையான காலத்திற்குள் மீளளிக்கப்படாத கேள்வி ஆவணக் கட்டணமாக ரூ. 6000.00 தொகையை அமைச்சு காசாளரிடம் காசாகச் செலுத்தி அப்பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.
3. கேள்வி பாதுகாப்புக் கட்டணம் (Bid Security) ரூபா 155,000/- ஆகும். அத் தொகையை அமைச்சு காசாளரிடம் செலுத்தி அல்லது 2024.02.13 முதல் 2024.05.13 வரை செல்லுபடியாகுமாறு செயலாளர் விவசாய அமைச்சு, தென் மாகாணம் பெயருக்கு விநியோகிக்கப்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கி பிணை முறியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும். கேள்விப் பிணை முறியை காசாக செலுத்துவதாயின் பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியொன்றை கேள்வியுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.
4. கேள்விகள் மூலப்பிரதி மற்றும் நகல்பிரதியெனத் தயாரிக்கப்பட்டு வேறு வேறாக உறைகளில் இட்டு இடது பக்க மேல் மூலையில் 'தென் மாகாண விவசாயத் திணைக்களத்திற்கு பாதுகாப்பு சேவையை பெற்றுக் கொள்வதற்கான விலைமனுக்கள்' என்று குறிப்பிட்டு மீண்டும் அவ் உறைகள் இரண்டையும் ஒரு உறையில் இட்டு பொறியிட்டு 2024.02.13 பி.ப. 2.00 இற்கு முன்பு கீழ்க்காணும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது லபுதுவ தக்ஷி னபாய மாகாண விவசாய.... அமைச்சின் கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பிக்கலாம்.

   **முகவரி:** **செயலாளர்**
   **தென் மாகாண விவசாய... அமைச்சு,**
   **நான்காம் மாடி, தக்ஷினபாய**
   **லபுதுவ, காலி**

5. கேள்வி ஆவணங்கள் ஏற்கப்பட்டு முடிவடைந்தவுடன் கேள்விகள் திறத்தல் தென் மாகாண விவசாய.... அமைச்சில் இடம் பெறுவதுடன் கேள்விகளை சமர்ப்பித்துள்ள கேள்விதாரர்களுக்கு அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்டுள்ள பிரதிநிதியொருவருக்கு அவ் வேளையில் சமுகமளிக்கலாம்.
6. இது பற்றிய மேலதிக விபரங்களை அமைச்சின் தொலைபேசி இல. 091-4943088ஐ அல்லது திணைக்கள தொ. பே. இலக்கம் 091-3097952ஐ அழைத்துப் பெற்றுக் கொள்ளலாம்.
7. அமைச்சு பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர்,**
**தென் மாகாண விவசாய .... அமைச்சு,**
**நான்காம் மாடி, தக்ஷினபாய,**
**லபுதுவ, காலி.**

Daily News Classifieds, the Housewives' companion

## றினோன் ஜனாதிபதி கிண்ணம்:

# சாஹிரா - ஹமீட் அல் ஹுஸைனி மீண்டும் இறுதிப் போட்டிக்கு தகுதி

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையிலான 18 வயதுக்கு உட்பட்ட றினோன் ஜனாதிபதி கிண்ண கால் பந்து சம்பியன்சிப் தொடரின் இறுதிப் போட்டிக்கு தொடர்ச்சியாக இரண்டாவது முறையாகவும் கொழும்பு சாஹிரா மற்றும் ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரிகள் தகுதி பெற்றுள்ளன.



சுகததாச அரங்கில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற முதலாவது அரையிறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியை ஹமீட் அல் ஹுஸைனி 5–2 என்ற கோல் கணக்கில் இலகுவாக வீழ்த்தியது.

இதன் முதல் பாதி ஆட்டத்தில் இரு அணிகளும் சரிசமமாக மோதிக் கொண்ட நிலையில் 1–1 என்ற கோல் கணக்கில் சமநிலை பெற்றன. எனினும் இரண்டாவது மாதியில் ஹமீட் அல் ஹுஸைனி வீரர்கள் முழு ஆதிக்கம் செலுத்தி அடுத்தடுத்து கோல்களை புகுத்தினர். இதனால் முழு நேர முடிவின் போது ஹமீட் அல் ஹுஸைனி 5–2 என்ற கோல் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது. அர்ஹாம் 16 மற்றும் 53 ஆவது நிமிடங்களில் இரட்டை கோல் புகுத்தியமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை கொழும்பு, புனித ஜோசப் கல்லூரிக்கும், கொழும்பு, சாஹிரா கல்லூரிக்கும் இடையிலான இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் இரு அணிகளும் கடுமையாகப் போட்டியிட்டன. எனினும் 18 ஆவது நிமிடத்தில் கோல் கம்பத்திற்கு அருகில் கிடைத்த பிரீ கிக் வாய்ப்பை பயன்படுத்தி அஸீஸ் பெற்ற அபார கோல் சாஹிரா கல்லூரியின் வெற்றி கோலாக மாறியது.

எனினும் சாஹிரா வீரர்கள் அடிக்கடி எதிரணி கோல் கம்பத்தை ஆதிக்கம் செலுத்தியதோடு பல கோல் வாய்ப்புகளையும் தவறவிட்டனர்.

இதன்படி பாடசாலை கால்பந்து சங்கத்தினால் நடத்தப்படும் றினோன் ஜனாதிபதி கிண்ண கால்பந்து சம்பியன்சிப் தொடரின் இறுதிப் போட்டியில் மீண்டும் சாஹிரா மற்றும் ஹமீட் அல் ஹுஸைனி கல்லூரிகள் மோதவுள்ளன. இதன் இறுதிப் போட்டி பெப்ரவரி கடைசியில் நடத்த ஏற்பாடாகியுள்ளது.

# விமானப்படை தளபதி கிண்ண கொல்ப் போட்டி



இலங்கை விமானப்படை மற்றும் ஈகிள்ஸ் கொல்ப் லிங்க்ஸ் இணைந்து நடத்திய விமானப்படை தளபதிக் கிண்ண கொல்ப் போட்டியின் ஆடவர் பிரிவில் எயார் வைஸ் மார்ஷல் உதுல விஜேசிங்கவும் மகளிர் பிரிவில் அனுஷா சேனாதீரவும் வெற்றியீட்டியதோடு முப்படை சேவையாளர்களுக்கான சவால் கிண்ணத்தை விமானப்படையின் விங் கமாண்டர் அசந்த குணரத்ன கைப்பற்றினார்.

திருகோணமலை சீனக்குடா ஈகிள்ஸ் கொல்ப் லிங்க்ஸ் மைதானத்தில் நேற்று முன்தினம் (20) நடைபெற்ற இந்தப் போட்டி எயார் மார்ஷல் உதேனி ராஜபக்ஷ பங்கேற்புடன் டயலொக் எண்டர்பிரைசஸ் நிறுவனத்தின் பிரதான அனுசாரணையுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு வீர, வீராங்கனைகள் பங்கேற்றனர்.

# பாகிஸ்தான் ஆறுதல் வெற்றி



நியூசிலாந்துக்கு எதிரான முதல் நான்கு டி20 சர்வதேச போட்டிகளிலும் தோற்று தொடரை இழந்த பாகிஸ்தான் அணி நேற்று (21) நடைபெற்ற ஐந்தாவது மற்றும் கடைசி போட்டியில் 42 ஓட்டங்களால் ஆறுதல் வெற்றியை பெற்றது.

கிறிஸ்ட்சேர்ச்சில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி ஓட்டம் பெறுவதற்கு முன்னரே ஆரம்ப வீரர் ஹசீபுல்லா கானின் விக்கெட்டை பறிகொடுத்தது.

எனினும் மொஹமட் ரிஸ்வான் (38) மற்றும் பக்கர் சமானின் (33) ஓட்டங்களின் உதவியோடு பாகிஸ்தான் அணி 20 ஓவர்களுக்கும் 8 விக்கெட்டுகளை இழந்து 134 ஓட்டங்களை பெற்றது. இந்நிலையில் பதிலெடுத்தாட வந்த நியூசிலாந்து அணி ஆரம்பம் தொடக்கம் மளமளவென்று விக்கெட்டுகளை பறிகொடுத்தது. இதனால் அந்த அணி 17.2 ஓவர்களில் 92 ஓட்டங்களுக்கே சுருண்டது. இதன்போது இப்திகார் அஹமட் 3 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

## சர்வதேச செய்திகள்

# பைடனின் 'பலஸ்தீன தீர்வு' யோசனையை பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் நிராகரிப்பு



## காசாவில் உயிரிழப்பு 25,000ஐ தாண்டியது



காசாவில் தொடரும் இஸ்ரேலின் சரமாரித் தாக்குதலில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்களின் எண்ணிக்கை 25,000ஐ தாண்டியுள்ள நிலையில், பலஸ்தீன நாடு ஒன்றை உருவாக்கும் யோசனையை இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மீண்டும் ஒருமுறை நிராகரித்துள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுடனான தொலைபேசி உரையாடலை அடுத்தே நெதன்யாகு இதனை வலியுறுத்தியுள்ளார். எனினும் நெதன்யாகு இந்த யோசனையை ஏற்கக் கூடும் என்று அமெரிக்க தலைவர் குறிப்பிட்டிருந்தார்.

இந்நிலையில் நெதன்யாகுவின் கருத்து அமெரிக்காவுடனான இஸ்ரேலின் பிளவை வெளிப்படையாக காண்பிப்பதாக உள்ளது.

'இரு நாட்டு தீர்வு' என்று கருதப்படும் இஸ்ரேலுக்கு அருகாமையில் பலஸ்தீன நாடு ஒன்று அமைவது நீண்ட கால ஸ்திரத்தன்மைக்கு தீர்க்கமானதாக உள்ளது என்று அமெரிக்கா நம்புகிறது. எனினும் இந்த விடயத்தில் இஸ்ரேல் அமெரிக்காவுடன் நேரடியாக முரண்பட்டுள்ளது.

கிட்டத்தட்ட ஒரு மாதத்தின் பின்னர் நெதன்யாகு மற்றும் பைடன் இடையே தொலைபேசி உரையாடல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இதனையடும் பேசிய பைடன், நெதன்யாகு பதவியில் இருக்கும் நிலையில் இரு நாட்டு தீர்வுக்கு தொடர்ந்து வாய்ப்பு உள்ளது என்றார்.

"பல வகையிலான இரு நாட்டு தீர்வுகள் உள்ளன. தமக்கான சொந்த இராணுவம் கூட இல்லாத பல நாடுகளும் ஐ.நா அங்கத்துவத்தை பெற்றுள்ளன" என்று பைடன் குறிப்பிட்டிருந்தார்.

எனினும் கடந்த சனிக்கிழமை பேசிய நெதன்யாகு தனது முந்தைய நிலைப்பாட்டையே மீண்டும் வலியுறுத்தினார். தனது அரசியல் வாழ்வில் இந்த இரு நாட்டுத் தீர்வை எதிர்த்து வரும் நெதன்யாகு கடந்த வாரமும் அதனை வலியுறுத்தி இருந்தார்.

அவரது அலுவலகம் வெளியிட்ட அறிவிப்பில் கூறியதாவது, "ஜனாதிபதி பைடனுடனான அவரது உரையாடலில், ஹமாஸ் அழிக்கப்பட்டு, இஸ்ரேலுக்கு காசா தொடர்ந்து அச்சுறுத்தலாக இல்லை என்பதை உறுதி செய்வதற்கு காசாவின் பாதுகாப்பு கட்டுப்பாட்டை இஸ்ரேல் மீட்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை பிரதமர் நெதன்யாகு மீண்டும் வலியுறுத்தினார். அது பலஸ்தீன இறைமைக்கான கோரிக்கைக்கு முரணானது."

அதேபோன்று சனிக்கிழமை எக்ஸ் சமூகதளத்தில் நெதன்யாகு வெளியிட்ட பதிவிலும், "ஜோர்தான் (நதியின்) மேற்குப் பகுதியின் ஒட்டுமொத்த பாதுகாப்பையும் இஸ்ரேல் கைப்பற்ற வேண்டும்" என்று குறிப்பிட்டிருந்தார். நெதன்யாகு குறிப்பிட்டிருக்கும் இந்த பகுதியில் இஸ்ரேல் ஆக்கிரமிப்பு மேற்குக் கரையும் உள்ளடங்கும்.

இந்த கருத்து காசா பிரச்சினைக்கு தீர்வு காணக்கூடிய அமைதிப் பேச்சு வார்த்தை ஒன்றுக்கான முயற்சியை முழுமையாக இல்லாமல் செய்யும் ஒன்றாக கருதப்படுகிறது.

சர்வதேச மட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்டு வரும் நெதன்யாவுக்கு இஸ்ரேலுக்குள்ளும் எதிர்ப்புகள் வலுத்து வருகின்றன. குறிப்பாக காசாவில் ஹமாஸின் பிடியில் தொடர்ந்து சுமார் 130 பணயக்கைதிகள் சிக்கியுள்ள நிலையில் அவர்களை விடுவிப்பதற்காக இஸ்ரேலில் தொடர்ந்து ஆர்ப்பாட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி பலஸ்தீன போராளிகள் இஸ்ரேலில் நடத்திய தாக்குதலில் சுமார் 1300 பேர் கொல்லப்பட்டு சுமார் 250 பேர் பணயக்கைதிகளால் பிடிக்கப்பட்டனர். இந்நிலையில் பாதிக்கப்பட்டவர்களின் உறவினர்கள் உட்பட ஆயிரக்கணக்கானவர்கள் டெல் அவிவ் நகரில் கடந்த சனிக்கிழமை ஒன்று கூடி, பயணக்கைதிகளை விடுவிப்பதற்காக ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள நெதன்யாகு அரசை வலியுறுத்தினர். இதன்போது முன்கூட்டிய தேர்தல் ஒன்றை நடத்துவதற்கும் ஆர்ப்பாட்டக்காரர்கள் வலியுறுத்தினர்.

இந்நிலையில் தெற்கு காசாவில் குறிப்பாக அங்குள்ள பிரதான நகரான கான் யூனிஸில் இஸ்ரேலிய படை உக்கிர தாக்குதல்களை நடத்தி வருகின்றன. நேற்று அந்த நகரின் தெற்கு பகுதியில் பலஸ்தீன போராளிகள் மற்றும் இஸ்ரேலிய துருப்புகள் இடையே கடும் மோதல் வெடித்ததாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நாசர் மருத்துவமனையை மையப்படுத்தி இந்த மோதல் தீவிரம் அடைந்துள்ளது. அங்கு இஸ்ரேல் குண்டுத் தாக்குதலும் தீவிரம் அடைந்திருந்தது.

உயர்ந்த கட்டடங்கள் மீது ஸ்னைப்பர் துப்பாக்கிதாரிகள் நிலைநிறுத்தப்பட்டிருப்பதோடு வீதியில் செல்லும் மக்கள் மீது சூடு நடத்தி வருகின்றனர். குறிப்பாக மருத்துவமனையில் இருப்போர் வெளியே செல்ல முடியாமல் சிக்கியுள்ளனர். மத்திய மற்றும் வடக்கு காசாவிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்தன.

தெற்கு காசாவில் இடம்பெற்ற மோதலில் 23 வயதான இஸ்ரேலிய வீரர் ஒருவர் கொல்லப்பட்டதை இஸ்ரேல் இராணுவம் உறுதி செய்துள்ளது.

இதன்படி காசாவில் இஸ்ரேல் தரைவழி தாக்குதலை ஆரம்பித்தது தொடக்கம் கொல்லப்பட்ட இஸ்ரேலிய துருப்புகளின் எண்ணிக்கை 195 ஆக உயர்ந்துள்ளது.

மறுபுறம் கடந்த 24 மணி நேரத்தில் இஸ்ரேலிய சரமாரி தாக்குதல்களில் காசாவில் மேலும் 178 பலஸ்தீனர்கள் கொல்லப்பட்டு 293 பேர் காயமடைந்திருப்பதாக காசா சுகாதார அமைச்சு நேற்று கூறியது. கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி தொடக்கம் காசாவில் இஸ்ரேல் இடைவிடாது நடத்தும் தாக்குதல்களில் கொல்லப்பட்டவர்கள் எண்ணிக்கை 25,105 ஆக அதிகரித்திருப்பதோடு மேலும் 62,681 பேர் காயமடைந்துள்ளனர்.

# ஏவுகணை தாக்குதல்களால் மத்திய கிழக்கில் போர் பதற்றம் அதிகரிப்பு



சிரியா, லெபனான், ஈராக் மற்றும் யெமனில் இடம்பெற்ற ஏவுகணை தாக்குதல்கள் காசா போர் பிராந்தியம் எங்கும் பரவும் அச்சுறுத்தலை அதிகரித்திருப்பதோடு இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவுக்கு எதிரான ஈரான் மற்றும் அதன் கூட்டணிகளின் மோதல் தீவிரம் அடைந்துள்ளது.

சிரிய தலைநகர் டமஸ்கஸில் உள்ள வீடு ஒன்றின் மீது சனிக்கிழமை (20) இடம்பெற்ற ஏவுகணை தாக்குதல் ஒன்றில் ஐந்து புரட்சிக் காவல் படையினர் கொல்லப்பட்டதாக ஈரான் கூறியுள்ளது. இந்தத் தாக்குதலுக்கு இஸ்ரேல் மீது குற்றம்சாட்டப்படுவதோடு லெபனானில் இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் ஈரான் ஆதரவு ஹிஸ்புல்லா உறுப்பினர் ஒருவர் கொல்லப்பட்டதாக லெபனான் தரப்பினர் குறிப்பிட்டுள்ளனர்.

தொடர்ந்து ஈராக்கில் ஈரான் ஆதரவு ஆயுததாரிகள் அமெரிக்கப் படைகளை இலக்கு வைத்து ஏவுகணை மற்றும் ரொக்கட் தாக்குதல்களை நடத்தினர். இதன்போது அல் அஸாத் விமானத் தளம் தாக்கப்பட்டதாக அமெரிக்க மத்திய கட்டளையகம் கூறியது. இதில் சில அமெரிக்க வீரர்கள் புறவழி மூளைக் காயத்திற்கு உள்ளாகி இருப்பதோடு ஈராக்கிய வீரர் ஒருவரும் காயமடைந்ததாக அது கூறியது.

மறுபுறம் செங்கடலில் செல்லும் கப்பல்களுக்கு அச்சுறுத்தலாக உள்ள ஈரான் ஆதரவு யெமன் ஹூத்தி கிளர்ச்சியாளர்களை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறியுள்ளது.

காசா மீது ஹமாஸ் போராளிகள் கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி நடத்திய தாக்குதலை அடுத்து ஆரம்பமான காசா போர் தொடர்ந்து நீடித்து வருகிறது.

பிராந்தியத்தில் ஈரான் ஆதரவு தரப்புகளில் லெபனானின் ஹிஸ்புல்லா, சிரியாவின் பஷர் அல் அஸாத் அரசு, ஈராக்கிய ஷியா போராட்டக் குழுக்கள் மற்றும் யெமனின் பெரும் பகுதியை தனது கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹூத்திக்களுடன் ஹமாஸும் இடம்பெற்றுள்ளது.

பிராந்தியத்தில் பதற்றம் அதிகரித்துள்ள சூழலில் சிரியாவில் இடம்பெற்ற தாக்குதலுக்கு இஸ்ரேல் தண்டிக்கப்படும் என்று ஈரான் ஜனாதிபதி இப்ராஹிம் ரெய்சி உறுதி அளித்துள்ளார். அதன் குற்றங்களுக்கு பதிலளிக்கப்படாது விடப்படாது என்று அவர் கூறியதாக ஈரான் அரச ஒளிபரப்பான ஐ.ஆர்.ஐ.பி. குறிப்பிட்டுள்ளது.

இஸ்ரேலிய தாக்குதல் என்று ஈரானிய அரச ஊடகம் குறிப்பிட்டிருக்கும் அந்தத் தாக்குதலில் மூன்று ஈரானின் புரட்சிக் காவல்படையினர் கொல்லப்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் இஸ்ரேல் எந்த பதிலும் அளிக்கவில்லை என்பதோடு இது போன்ற தாக்குதல் சம்பவங்கள் தொடர்பில் அது வழக்கமாக மௌனம் காக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக சிரியாவில் ஈரான் ஆதரவு இலக்குகள் மீது இஸ்ரேல் தொடர்ச்சியாக தாக்குதல்களை நடத்தி வரவதோடு சிரியா மற்றும் ஈராக்கில் உள்ள ஈரான் ஆதரவு குழுக்கள் அந்த நாடுகளில் இருக்கும் அமெரிக்க இலக்குகள் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றன.

பலஸ்தீனத்திற்கு ஆதரவாக செங்கடலில் செல்லும் இஸ்ரேலுடன் தொடர்புபட்ட கப்பல்களை இலக்கு வைத்து ஹூத்திக்கள் நடத்தும் தாக்குதல்கள் சர்வதேச வர்த்தகத்திலும் தாக்கத்தை செலுத்தியுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 ஜனவரி மாதம் 22ம் திகதி திங்கட்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.